2825

ஞானப்பிரகாசம்

அல்லது

மனோஹாரிணி

(ஒரு சிறந்த வேதாந்த நாடகம்)

"அறத்தாற்றினில் வாழ்க்கை யாற்றின்
புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவதெவன்."

"இல்லறமல்லது நல்லறமன்று"

894 . 8112

இது

சென்னை, ஸ்ரீ பிரஹ்ம வித்தியா விமர்சினீ ஸபையின்
ஸ்தாபகரும், தலைவருமாகிய, அருட்கவி,

பிரஹ்மஸ்ரீ ந. சுப்பிரமணிய அய்யர்

அவர்களால் இயற்றப்பட்டது.

உரிமையுள்ளது]

1939

[விலை 0-10-0

1328
2865

GNANA PRAKASAM
OR
MANOHARINI

A Philosophic Drama

(IN TAMIL)

OFFICE OF THE REGISTRAR OF B...
14 SEP 1939
MADRAS

2825

BY

N. SUBRAMANIA AIYER,

President, Founder
Sree Brahma Vidya Vimarsini Sabha,
Madras.

WITH A FOREWORD
BY
Rao Bahadur
P. SAMBANDA MUDALIAR, Avl., B.A., B.L.

PUBLISHED BY
THE AUTHOR

(All rights reserved.)

FOREWORD

The author of this drama entitled "Jnana Prakasam" or "Manoharini" has been kind enough to send me a copy of the book and it gave me great pleasure to go through the same. The author has dealt with an old subject in a very interesting way—in the form of a drama. The central theme of the drama is one in which all Hindus with a philosophic turn of mind would be interested; and the auothor's selection is one which would appeal to all Hindu householders. The drama is written in a good flowing style and the many quotations he has introduced show the author's erudition. I have much pleasure in introducing this book to all lovers of modern Tamil Literature—especially of the dramatic variety. Wishing the author and his work all success,

Camp: Banglore,
21st. June 1939.

P. SAMBANDAM.

நாடகபாத்திரங்களின் அபிதானவிளக்கம்

புருஷர்கள்

1. புருஷோத்தமன் — காசிமாநகரத்தரசன்.

2. சித்தசர்மா }
3. ஸுபுத்தி } — காசிராஜாவின் மந்திரிகள்.

4. ஞானப்பிரகாசன் — கதா நாயகன் - காசிராஜாவின் புதல்வன்.

5. குணசீலன் — ஞானப்பிரகாசனின்தோழன். ஸுபுத்தியின் மகன்; உப நாயகன்.

6. துறவி — குஹக்கடவுளின் மாயாமாநுட ரூபம்.

7. ஹாஸ்யாநந்தர் — காசிராஜாவின் தர்பாரிலுள்ள விகட கவி.

8. பகல் வேஷப்பரசுராமய்யர் — ஷை தர்பாரின் பகல் வேஷக்காரர்.

9. அப்துல் கறீம் —பரசுராமய்யரின் மாறுவேஷம்.

10. சீனுவய்யர் }
11. நாணுவய்யர் }
12. பிச்சுவய்யர் }
13. சுப்புவய்யர் } — காசி நகரத்து அக்ரஹார வீதி பிராஹ்மணர்கள்.

14. சுகுமார வர்மா — பாடலீபுரத்தரசர்.

15. விவேகசர்மா — பாடலீபுரத்தரசன் மந்திரி.

16. மாச்சன் }
17. கீச்சன் } — திருடர்கள்.

18. மஹாமஹோபாத்யாய சந்திரசேகர்ஜீ முதலியவர்கள் — பண்டிதர்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 SEP 1939
MADRAS

19. சிதாநந்தர் — காரியதரிசி.

20. பண்டிட் கொளரீ சங்கர்ஜீ — உபந்யாஸகர்.

21. தர்மசீலர் — பாடலீபுரத்தரச புரோகிதர்.

22. ஹரிஹர ஶாஸ்திரிகள் — காசிநகரத்தரச புரோஹிதர்.

23. ஹீராலால் } — பாடலீபுரத்தில் நந்தவனக் காவலாளிகள்.
24. ரகுநந்தனமிஸர் }

25. சேவகன் - தூதன்- கான்ஸ்டேபில்கள்.

26. பரதேசி — மனோஹாரிணியின் ஆண் வேடம்.

27. ஞானம்பிகன்-வாலிபன்— ஞானம்பிகையின் ஆண் வேடம்

ஸ்திரீகள்.

1. இந்துமுகி — காசிமாநகரத்தரசனது இராணி.

2. மோஹநாங்கி — பாடலீபுரத்தரசனதுஇராணி

3. மனோஹாரிணி — கதா நாயகி - பாடலீபுரத்தரசன் ஸுகுமாரவர்மாவின் புதல்வி.

4. மதுரவாணி — பாடலீபுரத்து ராணியின் தோழி.

9. விலாஸமுகி — பாடலீபுரத்து மந்திரி விவேக சர்மாவின் புதல்வி. கதா நாயகியின் ஸ்நேஹிதை. உப நாயகி.

6. ஞானம்பிகை — கதா நாயகியின் தோழி.

7. காவேரியம்மாள் — பகல்வேஷப் பரசுராமய்யரின் மனைவி.

நாடகம் நிகழுமிடங்கள்.

முதலாவதங்கம்	(1) காசிமாநகரத்திற்கு வெளியே ஒரு ஸரோவரம்.
	(2) காசி ராஜாவின் கொலு மண்டபம்.
	(3) காசி ராணியின் அந்தப்புரம்.
இரண்டாவதங்கம்	(1) பாடலீபுரத்தரசரது உத்தியான வனம்,
	(2) பாடலீபுரம் - மனோஹாரிணியின் அந்தப்புரம்.
மூன்றாவதங்கம்	(1) காசிநகரம் - அரண்மனையில் ஒரு தனி அறை.
	(2) காசிநகரம் அக்ரஹார வீதி: பகல் வேஷப் பரசுராமய்யர் வீட்டுத் தெரு.
	(3) காசிமாநகரம் - வாணீவிலாஸ மண்டபம்.
நான்காவதங்கம்	(1) பாடலீபுரம் - அரண்மனைத் தோட்டம்.
	(2) பாடலீபுரம் A மனோஹாரிணியின் படுக்கையறை.
	B வீதி.
	C காடு.
	(3) பாடலீபுரம் A கங்காநதிக்கரை.
	B ஸுகுமாரன் பூஜாக்கிரஹம்.
ஐந்தாவதங்கம்	(1) காசிமாநகரக் கொலுமண்டபம்.
	(2) பாடலீபுரம் - ஸரோவரம்.
	(3) பாடலீபுரம் - நந்தவனம்.

2825

முன்னுரை

ஞானப்பிரகாசம் அல்லது மனோஹாரிணி யென்னும் இப்புதிய உருவகம், ஐந்தங்கங்களோடு கூடி விளங்கி, "நாடக"மென்னும் வகுப்பைச் சார்வதொன்றாகும். இது சாந்தரஸமென்னும் ஸமநிலைச்சுவையைப் பிரதான ரஸமாய்ப் பெற்று அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குவித புருஷார்த்தங்களையும் நன்கு விளக்கும் ஓர் உபந்நியாஸத்தை யும் தன்னுள் ளடக்கிக்கொண்டு விளங்குகினறது.

இந்நாடகத்தின் பாத்திரங்களும் கதையும் கற்பனையின் பாற்படுவதால், இது ஒரு பொய்யுரையாம். இந்நாடகத்தின் முக்கிய உத்தேசம். "அறத்தாற்றினில் வாழ்க்கையாற்றிற் புறத்தாற்றிற்போ ஒய்ப்பெறுவதெவன்" என்னும் நாயனாரது திருவாக்கின்படி, இல்லறத்தின் மேன்மையை நன்கு விளக்கி ஸ்தாபிப்பதேயாகும். இதில் ஆடவர் மகளிர் என னும் இரு பாலரது உரிமைகளும் கடமைகளும் நன்கு சீர் தூக்கி விமர்சிக்கப்பட்டுள்ளன.

ஹாஸ்யாநந்தர் மூலமாய்ப் பல வேதாந்தக் கருத்துக் கள் விளக்கப்பட்டுள்ளதும், பகல் வேஷப்பரசுராமய்யரின் மூலமாய் ஸர்வ வேதாந்த சாஸ்திரங்களின் பரம ரஹஸ் யார்த்தமாகிய (ஜீவப்பிரஹ்ம) ஐக்கியம் விமர்சிக்கப்பட்டுள்ள தும் நுட்பமாய்க் கவனிக்கத்தக்க விஷயங்களாகும். இவை கள் தாம் இந்நாடகத்தில் நடுநாயகமாய் விளங்கும் சிறந்த விஷயங்களாம்.

கதாநாயகன்- ஞானப்பிரகாசனுக்கும், கதாநாயகி-மனோ ஹாரணிக்கும், உபநாயகன்—குணசீலனுக்கும், உபநாயகி- விலாஸமுகிக்கும் இந்நாடகத்தின் முடிவில் விவாஹம் நடை

பெறுவதால், இது "நற்பொருளிறுதி" யென்னும் கதாந்தத் தோடுகூடி விளங்குகின்றது.

இந்நாடகக் கதைக்குப் பிராணரூபமாயுள்ள பாத்திரம் துறவி வேடங்கொண்டு விளங்கும் ஸ்ரீ குஹக் கடவுளின் மாயாமாநுட வடிவமேயாகும்.

இத்தகைய சிறந்த விலக்கணங்களோடு கூடிய இந்நாடகம், சுமார் இருபது வருடங்களுக்கு முன், வேலூர் ஜில்லா, செய்யாறு தாலூக்கா புதுப்பாளையமென வழங்கும் பொதியர் பாளையத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஸ்ரீ ஸமரஸ ஸன்மார்க்க ஸங்கத்தின் ஒரு வருஷோற்சவத்தில் அச்சங்கத்தார் நடிப்பதற்காகவே அடியேனால் இயற்றப்பட்டதாகும். அது முதல் இதுகாறும் இது அச்சிடப்படாமலே யிருந்தது. இதை வாசித்துப்பார்த்த எனது நண்பர்களிற் பலர், இதை யச்சிட்டு வெளியாக்கின் உலகத்திற்குமிக்க நன்மையுண்டாகு மென்று கூறி அடியேனை யச்சிட்டு வெளிப்படுத்த வற்புறுத்தினார்கள. அவர்களின் விருப்பத்தின்படி இது அச்சிடப் பட்டு வெளியாகின்றது.

இந்நாடகமியற்றும் நன்முயற்சியின் கண் அடியேனை ஊக்கிக் கடைபோகுமட்டும் தோன்றாத்துணையாய் உதவி புரிந்து நின்ற எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள்—தஹராகாசமென்னும் சிதாகாச ஆநந்த தாண்டவமூர்த்தி—ஸத்குரு ஸ்ரீ குஹப்பெருமானைத் திரிகரணத்தூய்மையுடன் பணிகின்றேன்.

இங்ஙனம்:

ஸஜ்ஜன விதேயன்

ந. சுப்பிரமணிய ஐய்யர்.

12-7-1939

ஞானப் பிரகாசம்

அல்லது

மனோஹாரிணி

முதல் அங்கம்

முதற் காட்சி

இடம் :—காசிமா நகரத்திற்கு வெளியே ஒரு ஸரோவரம்

காலம் :—காலை (ஸூர்யோதயம்)

ஞானப்பிரகாசனும் குணசீலனும் ஸம்பாஷிக்கின்றுர்கள்

குணசீலன் :—நண்ப ! ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றி பேசிக் கொண்டே அதிக தூரம் வந்து விட்டோம். அருணோதயமும் ஆய்விட்டது. அதோ எதிரில் ஒரு தடாகம் தெரிகின்றது. நாம் அங்கே சென்று நமது காலைக் கடன்களை முடித்துக்கொண்டு திரும்புவோமா ?

ஞானப்பிரகாசன் :—(தனக்குள்) ஆ ! ஈதென்ன !! இவ்வளவு தூரம் வந்து விட்டோமே !! இந்த்ர தீர்த்தமல்லவா இது ? மனத்தைக் கவரும்படியான வார்த்தைகளா யிருந்தமையால் நடந்துவந்த சிரமமே தெரியவில்லை.

(பிரகாசமாய்) ஆருயிர்த் தோழ! அங்ஙனமே செய் வோம்.

குண :—மித்ர! இக்கமலங்களின் அழகினைக் கண்ணுற்றனை யா? இவை மித்திரன் உதயமானதும் தங்கள் அக மலர்ச்சியை முகமலர்ச்சியினால் அறிவிக்கின்றன பார்.

ஞான :—(பார்க்கின்றான்.) (தனக்குள்) "அடா ஞானப்பிரகாசா! உனக்கு இத்தனை வயதாகியும் உன் பெற்றோர்கள் உனது விவாக விஷயத்தைப்பற்றிக் கவனிக்காமல் இருக்கின்றார்களே. நீயும் உன் யௌவன காலத்தை இப்படியே விருதாவாக்கிக் கொள்ளுகின்றாயே" என்றல் லவா இம் மலர்கள் தங்கள் சிரங்களை யசைத்து நகைத்து என்னைப் பரிகசிக்கின்றன! (பிரகாசமாய்த் தன்னை மறந்து) ஓ மலர்களே! அதற்கு யானென்ன செய்வது? பெற் றோர்களிருக்க என்னிஷ்டப்படி யானெங்ஙனம் ஒரு பெண்ணை மணக்கலாம்? அப்படி யான் மணந்தாலும் உலகம் என்ன சொல்லும்? (திகைத்துத் தனக்குள்) ஆ! என்ன!! இப்படி பிதற்றுகின்றேனே லஜ்ஜையின்றி!!

[குளக்கரையில் ஓ ரால மரத்தடியில் அமர்ந்திருந்த ஒரு துறவி உற்றுக் கேட்கின்றார்.]

துறவி :—(தனக்குள்) என்ன வார்த்தைகள் அவை! "பெற் றோர்களிருக்க என்னிஷ்டப்படி யானெங்ஙனம் ஒரு பெண்ணை மணக்கலா"மா? ஐயோ பாவம். என்ன காம விகாரம். உலகத்திற்கும் பயந்தவனாயிருக்கின்றான். இப்படிப்பட்டவனுக்கன்றோ நான் போதித்து வைராக் கியத்தை யுண்டாக்கவேண்டும். சரி! இன்னும் என்ன பேசுகின்றானோ பார்ப்போம்.

குண :—ஞானப்பிரகாசா! என்ன ஏதேதோ உளறுகின் றனையே? உன்னை மறந்தே பேசுகின்றாயா யென்ன?

ஞான :—என்ன சொன்னாய்? குணசீலா! நானா உளறுகின் றேன்? இக் கமலங்கள் என்னைப் பரிகாசம் செய்ததற்கு நான் அவற்றிற்குப் பதிலுரைத்தேனே யன்றிச் சம் பந்தமில்லாமல் உளறவில்லையே.

துறவி :—சரி சரி! இவர்களின் பெயர்கள் "குணசீலன் ஞானப் பிரகாசன்" நன்றாய் இருக்கின்றன. அவனுக்கு ஞானப் பிரகாசனென்னும் பெயர் தகுதியே. அவன் மிக்க ஞாயத்துடனும் பேசுகின்றான். அவனிடத்திலுள்ள அறிவீனத்தை இரண்டொரு வார்த்தையிலேயே வென்றுவிடலாம். நானே அவர்களிடத்திற்குச் செல்லு கின்றேன் (எழுந்து வருகின்றார்).

ஞான :—நண்ப! இப்படிப்பார் ஒரு துறவி நம்மை நோக்கி வருகின்றார். அவரை வணங்குவோம் வா; நமக்கு க்ஷேமமுண்டாகும்.

[இருவரும் நமஸ்கரிக்கின்றனர்]

துறவி :—அப்பா குணசீலா! நீ குணசீலனாகுக. ஞானப்பிர காசா! நீ ஞானப்பிரகாசனே; எழுந்திருங்கள்.

ஞான :—(ஆச்சரியத்துடன்) ஹே ஸ்வாமின்! எங்களது பெயர்கள் தங்களுக்கு எப்படித் தெரிந்தன?

துறவி :—உங்கள் வார்த்தைகளாலேயே.

ஞான :—நாங்கள் எப்பொழுது சொன்னோம்?

துறவி :—"ஞானப்பிரகாசா! என்ன ஏதேதோ உளறுகின் றாயே" என்பதாலும், "குணசீலா! நானா உளறு கிறேன்" என்பதாலுமே அறிந்தேன்.

ஞான :—(மனத்தில் திகிலடைந்து) (தனக்குள்) இவர் என்மனோ பாவமும் அறிந்திருப்பார். (யோசித்துக்கொண்டு நிற்கின்ருன்)

துறவி :—அப்பா ஞானப்பிரகாசா! எந்தப் பெண்ணை மணக்கலாமென்று யோசிக்கின்றனை? என்னிடத்தில் ஒரு பெண் இருக்கின்ருள். அவளை மணந்து உன் மனக் கவலையைத் தீர்த்துக் கொள்ளலாம். ஆனல் நான் கேட்கும் சில கேள்விகளுக்குப் பதிலுரைக்க வேண்டும்.

ஞான :—ஸ்வாமீ! அங்ஙனம் ஒன்றையும் நான் நினைக்கவில்லை; ஆயினும் தாங்கள் வினவும் வினக்களை மாத்திரம் அறிய விரும்புகின்றேன்.

துறவி :—அப்படியா! என் வினக்களுக்கு விடை யளித்து என்னிடத்திலுள்ள பெண்ணை யடையவா விரும்புகின்றனை? ஆனல் சரி." "பெற்றோர்களிருக்க என் இஷ்டப்படி எங்ஙனம் ஒரு பெண்ணை மணக்கலாம்" என்றனையே! ஒரு பெண்ணை மணப்பதில் உனக்கு இஷ்டந்தானே.

ஞான —(திடுக்கிட்டுத் தனக்குள்) என்ன இது! என்னை மறந்து யான் பேசிய வார்த்தைகளை இவர் கேட்டுவிட்டார். இனி மறுத்தாலும் விடார். ஒப்புக்கொள்ளுகின்றேன். (பிரகாசமாய்) ஸ்வாமீ இஷ்டம்தான்.

துறவி :—எதை விரும்பிப் புருடர்கள் ஸ்திரீகளை யிச்சிக்கின்றனர்?

ஞான :—இன்பத்தை விரும்பியே.

துறவி :—சரி. நாம் ஒரு பொருளைத் தேடி அடைய விரும்பினேமாகில் அப்பொருள் இத்தகையதென்று அறிந்தாலன்றோ அதைத் தேட முடியும்?

ஞான :—ஆம்.

துறவி :—ஆயின் "பெண்" அல்லது "ஸ்திரீ" யென்பதற்குப் பொருள் யாது? காணப்படுகின்ற சரீரத்திலுள்ள தோலா? இரத்தமா? ஊனு? எலும்பா? நரம்பா? மற்றெது?

ஞான :—ஸ்திரீகளுக்குரிய இலக்ஷணத்தையேற்கும் சரீரமே ஸ்திரீயெனப்படுவள்.

துறவி :—அப்படியானல், நீ யொரு ஸ்திரீக்குரிய இலக்ஷணத்தை யுடைய ஒரு இறந்த சரீரத்தை மணக்க விரும்புகின்றனையா?

ஞான :—ஸ்வாமீ! என்ன கேள்வி இது!! இறந்த பெண்ணை பித்தனும் விரும்புவானு?

துறவி :அப்படியானல் சரீரத்திற்கு வேருய்ப் "பெண்" என்னும் பெயரை ஏற்கும் பொருள் யாது?

ஞான :—(யோசிக்கின்ருன்) ஒன்றும் தோன்ருதவனுப் குணசீலன் முகம் பார்க்கிருன்; குணசீலனும் பிரமித்து நிற்கிருன்.

துறவி :—அப்பா ஞானப்பிரகாசா! என்ன சொல்லப்போகிருய்?

ஞானப் :—ஸ்வாமீ! எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. தாங்களே தயைபுரிந்து சொல்லவேண்டும்.

துறவி :—ஆனல் கவனித்துக்கேள். ஜனங்கள் சாதாரணமாய்க்கூறும் பெண் அல்லது ஸ்திரீ யென்னும் பெயருக்குப் பொருளேயில்லை. எந்தச் சரீரத்தைப் பார்த்துப் பெண்ணென்று கூறுகின்ருர்களோ அந்தச் சரீரமென்னும் பெயருக்கே பொருளில்லை. கைகள், கால்கள்,

உடல், தலை முதலிய அவயவங்களே யன்றிச் சரீரமென்னும் பெயரை ஏற்பதற்குத் தக்க பொருள் யாதாயினும் இருக்கின்றதா? யோசித்துப் பார். இங்ஙனமே அந்த அவயவங்களுக்கும் பொருளில்லை. கவனித்து வருகிறீர்களா?

ஞான :—
குணசீ:— } கவனித்துக்கொண்டு வருகின்றோம் ஸ்வாமீ!

துறவி :—"பெண்" என்பதற்குப் பொருள் இன்னதென்று ஏற்படாமையால் அதை யடைவதெப்படி? தனக்கெனப் பொருளில்லாத வொன்றை யடைய இச்சையுண்டாகுமா அறிவுடையோனுக்கு?

ஞான :—உண்டாகாது. ஆயினும் "பெண்களை மணந்து இன்புறுகின்றோம்" என்னும் உலக வசனத்திற்குப் பொருள் யாது?

துறவி :—இருளைக் கண்டு வெளிச்சமென்று கூறுபவர் வார்த்தைக்குப் பொருள் யாது?

ஞான :—அது பிதற்றல். அதற்கென்ன பொருளுரைப்பது?

துறவி :—அதுதானு பிதற்றல்? முள்ளுங் கல்லும் முயன்று நடக்கும் உள்ளங் காலைப் பஞ்சென வுரைப்பதும், வெள்ளெலும் பாலே மேவிய கணுக்கால் துள்ளும் வராலெனச் சொல்லித் துதிப்பதும், தசையு மெலும்புந் தக்க புன் குரங்கை இசையுங் கதலித் தண்டென வியம்பலும், நெடுமுடல் தாங்கி நின்றிடு மிடையைத் துடிபிடி யென்று சொல்லித் துதிப்பதும், பிதற்றலாகாமல் வேறென்ன? இது மாத்திரமா, அங்கையைப் பார்த்துக் காந்தளென்றுரைப்பதும், வேர்வையும் அழுக்கும் மேவிய கழுத்தைப் பாரினிலினியகமுகெனப் பகர்

வதும், வெப்பு மூத்தையு மேவிய வாயைத் துப்பு முருக்கின் தூய்மல ரென்பதும், அன்னமுங் கறியும் அசைவிட்டிறக்கும் முன்னிய பல்லை முத்தென மொழி தலும், நீருஞ் சளியும் நின்று நின்றொழுகும் கூரிய மூக்கைக் குமிழெனக் கூறலும், தண்ணீர் பீளை தவிரா தொழுகும் கண்ணைப் பார்த்துக் கழுநீரெனலும் பிதற்ற லாகாமல் மற்றென்னவாம்? துன்ப வடிவ மாகிய மாதரிடத்தில் இன்பமுண்டென்று கூறும் உலக வசனத்திற்கு யாது பொருள்? அறிவின்மையே பொரு ளாகும். நெருப்பைத் தொட்டாற் சுடும். பெண்ணை நினைத்தாற் சுடுமே.

ஞான :—(விவேகமடைந்தவனாய்) என் அறியாமையை நீக்க வந்த அருள் வடிவே! இப்பொழுது என் மனம் முற் றும் மாறிவிட்டது தங்களுபதேசத்தால்; ஆனாலும் ஒரு ஸந்தேஹம். "பெண்" என்னும் பதத்திற்குப் பொருளில்லை யென்று தாங்கள் நிரூபித்தீர்கள். "உல கம்" என்னும் பதத்திற்கு யாது பொருளென அறிய விரும்புகிறேன். தயை புரிந்து அருள்வீராக.

துறவி :—ஞானப்பிரகாசா! நன்கு வினவினாய். "உலக"மென் னும் பதமும் "பெண்" என்னும் பதத்தைப்போலவே தனக்கெனப் பொருளில்லாததே யாகும். ஆராய்ந்து பார்க்கு மிடத்து உலகத்திலெவையும் தமக்கெனப் பொருளுடையனவல்ல வென்றேற்படும். பொருள் ஒன்றே. அதுவே உண்மையானது. மற்றவை யாவும் நிலைக்கக்கூடியவை யன்று. நசிக்கக்கூடியவற்றால் வருவன வெல்லாம் துன்பமே யாகும்.

ஞான :—(அடியற்ற மரம்போல் கீழே விழுந்து நமஸ்கரிக்கின்றான்) குரு மூர்த்தமே! எனது உடலும் உயிரும் உமது

பதாம்புஜங்களுக்கு அர்ப்பணம் செய்கின்றேன். எது பொருளோ அதைக் காட்டவேண்டும்; எது இன்பமோ அதை யடைவிக்க வேண்டும்.

துறவி:—(ஞானப்பிரகாசனை யெழுப்பித் தலைமேல் தனது கரத்தை யமர்த்தி) அப்பா ஞானப்பிரகாசா! நீயே 'பொருள்; நீயே ஆநந்தம். (காதில் ஏதோ உபதேசிக்கின்றார்.)

[திரை விழுகின்றது.]

இரண்டாவது காட்சி

இடம்:—காசிநகரக் கொலு மண்டபம்

காலம்:—முற்பகல்

பாத்திரங்கள்:—புருஷோத்தமன், சித்தசர்மா ஸுபுத்தி, சேவகன், ஞானப்பிரகாசன்.

சித்தசர்மா:—மன்னர் பெருமானே! தங்கள் தவப்புதல்வன் ஞானப்பிரகாசன் சில நாட்களாய்க் காலை மாலைகளில் தன் சிநேகிதருடன் உல்லாஸமாய்ப் பவனி செல்வதில்லையாம்; ஒன்றையுங் கவனிப்பதில்லையாம்; குதிரைச் சவாரியும் போவதில்லையாம்; பயித்தியம் பிடித்தவன்போல் ஏதோ வொன்றை நினைத்துக்கொண்டு சிரிப்பதும் கூத்தாடுவதுமாக விருக்கின்றானும்; என்ன காரணமோ தெரியவில்லை. அவனுக்கு விவாஹம் செய்ய வேண்டிய வயதும் ஆய்விட்டது. ஒருவேளை தனக்குத் தகுந்த காலத்தில் விவாகம் செய்யவில்லையே யென்னுஞ் சிந்தை மேலிட்டுச் சித்தப் பிரமைகொண் டிருக்கலாமென்று நினைக்கின்றேன். இதைப்பற்றித் தாங்கள்

தீர்க்காலோசனை செய்து அவனுக்கு விவாகம் செய்விப்பது அத்தியாவசியமாகும்.

புருஷோத்தமன் :—(பெருமூச்சுடன்) அப்படியா! ஆயின் அவனை இங்கே வரவழைப்பாய்.

சித்த :—(சேவகனைப்பார்த்து) அடே சேவகா! நீ போய் நமது இளவரசர் ஞானப்பிரகாசரை இங்கே அழைத்து வருவாய்.

சேவகன் :—அப்பிடியே சாமீ! இதோ அயைச்சிகிண்ணு வந்தூட்டே. (ஓடுகின்றான்)

ஸுபுத்தி :—அரசரேறே! இளவரசன் ஞானப்பிரகாசனுடைய விவாஹ விஷயத்தைப்பற்றி யான் முன்னரே யோசித்துப் பற்பல தேசத்து அரச கன்னிகைகளின் உருவப்படங்களை வரவழைத்து வைத்திருக்கின்றேன். அவனுக்கு எந்த கன்னிகையின் மேல் மனம் நாடுகின்றதோ அந்தக் கன்னிகையை மணம் புரிவிக்கலாம். இதோ இருக்கின்றன அப்படங்கள். (படங்களை அரசனிடம் கொடுக்கின்றான்)

புரு :—(படங்களை வாங்கிப்பார்த்து) சரி அப்படியே செய்யலாம்.

ஞான :—(விரைவாய் வந்து) அன்புள்ள பிதாவே! நமஸ்கரிக்கின்றேன். என்னைத் தாங்கள் இங்கே அழைப்பித்ததற்கு யாது காரணமென்று யான் அறிய விரும்பலாமா?

புருஷோ :—மங்கள முண்டாகுக! என் அருந்தவப் புதல்வனே! இங்கு வருவாய். உன்னை அழைப்பித்த காரணம் வேறொன்றுமில்லை. உன் மனோபாவத்தை அறிந்து நீ இச்சிக்கும் கன்னிகையை உனக்கு விவாகம் செய்விக்க வேண்டுமென்பதே. இதோ இருக்கும் படங்

களைப் பார்த்து உன் மனத்திற்கிசைந்த கன்னிகை யைத் தேர்ந்தெடுப்பாய்.

ஞான :—தந்தையே! எனக்கு விவாகம் வேண்டுவதில்லை; பெண்களை மணப்பது பெருந்துன்பத்திற்குக் காரண மன்றோ? நெருப்பைத் தொட்டாற் சுடும் பெண்களை நினைத்தாற் சுடுமே! பெண்களை மணப்பது ஒரு சுகமா? காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டிக் கண் ணெதிரே மாதென்று சொல்லி வரும் மாயை தன்னை மறலிவிட்ட தூதென்றெண்ணுமல் சுகமென்று நாடு வரோ அறிவுள்ளோர்? இது தாங்கள் அறியாததா?

புருஷோ:—மைந்த! நீ கூறிய மொழிகள் எனக்கு அதிக ஆச்சரியத்தை யுண்டாக்குகின்றன. மணந்த பெண்ணை அடக்கி ஆளத்தெரியாதவ னன்றோ பெண்களால் துன்பமுண்டாகின்றதென்று கூறுவன். அழகிலும், யௌவனத்திலும், பராக்கிரமத்திலும், கல்வியிலும், ஸம்பத்திலும் மிகுந்த நீ இவ்விதம் கூறுவது அழகல்ல. "பெண்களை மணப்பது பெருந்துன்பத்திற்குக்காரண" மென்பதைத் தெரிந்து கொள்ளாமலா சிவனுடைய வில்லை யொடித்து இராமன் சீதையையும், வேங்கை மர மாகவும் தொண்டு கிழவனுகவும் வேடந்தரித்து முரு கன் வள்ளியையும், மச்ச இயந்திரத்தைப் பேதித்து அர்ச்சுனன் துரோபதையையும் மணந்தனர்? அறியாத் தனத்தினல் பேசினய்; போகட்டும். சீக்கிரம் தெரிவிப் பாய் உன் மனதுக்கிசைந்த பெண்ணை.

ஞான :—(புன்முறுவலுடன்) தந்தையே! சக்கிரவர்த்தியாகும் நள மஹாராஜன் தமயந்தியை மணந்ததனுலன்றோ அவன் தன்னரசிழந்து ருதுபர்ணனுக்கு அடிமை யானது? மிக்க வல்லமையுடைய இராவணனும் பெண்

ணசையாலன்றே பிடி சாம்பலானது? அன்றியும் உடலுமுயிரும் போலிருந்த ஸுந்தோப ஸுந்தர்கள் திலோத்தமையின் மேல் கொண்ட காதலாலன்றே இன்னுயிரிழந்தது? மேலும் பெண்வழிச் சேர்ந்தன்றே உத்தானபாதன் தன் அருமைப் புதல்வனைக் காட்டிற்கனுப்பியது? ஸுரகுருவாகிய பிரஹஸ்பதியும் தன் மனைவியாகிய தாரையாலன்றே தன் மதிப்பிழந்தது? இவைகளை யெல்லாம் உணர்ந்தேதான் நான் விவாஹம் வேண்டாமென்றுசொன்னேன் தந்தையே! "நோய் கொண்டாலும் கொள்ளலாம் நூறு வயதளவும் பேய்கொண்டாலும் கொள்ளலாம் பெண் கொள்ளலாகாதே" என்னும்முதுரையைத் தாங்கள் அறியீரா? ஆதலால் துன்பங்களுக் குறைவிடமாகிய பெண்ணின் வலையில் என்னைச் சிக்க வைக்காமல் அருள்புரிய வேண்டுகின்றேன்.

புருஷோ:—(கோபத்துடன்) சீ மூர்க்கா! நீயா எனக்கு நீதிகள் கற்பிக்கின்றவன்? என்னிடத்திலா நீ கற்ற கல்வியைக் காட்டுவது? (தனக்குள்) என்ன அவிவேகமிது! ஸ்திரீகளே ஸகல துன்பங்களுக்குங் காரணமாமே! (பிரகாசமாய்) இந்த வேதாந்தம் உனக்கு யார் கற்பித்தது? ஹரிஹரப் பிரஹ்மாதிகளும், இந்திராதி தேவர்களும், தேவதைகளுக்கு நிகரான அரசர்களும் ஸ்திரீகளுடனே இன்பமாய் வாழ்ந்து கொண்டிருக்க, உனக்கு ஒருவனுக்கு மாத்திரமா ஸ்திரீகள் துன்ப காரணமாய்ப் புலப்படுகின்றனர்? போதும் போதும் வாயை மூடு. தந்தையின் சொல்லைத் தட்டி நடக்கும் சண்டாளன் நீ.

ஞான:—(தனக்குள்) யுக்தியோடு கூடிய ஆக்ஷேபத்திற்குச் சமாதானம் சொல்ல முடியாவிடின் கோபத்தைக் காட்டுவது உலக வழக்கந்தானே.

புருஷோ :—(தனக்குள்)ஸந்ததியற்ற ஒருவனுக்குப் புத்திர னில்லையே என்கிற கவலை சில நாளும், புத்திரனொருவ னுண்டாயினும் அவன் ஆயுளையும் கல்வியையுமுடைய வனாய் இருக்கவேண்டுமே என்கிற கவலை பலநாளும், அங்ஙனமே அவன் ஆயுளையும் கல்வியையும் உடைய வனாய் இருப்பினும் நற்குண நற்செய்கைகளைப் பொருந் தியவனாயும் தனக்கு அடங்கி நடக்கின்றவனாயு மிருக்க வேண்டுமே என்கிற கவலை பலநாளும், இங்ஙனம் ஒரு தந்தையின் வாழ்நாள் முழுமைக்கும் புத்திரன் கவலை யையே தருகின்றவனாய் இருத்தலால் அத் தந்தைக்கு அப்புத்திரனைக் காட்டிலும் சத்துரு உலகத்தில் வேறு யாரிருக்கின்றனர்? (பெருமூச்சுடன்) (ஸுபுத்தியை நோக்கி) ஸுபுத்தீ! தந்தை சொற் கேளாத புத்திரனும், கொண்ட கணவனுக்கடங்காத மனைவியும், யஜமான னிடத்தில் விஸ்வாஸமில்லாத வேலைக்காரனும், சத் துருக்களல்லவா? இவன் என் வார்த்தைகளைக் கேட்டு அங்ஙனம் நடக்காததனால் சத்துருத் தன்மையை வகித்திருக்கின்றான் அல்லவா? ஆதலின் தண்டனைக் கும் உரியவனாயிருக்கின்றான். (கோபமாய்) இச்சண்டாள னுக்கு என்ன தண்டனை விதிக்கின் தகுதியுடைய தாகும்? சீக்கிரம் உரைப்பாயாக.

ஸுபுத்தி—மஹா ராஜாவே! தாங்கள் ஆத்திரத்துடன் இவ்வாறு கூறுவது நலமாமோ? தங்கள தருமைப் புதல் வன் அறியாமையாற் கூறிய வார்த்தைகளுக்குக் கோபித் துத் தண்டனை புரியவும் யோசிக்கலாமா? சிறியோர் செய்த பெரிய பிழைகளையும் பெரியோர் பொறுப்பது கடனாயிருக்க, இவ்வற்பப் பிழைக்குக் கோபித்துத் தண் டிக்க நினைப்பதும் அழகாமோ? விவாகம் வேண்டா

மென்று வெட்கத்தினுலும் கூறியிருக்கலாம்; இது வாலிபர்களுக்கு இயல்பன்ருே? ஆதலின் தாங்கள் கொண்ட ஆக்கிரஹத்தை யடக்கித் தங்கள் புதல்வனைத் தங்கள் மனைவியிடத்தில் அனுப்புங்கள்; அவர்கள் தநய னுடன் தனியாய்ப் பேசிச் செய்யவேண்டிய காரியத் தைச் செவ்வனே செய்து முடிப்பார்கள்.

புருஷோ :—ஆயின் அப்படியே செய்யும்.

ஸுபுத்தி :—அப்பா ஞானப்பிரகாசா! நீ இச்சிக்கும் பெண்ணை இங்கே பலரறியத் தெரிவிக்க உனக்கு வெட்கமாயிருக்கலாம். ஆதலால் உன் தாயாரிடம் சென்று தனியாய்ச் சொல்வாயாக. (சேவகனை நோக்கி) அடே சேவகா! நீயும் இவருடன் சென்று இராணி யம்மாள் சொல்வதை இங்கு தெரிவிப்பாய்.

ஞான :—வெட்கப்படுவதற்கு நானென்ன பெண்ணு? நான் என் தாயாரிடத்திற்குப் போக வேண்டுமாமே. போனல் அவர்கள் என்ன சொல்லப் போகிருர்கள்? உண்மை யறிந்த மனத்தை மாற்ற யாரால்தான் முடியும்? சரி போகின்றேன்.

[சேவகனும் ஞனப்பிரகாசனும் போகின் ருர்கள்]

மூன்ருவது காட்சி

இடம் :—இராணியின் அந்தப்புரம்

காலம் :—நடுப்பகல்

பாத்திரங்கள் :—இந்துமுகி, ஞானப்பிரகாசன், சேவகன்.

ஞான :—அம்மா ! நமஸ்கரிக்கின்றேன்.

இந்துமுகி :—அப்பா மகனே ! மங்களமுண்டாவதாக. நீயுன் தந்தையினிடத்திற்குப் போயிருந்தாயாமே ? என்ன சங்கதி ? எதற்காக உன்னை அழைப்பித்தார் ?

ஞான :—அம்மா ! தந்தை எனக்கு விவாஹம் செய்ய யோசித்து நான் எந்தப் பெண்ணை இச்சிக்கிறேனென்று தெரிந்து கொள்ளவேதான் என்னை வரவழைத்தார்.

இந்து :—(சந்தோஷத்துடன்) அப்படியா ! மெத்த சந்தோஷம். (தனக்குள்) ரொம்ப வயதாய் விட்டதே, அவர், விவாக விஷயத்தைப்பற்றி இன்னும் கவனிக்காமல் இருக்கிருரே, நாமாகிலும் இதைப்பற்றி சொல்லலாமா என்றுகூட சில வேளையில் நான் நினைத்ததுண்டு. ஆனுலும் அவருக்குத் தெரியாததா நாமென்ன சொல்வது என்று நினைத்துப் பேசாமல் இருந்து விட்டேன். கங்கணப் பிராப்தி வேளை வரவேண்டாமா ! (பிரகாசமாய்) சரி ! நீ யெந்தப் பெண்ணை விரும்புவதாய்ச் சொன்னுய் ?

ஞான :—அம்மா எனக்கு விவாஹமே வேண்டாமென்று சொல்லி விட்டேன்.

இந்து :—(சிரித்துக் கொண்டு) என் செல்வமே ! என்னிடத்திலா பரிகாசம் ? சொல் ; எந்தப் பெண்ணை யிச்சிக்

கிருய்? ஓஹோ! வெட்கமோ!! என்னிடத்தில் உனக்கென்ன வெட்கம்?

சேவகன் :—அம்மா! அம்மா!! கொயந்தே நம்ம அய்யாவண்டெகூட இப்படிதாം கண்ணுலம் பண்ணிக்கமாட்டேண்ணு சொல்லிச்சிங்கொ; அதுக்குத்தாം அவங்கோ கோவிச்சிகுனு ஒங்ககிட்டே அனுப்பனுங்கோ.

இந்து :—(திடுக்கிட்டு) என்ன! உண்மையாகவா! ஏன் விவாகம் வேண்டாமென்று சொன்னுய்?

ஞான :—தாயே! ஸகல துன்பங்களுக்குறைவிடமாயும், சுகத்திற்கு அதிக தூரமாயும், பக்திக்கு அதிக விரோதமாயும், பந்தத்திற்கு முக்கிய காரணமாயும், தாய்தந்தை முதலியவர்களிடத்தில் வீண் வெறுப்பை யுண்டாக்கக் கூடியதாயுமுள்ள "பெண்" என்கிற ஸர்ப்பத்தின் வாய்க்கிரையாவதற்கு யாராகிலு மிணங்குவார்களோ? அப்படிப்பட்ட சர்ப்பத்திற்கு இரையாக்குவது உங்களுக்குத்தான் அழகாகுமோ? பெற்ற பிள்ளைக்குத் துன்பந்தேடுதல் பெற்றோர்க்கு நியாயமாகுமா?

இந்து :—அப்பா குழந்தாய்! உன் வார்த்தைகளைக் கேட்க எனக்கு வெகு ஆச்சரியமா யிருக்கின்றது. வேத சாஸ்திர புராணேதிகாசங்களை நன்கு வாசித்துத் தெளிந்த நீ இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்வது புதுமையாகவே இருக்கின்றது. "நல்ல ஞாலமும் வானமும் பெறினும் எல்லா மில்லை இல்லில்லார்க்கே" என்றும், "இல்லறமல்லது நல்லறமன்று" என்றும் பல படித்தாகச் சகல சாஸ்திரங்களும் இல்லறத்திற்கே யேற்றங் கொடுத்துப் புகழ்ந்திருக்கவும் தத்துவஞானிகளாய் விளங்கும் வஸிஷ்டர் யாக்ஞவல்கியர், ஜனகர் முதலிய ரிஷிகளும்

அரசர்களும் மனைவி மக்களோடு வாழ்ந்திருக்கவும் உனக்கு ஒருவனுக்கு மாத்திரம் என் இங்ஙனம் தோன்றுகின்றது? போதும் போதும்; இனியாகிலும் உன் அறிவீனத்தை விடுத்து உடனே தந்தை யிடஞ் சென்று விவாகம் செய்துகொள்வதாய்த் தெரிவித்து விட்டு வா. என் வார்த்தையைக் கேள். "தாய் சொற் றுறந்தால் வாசகமில்லை" யென்பது நீ யறியாததா? தாயின் வாக்கைக் கொண்டன்றோ பாண்டவர் ஐவரும் ஒரு பெண்ணை மணந்தது; வியாஸர் தனது தாயாகிய மச்சகந்தியின் வார்த்தைக் குட்பட்டன்றோ பரஸ்திரீக ளாகிற, விசித்திரவீரியன் மனைவிகளை யடைந்தது; இங்ஙனம் ஒரு ஸ்திரீயைப் பலர் மணந்ததும் பரஸ்திரீ களைப் பர புருஷன் தொட்டதும் வேத தர்ம சாஸ்திரங் களில் நிஷித்தமாயிருப்பினும், அறிவுடைய அவர்கள் அவ்விலக்கான காரியத்தையும் விதியாகச்செய்து முடித் தது தாய்ச்சொல்லின் வலிமையாலன்றோ? ஆதலால் வேதவாக்கியத்தைவிட மாத்ருவாக்கியம் மேன்மை யுடைய தென்று ஏற்படவில்லையா? ஆதலின் தாய் சொல்லை மீறி நடப்பது விவேகியாகிய உனக்கு அழ கல்ல. ஆதலின் உன் எண்ணத்தை உடனே மாற்றி என்னிஷ்டப்படி விவாஹம் செய்து கொள்.

ஞான:—அம்மா! தாங்கள், இன்னேரம் என்னை விவாஹம் செய்துகொள்ளப் பலவித நியாயங்களைக் காட்டி வற் புறுத்தியதற்கு மிக்க தாழ்மையுடன் நமஸ்கரிக்கின் றேன். இதுகாறும் தாங்கள் எடுத்துக் கூறிய திருஷ்டாந் தங்கள் அதிக நுட்பமானவை. தர்மஸூக்ஷ்மமான அக் காரியங்கள் ஏதோ ஒரு சாபவிசேஷத்தை முன்னிட்டு நடந்தனவே யன்றிச் சாதாரணமாய் நடந்தவை யல்ல.

சாதாரணமாய் நடந்தவை யெனின், பர ஸ்திரீயுடன் சேரும்படி கட்டளையிட்ட தாய் ஒரு தாயு மன்று ; அவ் வார்த்தையைக் கேட்டு அங்ஙனம் பரஸ்திரீயுடன் சேர்ந்த புத்திரன் ஒரு புத்திரனுமன்று ; இங்ஙனம் தாயும் பிள்ளையுமாகப் பிறந்தவர்கள் பரஸ்பரம் அதிக குரோதமுள்ள சத்துருக்களிலும் அதமமானவர்க ளென்றே கூறத்தக்கவர்களாவார். ஆதலால் தாங்கள் என் க்ஷேமத்தைக் கோரியவர்களாய் இருப்பதால், அதற்கு மாறுன விஷயத்தைப்பற்றி வற்புறுத்துவது சரியல்ல ; அப்படி தாங்கள் கட்டாயப்படுத்தினுலும் நான் அதற்கு இணங்கேன்.

இந்து :—(பெருமூச்சுடன்) அப்பா குழந்தாய் ! இதற்குத்தானு நாங்கள் உன்னைத் தவங்கிடந்து பெற்றது ? நல்ல பிள் ளைக்கு இதுதானு லக்ஷணம் ? தான் இல்லற தர்மத்தை மேற்கொண்டு புத்திரர்களைப் பெற்றுத் தந்தையின் வமிசத்தை நிலைநிறுத்தித் தாய் தந்தைகள் இறந்த பின் னர் தர்ப்பணுதிகளாலும் சிரார்த்தாதிகளாலும் திருப்தி செய்வதன்றோ சத்புத்திராது கடன். இங்ஙனம் செய் யாத நீ நல்ல பிள்ளையாவையா ? யோசித்துப் பார்.

ஞான :—அம்மா ! தாங்கள் கூறுவது கேவலம் பாமரர்களு டைய வார்த்தைகள். விவாஹம் செய்துகொண்டு மக் களைப்பெற்று ஸம்ஸாரமாகிற துக்கக் கடலில் மூழ்கித் தவிப்பவன் எங்ஙனம் தாய் தந்தையரைத் திருப்தி செய்ய முடியும் ? தாயே ! எதற்காக இந்த மனித சரீரம் கிடைத்ததோ அதைப்பற்றி யோசித்து அதை அடைவ தல்லவா விவேகிகளின் காரியம் ?

இந்து :—(மூர்ச்சித்துக் கீழே விழுந்து) (தனக்குள்,) ஐயோ எத் தனையோ விதமாய்ப் போதிக்கினும் இவன் மனதை

மாற்றமுடியவில்லையே! அரசரே தம்மால் முடியாமல் என்னிடம் அனுப்பியிருக்க நான் என்ன செய்யமுடியும்? (பிரகாசமாய்) அப்பா சேவகா! நீ அரசரிடம் போய் ஞானப்பிரகாசனுக்கு எவ்வளவு போதித்தும் அவன் எண்ணம் மாறவில்லை என்று சொல்வாய். நடக்கிறபடி நடக்கட்டும். நானென்ன செய்வேன்.

[சேவகன் போகின்றான்.]

நான்காம் காட்சி

இடம் :—கொலு மண்டபம்

பாத்திரம்:—புருஷோத்தமன், சித்த சர்மா, சுபுத்தி சேவகன், ஞானப்பிரகாசன்.

சேவகன் :—(ஓடிவந்து) சாமீ! கொயந்தெயெ அயச்சிகினு அம்மாவண்டே போயிருந்தேo; அம்மா அப்போபிடிச்சி இன்னேரம் என்னென்மோ சொன்னுங்கோ. கொயந்தெ ஒரு பிடியா மாட்டேண்ணு சொல்லுதுங்கோ. இத்தெ அம்மா ஒங்களண்டெ சொல்லச் சொன்னுங்கொ.

புருஷோ :—அப்படியா! சரி!! சுபுத்தீ!!! இனி நடக்க வேண்டியது என்ன? தண்டனை விதிக்கலாமன்றோ?

ஸுபுத்தி :—அருளே உருவெடுத்து வந்த அரசர் பெருமானே! என் வார்த்தைக்குச் சிறிது செவி கொடுத்தருள வேண்டுகிறேன். தங்கள் புதல்வன் எவ்விதத்திலும் தண்டனைக் குரியவனல்லன். தங்களது இஷ்டத்திற்குட்பட்டு நடக்கவில்லை யென்னும் ஒன்றைத் தவிற அவன் யாதொரு குற்றமும் செய்யவில்லை. பெற்றோரின் கட்டளைக்குப் புத்திரன் அடங்கி நடப்பது தருமமே

யாயினும் நாம் அவனுக்குச் சொல்லும் தருமத்தை விட அவன் மேலான தர்மத்தை யுணர்ந்திருப்பதனுல் எவ் விதத்திலும் அவன் தண்டனைக்குரியவனல்லன். இந்த அரசகுலத்தை விருத்தி செய்வதற்காகத் தங்கள் புதல் வனை மணம் செய்வித்தல் அத்தியாவசியமேயாயினும், அக்காரிய சித்தியின் பொருட்டுத் தண்டோபாயத்தை யுபயோகிப்பது நியாயமன்று ; தந்திரத்தினுல் சாதித் தலே நலமாகும். இந்திரியங்களை ஜெயித்த பராசரர், விஸ்வாமித்திரர் முதலியோர்களே ஸ்திரீகளின் மோக வலையில் சிக்கி மயங்கினுர்கள் என்முல் இச்சிறுவன் எவ்வளவு? நாம் வெறும் வார்த்தைகளினுல் என்ன சொல்லினும் அவன் மனம் மாருது. ஒரு பெண்மணி யின் பார்வையாகிற அம்புக்கு இலக்காக்கி அவனைத் தனியாய் விட்டு விட்டால் அப்பெண் ஒரு நிமிஷத்தில் அவனை வசப்படுத்துவாள் ; இதைத் தவிற வேறு வழி யின்று (**தனக்குள் சற்று யோசித்து**) சரி! அப்பெண்ணே அவனை மயக்கத்தக்கவள். (**பிரகாசம்**) அரசே! இதைப் பற்றித் தாங்கள் இனிக் கவலை கொள்ளற்க. அவனை மணம் புரிவிப்பது என் காரியம்.

புருஷோ :—(**சந்தோஷத்துடன்**) ஆஹா! மந்திரீ!! என் கவலை யை நீ யெடுத்துக் கொண்டனை! மெத்த சந்தோஷம். நான் இப்போது அந்தப்புரம் சென்று இந்து முகியைத் தேற்ற வேண்டும்.

[அரசன் செல்கின்முன். யாவரும் போகின்றனர்.]

முதலங்கம் முற்றிற்று

இரண்டாவது அங்கம்

முதற் காட்சி

இடம் :—பாடலீபுரத்தரசனது உத்தியானவனம்

காலம் :—மாலை.

பாத்திரங்கள் :—ஸுகுமார வர்மா, மோஹனாங்கி, மனோஹாரிணி, மதுரவாணி

மோஹனாங்கி :—நாதா! நமது அருந்தவப் புதல்விக்கு விவாஹத்திற்குரிய வயது வந்து விட்டதன்றோ? இதைப் பற்றி நாம் கவனித்துத் தக்க ராஜகுமாரனுக்கு மணஞ் செய்வித்தல் அத்தியாவசியமல்லவா?

ஸுகுமார :—மோஹனா! இவ்விஷயத்தைப்பற்றி நானும் இப்பொழுதுதான் நினைத்து உன்னுடன் சொல்லலாம் என்றிருந்தேன். நீயும் அதைப்பற்றியே கூறினாய். எங்கே மனோஹாரிணி? நம்மோடு வந்தாளே?

மோஹனா :—நாதா! அவள் இங்கே தானே இருந்தாள். எங்கே போனாள்? (நாற்புறமும் பார்க்கின்றாள்.) அதோ அச்சம்பங்கிக் கொடி வீட்டிற்குள் இருக்கின்றாளே. இருக்கட்டும்; ஏன் மனோஹாரிணியைத் தேடினீர்கள்?

ஸுகுமா :—ப்ரியே! அவளுடைய மனோபாவத்தையும் தெரிந்துகொள்ளத்தான் தேடினேன்.

மோஹனா :—அப்படியா! ஆனால் சரி; கேட்கவேண்டியது தானே. நாமும் அங்கேயே செல்வோமா?

(கொடி வீட்டிற்கருகே செல்கின்றனர்.)

மனோஹாரிணி :—

"காய நீர்க்குமிழி யதிலுறு மின்பங்
கானலிற் புனலிது தனக்கிங்
காய வித்துயர மளவில யிதைநீ
யாய்வு றுமையி னழிந்தற்றாய்
நீயினிக் கவலை நினைவெலா மொழித்து
நேயமாய் வந்தெனக் குடன்பட்
டாயநற் குரவற் கன்பதே யிசைத்தால்
அரியதே தார் நமக் கெதிரே!"

ஆஹா! நல்ல செய்யுள் நினைவுக்கு வந்தது. இந்த சரீரம் நீர்மேற் குமிழியேயாகும். இதனால் அடையும் சுகம் கானலில் தோன்றும் ஜலம் போல்வதேயாம். ஓ பாழ்மனமே! நீயேன் இந்த நிலையற்ற விஷய இன்பங்களில் இச்சை வைக்கின்றாய்? (தன்னை மறந்து). ஒருகாலும் இச்சியேன்.

மோஹனன்:—(மெதுவாய்) நாதா! மனோஹாரிணியேதோ தனக்குத்தானே பேசிக்கொள்ளுகின்றாள். சற்று மறைவாய் இந்த மரத்தின் பின்னால் நின்றுகொண்டு கேட்போம் வாருங்கள்.

ஸுகுமா:—என்ன! தனக்குத் தானே பேசிக்கொள்ளுகிறாளா? ஏன்? (ஸுகுமாரனும் மோஹனங்கியும் ஒரு மரத்தின் பின் ஒதுங்கி நின்று உற்றுக் கேட்கின்றார்கள்.)

மனோஹா:—இந்த உலகில் யாருக்கு யார் தந்தை? யாருக்கு யார் தாய்? யாருக்கு யார் மகள்? யாருக்கு யார் கணவன்? யாருக்கு யார் மனைவி? அவரவர் வினையின் அவரவர் வருவர். ஓ சித்தமே! நீயேன் என்னை இங்ஙனம் வாட்டுகின்றனை? ஒரு ராஜகுமாரனை யான்

மணப்பேனேயாகில், அவனது மனம்போல் நடந்து கொள்ளவேண்டும். நாதன் மனம்போல் நடப்ப தன்ருே பதிவிரதைகளுக்குப் பயந்த வழகு? இங்ஙனம் ஒருவனை மணந்து பொய்யான சிற்றின்பங்களை மெய்யென நடித்துக்காட்டித் தன்னையும் தான் மணந்த கணவனையும் ஸம்ஸாரஸாகரத்தில் அமிழ்த்துவதைக் காட்டிலும் விவாகமே இல்லாமல் இருப்பது நலமல்லவா? ஆதலால் ஹேசித்தமே! நீயொருவனை மணக்கும் எண்ணத்தை முற்றும் விட்டு விடுவாய்.

ஸுகுமா:—ப்ரியே! என்ன ஆச்சரியமிது!! நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்ததுபோற் காண்கின்றதே!! கவனித்தாயா மனோஹாரிணி கூறிய வார்த்தைகளை?

மோஹன:—ஆச்சரியம்! ஆச்சரியம்! நாதா!! நாம் கொண்ட எண்ணத்திற்கு முற்றும் மாருகவே யிருக்கின்றன இவளுடைய வார்த்தைகள். "யாருக்கு யார் தந்தை? யார் யாருக்குத் தாய்? என்கிருளே இவளுக்கென்ன இவ்வளவு வெறுப்பு? இன்னம் முளைத்து இரண்டிலை வெடிக்க வில்லையே இதற்குள்ளேயே வேதாந்த மென்ன இவளுக்கு? என்ன காலமிது? இதுதான் கலியின் இயற்கையோ?

ஸுகுமா:—காதலீ! எனக்கொன்றும் தோன்றவில்லை. நாம் இப்போது அவளருகிற் சென்று கேட்டால் அவள் தக்கவிடை தருவாளென்று நான் நினைக்கவில்லை. உன் எண்ணமென்ன?

மோஹன:—அரசே! நாம் அவளருகில் சென்றுதான் பார்ப்போமே! என்னதான் சொல்லுகிருளோ கேட்போமே!

ஸுகுமா :—ஆனால் செல்வோம் வா! (சுற்றிக்கொண்டு மனோ ஹாரிணியின் எதிராக வருகின்றார்கள்.)

[மனோஹாரிணி, தன்னை நோக்கி வரும் தாய் தந்தைகளைப் பாராதவள்போல் வேறொரு புறமாய்ப் போகின்றனள்]

ஸுகுமா :—ப்ரியே! மனோஹாரிணி அந்தப் பக்கம் செல்கின்றனள் யார்.

மோஹன :—மனோஹாரிணீ! மனோஹாரிணீ!! (அழைக்கின்றாள். மனோஹாரிணி திரும்பிப் பார்க்கின்றாள்.)

மனோ :—ஓஹோ! இந்தப்பக்கம் வந்து விட்டீர்களோ? (திரும்பி வருகின்றாள்.)

மோஹன :—என் கண்ணே! இன்று உன் முகம் வாட்டமுற்றிருக்கின்றதே என்ன காரணம்?

மனோ :—அம்மா! என்ன!! என்முகம் வாட்டமாயிருக்கின்றதா? என்ன ஆச்சரியம்! கவலையற்றவர்களுக்கு முகவாட்ட முண்டாகுமா?

ஸுகுமா :—குழந்தாய்! கவலையற்றவர்களுக்கு முகவாட்ட முண்டாகுமா? உற்றவர்களுக்குத்தான் உண்டாகும். என்ன கவலை யுனக்கு?

மனோ :—(சிரித்துக்கொண்டு) தந்தையே! இது என்ன வேடிக்கை? என் முகம் வாட்டமாயிருக்கின்றதென்று நீங்களே கற்பித்துக்கொண்டு உனக்கு என்ன கவலை யென்றும் கேட்கின்றீர்களே. எனக்கு என்ன கவலை யிருக்கின்றது தாங்கள் இருக்கும் வரையில்?

மோஹன :—நாதா! நமது அருமைப் புதல்வியின் மனக் கவலையை நான் அறிவேன். சொல்லட்டுமா?

ஸுகுமா :—சொல்வாய்.

மோஹன :—எந்த ராஜ குமாரனை மணக்கலாமென்பதே யாகும்.

மனே :—அம்மா! தாங்கள் கூறுங் காரணத்திற்காக யான் கவலை கொள்ளவேண்டிய அவசியமில்லையே. நான் கவலை யற்றிருக்கவேண்டும் என்கிற கவலை உங்களுடைய தன்றோ?

மோஹன :—நாதா! பார்த்தீர்களா நம் புதல்வி நம்மை ஏசாமல் ஏசுகின்றாள் இதுவரை யவளுக்கு விவாகம் செய்யாத தற்காக. (மனோஹாரிணியை நோக்கி) மனோஹாரிணீ! நீ கவலை யற்றிருப்பதற்கு நாங்கள் தான் கவலைப்படவேண் டும். நாங்கள் அக்கவலையை யெடுத்துக்கொள்ளாததற் காக நீ கவலையுற வேண்டியது நியாயமே யாகும்.

மனே :—அம்மா! எனக்கு உண்மையில் ஒரு கவலையுமில்லை; அதனால் முகவாட்டமுமில்லை. ஒருகால் நான் கவலையுற் றிருக்கிறேன் என்று தாங்கள் கூறும் பக்ஷத்தில் அக் கவலை "ஒரு ராஜ குமாரனை மணக்கவேண்டுமே!" யென் பதுதான்.

மோஹன :—நாதா! யான் முன்னரே கூறவில்லையா? விவாஹ விஷயமான கவலையென்று.

ஸுகு :—ஆம் ஆம்! உனக்கு ஜோஸ்யம் தெரியுமென்று எனக்கு நன்றாய்த் தெரியும்.

மோஹன:—என் குழந்தாய்! மனோஹாரிணீ !! நீ எந்த அரச குமாரனை மணக்க இச்சிக்கின்றனை யம்மா?

மனே :—தாயே! யான் தங்களுக்கு ஒரே புதல்வியாயிற்றே. என்னை யொரு அரச குமாரனிடத்தில் அனுப்பிவிட்டு நீங்கள் எப்படித் தனியாய் இருப்பீர்கள்? என்னைவிட்டுத்

தனியாய் இருக்க உங்களுக்கு முடியுமெனினும், உங்களை விட்டு இருக்க எனக்கு முடியாது. ஆதலால் எனக்கு விவாஹமே வேண்டாம்.

ஸுகு:—என் செல்வப் புதல்வீ! என்ன சொன்னுய்? உன்னை விட்டு அரை நிமிஷமாவது இருப்போமா நாங்கள்? உன்னை, நீ யிச்சிக்கும் அரச குமாரனுக்கு மணம் புரிவித்து அவனுக்கு இந்த ராஜ்யத்தைப் பட்டாபிஷேகம் செய்விக்க வேண்டுமென்றல்லவா யாங்கள் விரும்புவது? எங்களை விட்டுப் பிரிந்திருக்க நேருமென்று விவாஹம் வேண்டா மென்கிறுய்?

மனே:—(தனக்குள்) சரி சரி! இவர்களோடு எள்ளளவும் உண்மையை மறைத்துப்பேச முடியாது. (பிரகாசமாய்) தந்தையே! எனக்கு விவாஹமே வேண்டாம்.

ஸுகுமா:—என்ன! விவாகமே வேண்டாமா? ஏன்?

மனே:—தந்தையே! தங்களிஷ்டத்திற்கு மாறுகப் பேசுவதற்காக என்னைத் தயை செய்து மன்னிக்கக் கேட்டுக் கொள்ளுகின்றேன். சில நாளைக்கு முன் "சித் விலாசம்" என்னும் மாதச் சஞ்சிகையில் "உலகமும் சிற்றின்பமும்" என்னும் அரிய விஷயமொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதை நான் வாசித்தேன். அதனுல் "இந்த உலகம் நீர்மேற் குமிழி போன்று அநித்தியமாயுள்ளதென்றும், இவ்வுலகில் அநுபவிக்கப்படும் சிற்றின்பங்கள் யாவும் கானலில் தோன்றும் ஜலம்போல் பொய்யேயாகுமென்றும்" அறிந்தேன். ஆதலால் பொய்யாகிய சிற்றின்பங்களை விரும்பி யொரு அரச குமாரனை மணக்க யான் சற்றும் இணங்கேன். தாங்கள் என்னை யொரு அரசிளங் குமாரனை மணக்குமாறு வற்

புறுத்துவதனுல் எனக்குக் கவலையுண்டாகுமே யன்றி மற்றன்று. ஆதலால் அவ்விஷயத்தைத் தாங்கள் அறவே விடுத்து வேறு எதையாகிலும் பேசுங்கள்.

ஸுகுமா :—அம்மா! மனேஹாரிணீ!! நீ கூறுவது எனக்கு ஆச்சரியத்தையும் கவலையையும் உண்டாக்குகின்றது. (மோஹனங்கியை நோக்கி) மோஹனு! கேட்டாயா நமது அருந்தவப் புதல்வியின் வார்த்தைகளை? சிற்றின் பங்கள் கானலிற்ருேன்றும் நீர்போல்வனவாமே. அஃதுனக்குத் தெரியுமா?

மோஹனு :—நாதா! என்ன தாங்கள் வெளுத்ததெல்லாம் பால்; கறுத்ததெல்லாம் தண்ணீரென நினைக்கின்றீர்களே! ஸ்திரீகளைப் பார்த்து "நீ யாரை மணக்க யிச்சிக்கிறு" யெனில் இன்னவனை யிச்சிக்கிறேனென்று ஸகஜமாய்ச் சொல்லுவார்களா அவர்கள்? அங்ஙனம் கூறுதல் அவர் களின் இயற்கைக் குணத்திற்கு மாறன்ருே? (மனே ஹாரிணியை நோக்கி) அம்மா! மனேஹாரிணீ!! தந்தையி னிடத்தில் நாணமென்ன? ஆனுல் என்னிடத்தில் சொல் ரஹஸ்யமாய். (ஒரு புறம் அழைத்துக் கொண்டுபோகிருள்.

மனே :—அம்மா! யான் ஒருவரையும் மணக்க இச்சியேன்; எனக்கு விவாகமே வேண்டியதில்லை யென்று முக்காலும் கூறுவேன்.

மோஹனு:—ஐயையோ! இதென்னடீ பைத்தியம்? என்னிடத் திற் சொன்ன மாதிரி மற்று யாரிடத்திலாவது சொல்லப் போகிருய். ஸ்திரீகள் மணக்கமாட்டேனென்று சொல்ல வே கூடாது. இது நம்முடைய மதக் கொள்கைக்கு நேர் விரோதமானது. (மதுரவாணி வருகின்ருள்.)

மதுரவாணி :—(மோகனங்கியை நோக்கி) அம்மணீ ! நமஸ்காரம். (அரசரை நோக்கி) அரசே! ஜயமுண்டாவதாக. (மனேஹாரிணியை நோக்கி) அம்மா மனேஹாரிணீ! ஞானம்பிகையும், விலாஸமுகியும் உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்களே! நீ யிங்கு வந்திருப்பது அவர்களுக்குத் தெரியாது போலும்.

மனே :—ஓஹோ ! நான் மறந்தேவிட்டேன் விலாஸமுகியை வரச்சொன்னதை. (மோஹனங்கியை நோக்கி) அம்மா! எனக்கு உத்தரவு கொடுங்கள் அரண்மனைக்கேக. விலாஸமுகி எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிருளாம்.

மோஹன :—(அரசரை நோககி) நாதா! மனேஹாரிணி அரண்மனைக்குச் செல்லவேண்டுமாம்; விலாஸமுகி வந்திருக்கின்ருளாம் இவளைக்கண்டு பேச. அனுப்புகிறீர்களா?

ஸுகுமா :—அப்படியானுல் போகட்டுமே. நாம் இன்னும் சற்றுநேரம் இங்கே இருந்து போகலாம்.

மோஹன :—(மனேஹாரிணியை நோக்கி) அம்மா நீ போ. நாங்கள் சற்று நேரம் இருந்து வருகிறேம். (மனேஹாரிணி போகின்ருள்.)

ஸுகுமா :—காதலீ ! மனேஹாரிணியின் மனத்தைத் திருப்ப நம்மாலாகாது. என்ன செய்யலாம்? (யோசிக்கின்ருள்.)

மோஹன :—நாதா ! எனக்கு ஒன்று தோன்றுகின்றது. நம்முடைய குலகுரு தர்மசீலர் ஸகல சாஸ்திரங்களிலும் வல்லவரென்று தாங்கள் சொல்ல நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஸுகுமா :—ஆம் ஆம்! நன்கு கூறினாய்.

"அன்னை தயையும் அடியாள் பணியும் மலர்ப்
பொன்னி யழகும் புவிப் பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும் விறன் மந்திரி மதியும்
பேசிலிவையுடையாள் பெண்."

என ஆன்றோர் கூறியபடியே யுக்தாயுக்தங்களைச் சமயத்தில் கூறுவதில் மந்திரியைப் போலவே இருக்கின்றாய். அதுவேதான் செய்யத்தக்கது. தர்மசீலர் எப்படியும் மனோஹாரிணியின் மனத்தைத் திருப்பிவிடுவாரென்னும் நம்பிக்கை யெனக்குண்டு. மனோஹாரிணியின் அந்தப்புறத்தில் விலாஸமுகியும் ஞானம்பிகையும் இருப்பார்கள் இப்போது. இப்பொழுதே அவரை யங்கு அனுப்புவது அவசியமென நினைக்கின்றேன்.

மோஹனா :—அப்படியாயின் உடனே மதுரவாணியிடம் சொல்லி யனுப்புவோம்.

ஸுகுமா :—மதுரவாணீ! நீ தர்மசீலர் வீட்டிற்குப் போய் அவருடன் மனோஹாரிணி தனக்கு விவாஹம் வேண்டாமென்று சொல்லுகிறாள் என்றும், அவளுடைய மனதை மாற்றி விவாகம் செய்துகொள்ளும்படி செய்வது எனது கோரிக்கை யென்றும் தெரிவிப்பாய். உடனே புறப்பட்டு மனோஹாரிணியின் அந்தப்புரம் போகச் சொல்லுவாய்.

மதுரவாணி :—அப்படியே அரசே. (போகின்றாள்)

[ஸுகுமாரனும் மோஹனாவும் அரண்மனைக்குப் போகின்றார்கள்]

இரண்டாவது காட்சி

இடம் :—மனோஹாரிணியின் அந்தப்புரம்

பாத்திரங்கள் :—ஞானும்பிகை, விலாஸமுகி, மனோ ஹாரிணி, தர்மசீலர், மதுரவாணி.

ஞானும்பிகை :—அம்மாவிலாஸமுகீ! ஐந்து மணி தான் ஆயிற்று; மனோஹாரிணி ஒருகால் தன் தாயாரிடம் போயிருக்கக் கூடும்; ஆயினும் வந்து விடுவாள் சீக்கிரம். இன்னும் சற்று நேரம் இருங்கள்.

விலாஸமுகி :—ஞானும்பிகே! நாலரைமணிக்கு என்னை வரச் சொல்லிவிட்டு இப்படியும் போகலாமா அவள்?

ஞானும் :—விலாஸமுகீ! அப்படிச் சொல்லாதே. வந்துவிடு வாள் கூடிய சீக்கிரத்தில்; இதோ பார் உனக்கு வாசித் துக் காட்டுவதற்காக இந்தச் சலவைக்கல் மேடையின் மீதில் "சித்விலாஸம்" என்னும் மாதச் சஞ்சிகையைக் கூட வைத்துவிட்டுப் போயிருக்கிறாள்.

விலாஸ :—எதோ அதையாகிலும் கொண்டுவா பார்ப்போம். (ஞானும்பிகை கொண்டுவந்து கொடுக்கின்றாள். விலாஸ முகி ஸஞ்சிகையைப் படிக்கின்றாள்.)
அடீ! ஞானும்பிகை!! இந்தச் செய்யுளைக் கேள்.

"தூமகேது புவிக்கெனத் தோன்றிய
வாமமேகலை மங்கையரால் வரும்
காமமில்லையெனிற் கடுங்கேடெனும்
நாமமில்லை நரகமுமில்லையால்"

கேட்டாயோடீ! மங்கையரால் வரும் காமமில்லை யென் றால் கடுமையாகிய கேடென்னும் பெயரே யில்லையாம்; நரகமும் இல்லையாமே. ஆடவர்களுக்கு என்ன அகங்

காரம் பார்த்தாயா. இந்த உலகத்திற்குத் தூமகேதுக்க ளாமே ஸ்திரீகள்.

ஞானம் :—ஆமாம். இது கம்பராமாயணச் செய்யுளல்லவா? ஆடவர்கள் ஸ்திரீகளைத் தூஷிப்பதில் என்ன புதுமை?

விலாஸ :—புதுமையல்லடீ! நாமும் அவர்களைப்போல் கட வுள் சிருஷ்டியில் சேர்ந்தவர்கள் தானே. அவர்களுக்கு எவ்வளவு உரிமை இந்த உலகத்தில் உண்டோ அவ் வளவு உரிமை நமக்கும் உண்டல்லவா? அப்படி யிருக்க ஸ்திரீகள் தூமகேதுவென்றும் அவர்களால் ஏற்படும் காமமில்லாவிடின் துன்பமும் நரகமும் இல்லவே இல்லை யென்றும் அவர்கள் எங்ஙனங் கூறலாம்? ஆடவர்கள் தான் இப்புவிக்குத் தூமகேதுக்கள்; அவர்கள் இல்லை யெனில் கேடும் நரகமும் இல்லவேயில்லை யென்று நாமேன் கூறலாகாது? காமம் யாராலுண்டாகும் ஆட வரில்லாவிடின்?

ஞானம் :—விலாஸமுகீ! நன்கு கூறினாய். விவேக சர்மாவின் புத்திரியல்லவா நீ! அவருடைய விவேக சாதுர்யம் உனக்கில்லாமலாபோகும்!

விலாஸ —அஃதிருக்கட்டும். ஆடவர்கள் தம்மிடத்திலுண் டாகும் காமத்தை ஸ்திரீகளின்மேலேற்றி யேன் கூற வேண்டும்?

ஞானம் :—ஸ்திரீகளால் அவர்களுக்குக் காமமுண்டாவதால்.

விலாஸ :—ஆச்சரியம்! ஆச்சரியம்!! ஸ்திரீகளாலா புருஷர் களுக்குக் காமமுண்டாகின்றது? புருஷர்களால்தான் ஸ்திரீகளுக்குக் காமமுண்டாகின்றதென்று சொன் னாலோ?

ஞானம் :—அப்படி எந்த ஸ்திரீக்கு உண்டாயிருக்கின்றது?

விலாஸ :—எந்த ஸ்திரீக்கு உண்டாயிருக்கின்றதா? நன்கு கேட்டாய். குருபகவான் மனைவியாகிய தாரைக்குக் காமவிகாரமுண்டானது யாரால்? சந்திரனாலல்லவா?

மனோஹாரிணி :—ஆமாண்டீ ஆமாம். தாரைக்கு மான பங்கமுண்டானது பாவியாகிய சந்திரனாலேதான். இதற்கென்ன ஸந்தேஹம்?

[என்று கூறிக்கொண்டே மனோஹாரிணி வருகின்றாள்.]

விலாஸ :—அடீ! மனோஹாரிணீ!! எங்கேடீ போனாய் இன்னேரம் என்னை வரச்சொல்லிவிட்டு?

மனோ :—விலாஸமுகீ! தயவு செய்து என்னை மன்னிக்கவேண்டும் உன்னை அதிகநேரம் காக்கவைத்ததற்கு. நான் உன்னை வரச்சொல்லியது முற்றும் மறந்து தாய்தந்தையருடன் உத்தியானத்திற்குப் போய்விட்டேன். நல்லவேளை மதுரவாணியம்மாள் வந்து சொன்னாள் நீ வந்திருப்பதாக.

விலாஸ :—ஓகோ! சரிதான். மதுரவாணியம்மாள் சொல்லியிராவிடின் நாங்கள் காத்திருந்து சும்மா போகவேண்டியதே. அவ்வளவு மறதிக்குக் காரணமென்ன? யாராகிலும் ஓர் ராச குமாரனது காம வலையிற் சிக்கினையா என்ன?

மனோ :—விலாஸமுகீ! நீ எல்லோரையும் உன்னுடைய சமத்கார வார்த்தைகளால் விலாஸிகளாக்குவா யென்பது யாவரு மறிந்த விஷயந்தானே! அஃதிருக்கட்டும்; தாரையைப்பற்றி யென்ன பிரஸ்தாபம்?

விலாஸ :—ஒன்றுமில்லை. இந்த ஸஞ்சிகையில் ஒரு செய்யுளிருந்தது. அதை வாசிக்கவே அதற்குச் சம்பந்தமாய்த் தாரையைப்பற்றிப் பேச நேர்ந்தது. தாரையால் சந்திரன் கெட்டானா? சந்திரனால் தாரை கெட்டாளா?

மனோ :—பாவியாகிய சந்திரனால்தான் தாரை கெட்டாள் என்று நான் வரும்போதே சொன்னேனே. என்ன செய்யுள் அது? காட்டு பார்ப்போம்.

[வாங்கிப் பார்க்கின்றாள்.]

விலாஸ :—கேட்டாயா ஞானம்பிகை! மனோஹாரிணி கூறுவதை. இனி யென்ன சொல்லுகிறாய்?

ஞானம் :—மனோஹாரிணிதான் வந்து விட்டாளே. இனி மேலென்ன. அவள் வருவதற்குள் நீ போய்விடப்போகிறாயே என்றுதான் உன்னோடு எதிர்வாத மிட்டேன். இனி யென்ன? நீயாச்சு அவளாச்சு.

விலாஸ :—சரி சரி! அவ்வளவு தானா? புருஷர்களுக்காக நீ பரிந்து பேசுகிறா யென்றல்லவோ நினைத்தேன் நான். என்னடி! அந்தப் பக்கம் பார்க்கின்றாயே இப்படி திரும்பு.

ஞானம் :—(உற்றுப் பார்த்து) அம்மா! மனோஹாரிணி! இதோ பார்த்தீர்களா மதுரவாணியம்மாள் வருகிறாள். பின்னால் வருவது குலகுரு தர்மசீலரைப்போல் தோன்றுகின்றது பாருங்கள்.

[யாவரும் பார்க்கின்றார்கள்.]

மனோ :—ஆமாண்டி ஆம். (யாவரும் ஒருபுறமாய் ஒதுங்கி நின்று கை கூப்பி நமஸ்கரிக்கின்றார்கள்.)

தர்மசீலர்:—மங்களானி பவந்து. யார் அது! விலாஸமுகியா !!
சரி சரி! நீயும் வந்திருக்கிருயா?

விலாஸ:—ஸ்வாமீ! இப்பொழுதுதான் வந்தேன்.

தர்மசீலர்:—சரிதான். வரவேண்டியதுதானே! ஒரே வயதுடையவர்கள்; இவள் ராஜ புத்திரி. நீ மந்திரி மகள். இருவரும் ஸ்நேகமாய் இருப்பது ஸகஜம்தானே. மேலும் இருவரும் நன்கு வாசித்தவர்கள்.

மனே:—ஸ்வாமி! தாங்கள் இந்த மேடையின்மேல் உட்காருங்கள். (மதுரவாணியை நோக்கி) அம்மா தாங்கள் இவர்களது வரவைச் சொல்லி யிராவிடில் நான் இன்று விலாஸமுகியைப் பார்த்திருக்கவே முடியாது. தாங்களும் இருக்கலாமே.

மதுர:—என்றைக்கும் வராதவள் வந்தாளே யென்றுதான் உன்னேடு சொல்ல வந்தேன். நீ வருகிறவரையில் விலாஸமுகி இருந்தாளோ இல்லையோ வெனத்தெரிந்து கொள்ளவேதான் மறுபடியும் இங்கு வந்தேன். சரி! நான் போய்வரட்டுமா? இராணியம்மாளும் சீக்கிரம் வந்துவிடுவார்கள். (புறப்படுகின்ருள்)

மனே:—அதென்ன வந்ததே போகவேண்டு மென்கிறீர்களே? சற்று உட்காருங்கள்; போகலாம். (தர்மசீலரை நோக்கி) ஸ்வாமீ! தங்களுடைய வரவு யாதோ வொரு விசேஷத்தை யுடையதாகவே யிருக்கவேண்டுமென நினைக்கின்றேன்.

தர்மசீலர்:—அம்மா! மனேஹாரிணி!! அப்படி யொன்றுமில்லை. சும்மாதான் வந்தேன். உன்னுடைய வாசிப்பு எம்மட்டிலிருக்கின்றது? எப்பொழுதும் புஸ்தகமுங் கையுமாகவே இருக்கின்ருப்போல் தோன்றுகின்றது.

உனக்குத் தகுந்த மணவாளன் அமைய ஸர்வேஸ்வரன் அருள்புரிய வேண்டும். இதுதான் என் பிரார்த்தனை.

விலாஸ :—ஸ்வாமீ! பெண்களுக்கு எவ்வளவு வாசிப்பு இருந்தாலும் என்ன பயன்? ஸ்திரீ தூஷணை சற்ருகிலும் நிவர்த்தியாகப் போகின்றதா என்ன?

தர்ம :—என்ன விலாஸமுகி! நீ சொல்லுவது எனக்கு விளங்கவில்லையே. ஸ்திரீ தூஷணை யென்ன?

மனே :—ஸ்வாமீ! அவள் இப்படித்தான் ஏதாகிலும் ஒன்றைச் சொல்லிக்கொண்டே யிருப்பாள். அவற்றிற்கெல்லாம் பதிலுரைப்பது முடியாத காரியம். தாங்கள் வந்த விஷயத்தைச் சொல்லுங்கள்.

தர்ம :—மனோஹாரிணீ! அப்படிச் சொல்லாதே. அவள் கேட்கும் கேள்விகள் தகுந்தனவாகவேதான் இருக்கும். விலாஸமுகி! என்ன சொன்னாய்?

விலாஸ :—ஸ்வாமீ! ஒன்றுமில்லை. இந்த ஸஞ்சிகையில் ஒரு செய்யுளைப் பார்த்தேன். அதில் ஸ்திரீகளைத் தூஷித்திருக்கின்றது. ஏன் ஸ்திரீகள் ஆடவரால் தூஷிக்கப் படவேண்டும்?

தர்ம :—ஏதோ அந்த செய்யுளை வாசி. கேட்போம்.

விலாஸ :—தூமகேது........................நரகமு மில்லையால்"
(என்று வாசிக்கின்ருள்.)

தர்ம :—இந்த செய்யுளா! கம்பராமாயணச் செய்யுளல்லவா? இதில் என்ன ஒன்றும் தூஷணையாகக் காணப்படவில்லையே?

விலாஸ :—காணப்படாது! காணப்படாது!! புருஷர்களுக்கு ஸ்திரீ தூஷணை தூஷணையாகத் தோன்றுமா?

தர்ம :—விலாஸமுகி ! அப்படியல்ல. மேலே கூறிய செய்யுளில் பின் இரண்டடிகள் உடன்பாடுதானே உங்களுக்கு ?

விலாஸ :—(யோசித்து) ஆம் உடன்பாடுதான்.

தர்ம :—காமம் ஸ்திரீகளால் உண்டாகின்றதென்று ஆடவர் கூறுவதால் அது புருஷர்களால்தான்உண்டாகிறதென்று ஸ்திரீகளும் சொல்லக்கூடும். ஏனெனின், ஸ்திரீபுமான் களில்ஒருவரையின்றி ஒருவருக்குக்காமமுண்டாவதற்கு நிமித்தமேயின்றுதலால். ஆகவே காமம் பழிக்கப்படு கின்றபோது அது ஸ்திரீகளால் வெளிப்படுகின்ற தென்று நினைக்கும் புருஷர்கள் ஸ்திரீகளைத் தூஷிப்பது ஸகஜந்தானே ?

விலாஸ :—ஆம் ; அங்ஙனமே அது புருஷர்களால் வெளிப் படுகின்றதென நினைக்கும் ஸ்திரீகள் புருஷரைத் தூஷிப்பதும் ஸகஜந்தானே ?

தர்ம :—ஸகஜந்தான். நியாயமுந்தான். இதில் என்ன ஆக்ஷே பம் ? மேற்கூறிய செய்யுளில் ஸ்திரீ தூஷணையேயில்லை. மற்றோ ஸ்திரீபுமான் இருவர்களாலும் தூஷிக்கப்படும் காம தூஷணையே இருக்கின்றது. அல்லவா ?

மனோ :—விலாஸமுகி ! பார்த்தாயா உன்னுடைய வாதம் எங்கேயோ பறந்தோடிவிட்டது இவர் முன்.

விலாஸ :—என்ன ! பறந்தோடிவிட்டதா ? ஒருகாலுமில்லை. அந்த தூஷணையில் பாதி புருடர்க்கும் உண்டென்று ஒத்துக்கொண்டாரே. சிவப்பு நிறத்திற்கு மஞ்சள் மாத்திரந்தான் காரணமென்று யாராகிலும் கூறுவாரோ? சுண்ணும்பும் காரணம்தானே. சரி அஃதிருக்கட்டும். (தர்மசீலரை நோக்கி) ஸ்வாமீ ! தாங்கள் இவ்வளவு தூரம்

வந்ததற்கு என்ன காரணமென்று நான் அறிய விரும்பலாமா?

தர்ம:—விலாஸமுகி! ஒரு காரியத்தை யுத்தேசித்து இங்கு வந்தேன். அப்படி வந்தவன் இரண்டு காரியங்களை முடித்துக்கொண்டு போக விச்சிக்கின்றேன்.

விலாஸ:—அஃதியல்புதானே அறிவுடையோருக்கு? என்ன காரியமது? நான் கேட்கலாமா?

தர்ம:—என்ன இப்படி கேட்கிருய்? விலாஸமுகீ! மனமறியாத நினைப்புமுண்டோ? நீயும் மனோஹாரிணியும் ஒரே வயதுள்ளவர்களல்லவா? உங்களுக்குப் பதினைந்து பூர்த்தியாய்ப் பதினாருவது வயதும் வந்துவிட்டது. ஆதலால் இன்னும் விவாகப் பிரயத்தனம் செய்யாமல் இருப்பது அழகா? உங்களுடைய மனோபாவத்தை யறிந்து நீங்கள் வரிக்கும்வரர்களை நிச்சயித்துக்கொண்டு போவதற்காகவே யானிங்கு வந்தது. உங்கள் எண்ணங்களை என்னிடம் வெளிப்படுத்த உங்களுக்கு சங்கோசமிராதென்றே நினைக்கின்றேன்.

விலாஸ:—ஸ்வாமீ! தங்களிடத்தில் எங்களுக்கென்ன ஸங்கோசம்? தாங்களென்ன முகமறியாதவரா? (மனோஹாரிணியை நோக்கி) மனோஹாரிணீ! நீ எந்த ராஜகுமாரனை மணக்க இச்சிக்கின்ருய்? சொல். நமது குரு கேட்கின்ருரே.

மனோ:—விலாஸமுகி! நாமேன் ஒரு வாலிபனை இச்சிக்க வேண்டும்? துன்பமுண்டாக்கும் விஷயத்தை யாராகிலும் இச்சிப்பார்களா?

விலாஸ:—ஸ்வாமி! மனோஹாரிணியின் வார்த்தைகளிருக்கட்டும் ஒருபுறம். பாம்பிற்கு மனிதரைக் கடிக்க

வேண்டுமென்கிற இச்சையுண்டானாலும், மனிதருக்குப் பாம்பினால் கடிக்கப்பட வேண்டுமென்னும் இச்சையுண் டாகுமோ?

தர்ம :—உண்டாகாது.

விலாஸ :—அங்ஙனமே ஸ்திரீகள் புருடர்களை மணக்க விச் சித்தாலும் "ஸ்திரீகளே துன்பகாரணமா" மென்று நினைக்கும் புருஷர்கள் ஸ்திரீகளை மணக்க இச்சிப்பார் களோ?

தர்ம :—இச்சியார்கள்.

மனோ :—ஆதலால்தான் "நாமேன் ஒரு வாலிபனை மணக்க இச்சிக்க வேண்டும்" என்று சொன்னேன். புருஷர் களால்தானே ஸ்திரீகளுக்குக் கெடுதியை யுண்டாக் கும் காமம் உண்டாகின்றது? துன்பந்தரும் ஒன்றை யறிவுடையோர் வேண்டி இச்சிப்பார்களோ? ஆ! கஷ்டம்!!

தர்ம :—மனோஹாரிணீ! அப்படியன்று. ஸ்திரீகள் அவ சியம் ஒரு புருஷனை மணந்தே தீரவேண்டும். இது சாஸ்திர ஸம்மதம். ஸ்திரீகள் விவாகம் செய்துகொள் ளாமலிருந்ததாக எந்தப் புராணத்திலாவது சொல்லப் பட்டிருக்கின்றதா? இஃதுனக்குத் தெரியாத விஷய மன்றே. யாக்ஞவல்க்யருடைய மனைவிகள் காத்யாயனி மைத்ரேயிகளாவர். இவ்விருவருள் மைத்ரேயி யென் பவள் பிரஹ்ம ஞானத்தை யடைந்திருந்ததாக உப நிஷத்துக்கள் கூறுகின்றன. இது உனக்குத் தெரி யாததா?

மைத்ரேயி ஏன் விவாஹம் செய்து கொண்டாள்?

மனோ :—ஸ்வாமீ! தாங்கள் கூறுவது ஸரியே; ஆயினும் விவாஹ விஷயத்தில் எங்கள் மனம் திருப்தியாய்ப் பிரவர்த்திக்கவில்லையே.

விலாஸ :—ஸ்வாமீ! தாங்கள் "ஸ்திரீகள் அவசியம் விவாகம் செய்து கொள்ளத்தான் வேண்டுமென்று சொல்லுகின்றீர்களே. ஏன் "ஔவை" விவாகம் செய்து கொள்ளவில்லை? அவர்கள் சாஸ்திரம் அறியாதவர்களா?

தர்ம :—அம்மா விலாஸமுகி! நீ கேட்பது ஸரியே. இதில் அநேக ரகஸ்யங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் உங்களுக்கு எடுத்துக் கூறப்புகின் நேரமாகும். ஸந்தியா வந்தனத்திற்குப் போதாய்விட்டது. யான் செல்கின்றேன். நீங்கள் ஆழ்ந்து யோசித்துச் சொல்லுங்கள் இன்ன அரசகுமாரனை இச்சிப்பதாக. போகட்டுமா?

விலாஸ :—
மனோ :— } ஸ்வாமீ! என்ன யோசனை? யோசிக்கவேண்டியதேயில்லை. எங்களுக்கு விவாகமே வேண்டாம். இதுவே எங்களது தீர்மானம். ஸந்தியாவந்தனத்துக்கு நேரமாயிற்று, போய் வாருங்கள். அநேக நமஸ்காரம். (தர்மசீலர் போகின்றார்)

மதுரவாணி :—அம்மா மனோஹாரிணீ! என்ன இன்னேரம் இங்கேயே உட்கார்ந்து விட்டேனே! உங்கள் வார்த்தைகள் என் மனதை யிழுத்து விட்டன. நானும் போகின்றேன். விலாஸமுகி! போய் வரட்டுமா?

விலாஸ :—போய் வாருங்கள். (மதுரவாணி போகின்றாள்)

மனோ :—விலாஸமுகி! யான் உன்னோடு அநேக விஷயங்களைப்பற்றிப் பேச வேண்டுமென்று நினைத்து உன்னை

யின்று வரச்சொன்னது. இன்று வீணுய்ப் போய்விட்டது. நீ அடிக்கடி இங்கு வந்து கொண்டிரேன்.

விலாஸ :—அப்படியே யாகட்டும். "சித்விலாஸ" ஸஞ்சிகையைத் தா. வாசித்து விட்டு அனுப்புகிறேன்.

மனே :—ஆஹா ! எடுத்துக்கொண்டு போ. பொழுதாய் விட்டது. ஞானம்பிகையையும் அழைத்துக்கொண்டு போ. (யாவரும் போகின்ருர்கள்)

இரண்டாவது அங்கம் முற்றிற்று.

மூன்றாவது அங்கம்

முதற் காட்சி

இடம்:—காசிமா நகரம்

அரண்மனையில் ஒரு தனி அறை

காலம் :—காலை

பாத்திரங்கள் :—ஞானப்பிரகாசன், குணசீலன், ஹாஸ்யாநந்தர்.

ஞான :—அப்பா குணசீலா! "பெண்களின் இருப்பிடம் பேய்களினிருப்பு" என்றொரு மூதுரை யுண்டல்லவா? இவ்வுரை பேய்களும் பெண்களும் ஒன்றெனப் போதிக்க ஏற்பட்டதேயாகும். எங்ஙனம் பேய் பிடித்தவன் பேயின் இஷ்டப்படி ஆடிக் குதித்துப் பல்லையிளித்துப் பாடுகின்றானோ அங்ஙனமே ஸ்திரீகளின் மோகத்தில் அழுந்தியவன் சித்த ஸ்வாதீனமற்று அவளிஷ்டப் படியே நடக்கிறான். அந்தோ! என்ன ஆச்சரியம்!! என்ன மதிஹீனம்!!

குணசீல :—நண்ப! பெண்கள் பேய்களுக்குச் சமானமென்பதில் யானும் உனது அபிப்பிராயத்திற்கு உடன்படுவேன்; ஆயினும் எல்லா ஸ்திரீகளையும் பேய்களென்று தீர்மானிப்பது சரியன்று. ஸ்திரீகளில் எத்தனையோ பேர் மஹா ஞானிகளாய் விளங்கி யிருந்தார்கள், விளங்குகிறார்கள், நாளைக்கும் விளங்குவார்கள். அவர்கள் பேய்களாவார்களா? தாங்கள் வாஸிஷ்டத்தில் சிகித்துவஜன் கதையைப் படித்திருக்கிறீர்களன்றோ? சூடாலையைப் பேயென்று கூறுவீர்களா? தனது கண

வணுகிய சிகித்துவஜனைப் பிடித்திருந்த அஞ்ஞானமாகிய பேயை ஓட்ட வந்த மஹா மாந்த்ரிகி யென்றல்லவா சொல்லவேண்டும் அந்தம்மாளை! அன்றியும், ஸத்திய வானது உயிரைக் காலனிடத்திலிருந்து மறுபடியும் பெற்ற ஸாவித்திரியை யென்னவென்று கூறுவது? மேலும் நளாயினி, ஸீதை, தமயந்தி, அருந்ததி, அந ஸூயை, கார்க்கி, மைத்ரேயி முதலானவர்களை யெப் படி சொல்லலாம்? ஆதலால் ஸ்திரீகளிலும் ஞானிகள் இருக்கிறார்கள்; யோகினிகளிருக்கிறார்கள்; பதிவிரதை கள் இருக்கிறார்கள்; ஆதலால் ஸ்திரீகள் யாவரும் பேய்களல்லர்; புருஷர்கள் யாவருமே யோக்கியரல் லர். அநேக ஸ்திரீகள் புருஷர்களால் பலவித துன் பங்களுக்கு இலக்கானார்களென்று நாம் புராணங்களில் வாசிக்கவில்லையா? அஹல்யை கற்பாறையாக சபிக்கப் பட்டதேன்? சீதை இலங்கையில் அரக்க மாதர்களி னிடையே யிருந்து பல துன்பங்களை யடைந்ததேன்?

ஞான:—குணசிலா! நீ கூறுவதுண்மையே. எல்லா ஸ்திரீகளும் பழிப்பிற் கிலக்காகார்களே; ஆனாலும் எந்த ஸ்திரீ துன்பத்திற்குக்காரணமா யிருக்கின்றாளோ அவளேதான் ஸ்திரீ யெனப்படுவாள். எந்த விதை யானது முளைக்கும் சக்தியை யுடையதாமோ அதைத்தான் விதை யென்போம். நீ கூறிய அஹல்யை யும் சீதையும் துன்பப்பட்டது தங்களது பெண் தன்மையினாலேயாம். அவர்களிடத்தில் பெண் தன்மை யில்லாவிடில், இந்திரனும் இராவணனும் ஏன் அயோக்கியராவார்கள்? "காமத்தாலிந்திரன் கலக்க மெய்தினன், காமத்தாலிராவணன் கருத்தழிந்தனன்" என்று ஆன்றோர் கூறுவது நீ யறியாயோ? காமம் யாரிடத்திலுள்ளது?

குணசீலன் :— ஆருயிர்த்தோழ! காமத்தால் கவலையுற்றழிந் தவர்கள் கணக்கற்றவரே. ஆயினும், காமத்திற்குக் காரணம் ஸ்திரீகளே என்று நீர் கூறுவது சரியன்று. தங்கள் காமத்திற்குத் தங்களிடத்திலுள்ள ஆண்மையே காரணம். "வேதவியாஸருடைய புத்திரன் சுகப் பிரஹ்மம் ஒரு நாள் காட்டிற்குச் சென்றார். அவர் பின் வியாஸர் தொடர்ந்து சென்றார். வழியில் ஒரு தடாகத் தில் சிலரிஷி பத்தினிகள் ஆடையின்றி ஸ்நானம் செய்து கொண்டிருக்க, அவ்வழியே சென்ற சுகப்பிரஹ்மத் தைப் பார்த்து அவர்களுக்கு ஒருவித விகற்பமும் உண்டாகவில்லையாம். உடனே வியாஸர் செல்லுகையில் பரபரப்புடன் ஓடி ஆடைகளைத் தரித்துக் கொண்டார் கள்" என்று பாகவதத்தில் கூறப்பட்டிருக்கின்றது. சுகதேவர் ஆண்மகனல்லவா? ஏன் அவர் வரும்போது அந்த ஸ்திரீகளுக்கு விகற்பம் ஏற்படவில்லை? ஸ்திரீ களை நிர்வாணமாய்ப் பார்த்தும் அவருடைய மனது விகற்பமடையாததனாலன்றோ? இங்ஙனம் அவர் விகற் பங் கொள்ளாததனால் அவரிடத்தில் ஆண்மை யில்லை யென்று அநுமானிக்கப் படுகின்றதல்லவா? தன் தாயையும் ஸகோதரியையும் புத்திரியையும் பார்த்தால் மனத்தில் விகற்பமுண்டாகின்றதா? அங்ஙனமே எல்லா ஸ்திரீகளையும் தாயாராகவும் ஸஹோதரியாகவும், புத்திரி யாகவும் பாவிக்கில் என்ன துன்பமுண்டாகும்? ஆத லால் ஸ்திரீகள் பழிப்பிற்குப் பாத்திரரல்லரென்பது எனது தீர்மானம்.

ஞான :—அப்பா குணசீலா! நன்கு கூறினாய். ஆயினும் உனது வார்த்தைகளை முற்றும் அங்கீகரிக்க முடியாது.

"கால் காட்டிக் கை காட்டிக் கண்கள் முகங்காட்டி
மால்காட்டும் மங்கையரை மறந்திருப்ப தெக்காலம்"

என்று பற்றனைத்து மொழித்தபத்ரகிரியாரின் வார்த்தைகளுக்கு யாது பொருள்? பத்ரகிரியார் உலகத்து மங்கையரைத் தாய்களாகவும் ஸஹோதரிகளாகவும், புத்திரிகளாகவும் பாவிக்கச் சக்தியற்றவரா?

குணசீலன்:—நட்பிற்குரிய ஞானப்பிரகாசா! "மங்கையரை மறந்திருப்ப தெக்காலம்" என்பதற்கு மங்கையரது கலவியை மறந்திருப்ப தெக்காலம் என்றே பொருள் செய்தல் வேண்டும்.

ஹாஸ்யா:—மங்கையரை மறந்திருப்பது எக்காலம்! எந்தக் காலத்திலுமில்லை. இதிலென்ன ஸந்தேகம் உங்களுக்கு? நானும் வரலாமா உள்ளே?

ஞான:—யார்? ஹாஸ்யாநந்தரா? வாருங்கள்! வாருங்கள்!! அதிக நாளாயிற்று தங்களைப் பார்த்து. (**ஹாஸ்யாநந்தர் உள்ளே பிரவேசிக்கின்றார்**) என்ன ஹாஸ்யாநந்தரே! காலையிலேயே புறப்பட்டுவிட்டீரே?

ஹாஸ்யா:—ஒன்றுமில்லை. உங்களைப் பார்த்து இரண்டு மூன்று நாளாயிற்றே பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்.

ஞான:—சரி! உட்காருங்கள் (**உட்காருகின்றார்**)

குணசீ:—ஞானப்பிரகாசா! எனக்கு இரண்டொரு ஸந்தேகங்கள் இருக்கின்றன. ஹாஸ்யாநந்தரும் வந்திருக்கின்றாரே; கேட்கட்டுமா?

ஞான:—உனக்குற்ற சந்தேகங்களை என்னால் தீர்க்கமுடியுமா?

குணசீ:—முடியுமென்றே நினைக்கின்றேன்.

ஞான :—அப்படியானல் கேட்பாய். ஹாஸ்யாநந்தரே! தாங்களும் கவனியுங்கள்.

குணசீலன் :—உலகம் ஸத்தா அஸத்தா? விதியை வெல்ல முடியுமா?

ஞான :—அப்பா குணசிலா! உலகம் ஸத்துமல்ல; அஸத்துமல்ல. இவை யிரண்டிற்கும் வேறு என்றும், விதியை வெல்லுதல் அரிதென்றும் கூறுவர் பெரியோர். (ஞானப்பிரகாசன் ஹாஸ்யாநந்தர் முகம் நோக்குகினருன்)

ஹாஸ்யா :—அப்பா ஞானப்பிரகாசா! இச்சம்பந்தமாக நான் சிறிது நேரம் பேசலாமா?

ஞான :—நன்ருய்ப் பேசலாம்; சிறிது நேரமென்ன தங்களுக்கு எவ்வளவு நேரம் பேசலாமோ அவ்வளவு நேரம் பேசுங்கள். நாங்களும் தங்கள் வார்த்தைகளைக் கேட்டு அதிக நாளாயிற்று. தங்களுக்கு வேறு காரியமில்லாவிடில் இன்று முழுமையும் எங்களுடனேயே இருக்கக் கோருகிருேம்.

ஹாஸ்யா :—எனக்கென்ன வேலை யிருக்கின்றது. உங்களிஷ்டப்படியே இன்று முழுவதும் உங்களுடனேயே இருக்கின்றேன்.

"உலகம் பொய்யா மெய்யா?" என்பதைப்பற்றிச் சில நாட்களுக்கு முன் ஒரு துறவி இப்பட்டணத்தில் பிரஸங்கித்து உலகம் பொய்யே என்று தீர்மானித்தார். அச்சமயம் ஒரு யானை தன் கட்டினின்றும் விடுபட்டு ஜனங்களைத் துறத்தி வந்தது. அச்சமயத்தில் அங்கே பிரஸிங்கித்துக் கொண்டிருந்த துறவியும் மற்றவர்களைப் போலவே யானைக்குப் பயந்து பரபரப்புடன் ஓடி ஒரு கிணற்றில் விழுந்தார். உடனே பிரஸங்கம் கேட்டுக்

கொண்டிருந்தவர்களெல்லாம் கைகொட்டி நகைத்து "ஐயையோ! இதென்ன ஆச்சரியம்! உலகம் பொய் யென்று இந்நேரம் பிரஸிங்கித்த துறவியும் மற்றவர் களைப் போலவே யானைக்குப் பயந்து ஓடிக் கிணற்றில் விழுந்தாரே! என்று ஏளனம் செய்யத் தொடங்கினார் கள். அதற்கு அத்துறவி தன்னைக் கிணற்றினின்றும் வெளியேற்றினால் தக்க ஸமாதானம் கூறுவதாய்ச் சொன்னார். ஜனங்கள் அங்ஙனமே அவரை அக்கிணற்றி னின்றும் கரை யேற்றினார்கள். பிறகு அத்துறவி "உலகம் பொய்யே யென்பதில் யாதோர் ஆக்ஷேபணையு மின்று; யானையும் பொய்; துறத்தியதும் பொய்; யான் கிணற்றில் விழுந்ததும் பொய்;" என்று கூறினார். உடனே அங்கிருந்த ஒருவன் மறுபடியும் அத்துறவி யைக் கிணற்றில் தள்ளிவிட்டான். அப்போது "அடா பாபீ! என் என்னை மறுபடியும் கிணற்றில் தள்ளி னாய்?" என்று அத்துறவி கூக்குரலிட்டார். அதற்கு அந்த மனிதன் ஸ்வாமீ! "யானும் பொய், தாங்களும் பொய், கிணறும் பொய்; யான் தங்களைக் கிணற்றில் தள்ளியதும் பொய்; தாங்கள் இப்பொழுது கிணற்றில் விழுந்ததும் பொய்" என்றான். அதற்கு அத்துறவி தன்னை மீண்டும் கரை யேற்றினால் அதற்கும்தக்க சமா தானங் கூறுவதாகச் சொல்ல, மறுபடியும் அத்துறவி யைக் கரை யேற்றினார்கள்.

பிறகு அச்சன்னியாசி "இந்தச் சரீரமும், அவய வங்களும், இந்திரியங்களும் பொய்யாகையால் அவற் றின் காரியங்களும் பொய்யேயாகும். வார்த்தைகள் வாக்கின் காரியமாதலின் அவைகளும் பொய்யே. நான் முன்னர் "உலகம் பொய்" யென்று கூறினேனல்ல

வா? அந்த வார்த்தையும் அதாவது "உலகம் பொய்" என்பதும் பொய்யே. ஆகவே உலகம் மெய்யென்று ஸித்திக்கின்றது. ஆதலால் நான் கிணற்றில் விழுந்தது மெய்யே என்றான். அதற்கு மற்றொருவன் அத்துற வியை நோக்கி "தாங்கள் இப்பொழுது "மெய்" என்று கூறுவதும், முன்னர் பொய்யென்று கூறின வாக்கின் காரியமாகவே யிருத்தலின், எங்ஙனம் பொய் யென்பது மெய்யாயிற்றோ அங்ஙனமே மெய்யென்பதும் பொய்யாகாதோ?" என்று கேட்டான். அதற்கு அத் துறவி யொன்றுங் கூறாது மௌனமாய்ச் சென்றார். ஆதலால் உலகம் மெய்யென்பதும் பொய்யென்பதும் வார்த்தைகளில் இருக்கின்றனவேயன்றி வேறல்ல. சொல்லுகிறபடி அநுஷ்டித்தல் அவசியம்.

ஞான:—ஹாஸ்யாநந்தரே! தாங்கள் கூறுவது முற்றும் உண்மையே. சொல்லொன்றும் நடத்தையொன்றுமா யிருப்பதில் என்ன உபயோகம்? நானும் எத்தனையோ போலித்துறவிகளைப் பார்த்திருக்கிறேன்.

ஹாஸ்யா:—ஞானப்பிரகாசா! "விதியை வெல்லுவது அரிது" என்றல்லவா கூறினாய்?

ஞான:—ஆம்.

ஹாஸ்யா:—விதி யென்றால் என்ன?

ஞான:—பிராரப்தம் என்று கூறுவர்; இவ்வுலகில், இச் சரீரத்தின் மூலமாய் எந்த எந்த விதமான சுகதுக்கங்கள் எவரெவர் மூலமாய் அனுபவிக்க வேண்டுமோ அததற்குக் காரணமாயுள்ளது யாதோ அதுவே பிராரப்தம் ஆகும்.

ஹாஸ்யா:—உலகம் என்பது யாது?

ஞானப் :—மெய், வாய், கண், நாக்கு, மூக்கு என்னும் ஐம்பு லன்களின் மூலமாயும் மனத்தின் மூலமாயும் அறியத் தக்க விஷயங்களின் தொகுதியே உலகமாம்.

ஹாஸ்யா :—உலகம் எத்தகையதென்று கூறினுய் ?

ஞான :—ஸ்வப்நத்திற் ருேன்றும் உலகம் எத்தன்மைத்தோ அத்தன்மைத்தேயாம்.

ஹாஸ்யா :—ஸ்வப்ந உலகம் பொய்யானுல்,

ஞான :—இதோ காணப்படும் இவ்வுலகமும் பொய்யே.

ஹாஸ்யா :—இவ்வுலகம் பொய்யாகில், இதன் ஒரு பகுதி யான சுக துக்கங்களின் அடைவிற்குக் காரணமான அநுகூலப் பிரதிகூல பதார்த்தங்களும், அநுபவத்திற் குக் காரணமான விதியும் பொய்யாக வேண்டுமல்லவா ?

ஞான :—ஆம் விதியும் பொய்யே.

ஹாஸ்யா :—“விதியை வெல்லுதல் அரிது” என்றனேயே இது முயற்கொம்பைச் சம்பாதித்தல் அரிது என்பதை யொக்குமல்லவா ?

ஞான :—ஹாஸ்யாநந்தரே ! ஏது நீர் நன்றுய்த் தர்க்கம் படித் திருக்கின்றுப்போல் இருக்கின்றது. உலகம் முயற் கொம்பைப்போல் அஸத்துப் பொருளல்ல. முக்காலத் திலுமில்லாதது அஸத்து. உலகம் அங்ஙனம் அஸத் துப் பொருளல்ல. உலகம் தோன்றுகின்றது ; இந்திரி யங்களால் அனுபவிக்கப்படுகின்றது ; ஆனுல் ஒரு ஸம யத்தில் அதாவது ஸுஷுப்தியிலும் ஸமாதியிலும் இராததா யிருக்கின்றது ; ஆதலால் உலகம் பொய் யென்று நிச்சயிக்கக்கூடியதா யிருக்கின்றது. இங்

னமே விதியும், உலக விஷயங்களில் ஒன்ருய் இருப்ப தால் பொய்யென்று நிச்சயிக்கக் கூடியதே. ஆயினும்,

“ முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் வலியா ராயினும்
விதியினை யாவரே வெல்லு நீர்மையர்.”

என்று கந்தபுராணங் கூறுவதுபோல அதை வெல்லல் அரிதினும் அரிதேயாம் விவகார காலத்தில்.

ஹாஸ்யா :—ஞானப்பிரகாசா ! நீ இவ்வளவு சாஸ்திரக்ஞன் என்று நான் நினைக்கவில்லை. உன் அறிவு மெச்சத்தக்க தேயாகும். காமன் மகன் காண்டீபனென்றும், இராமன் தகப்பன் ஸமுத்திர ராஜனென்றும் குமரவேளின் தந்தை குதிரைக்காரனென்றும் கூறும் சாஸ்திரம் நீ வாசித்திருக்கின்ருயா ?

ஞான :—ஏது ஹாஸ்யாநந்தரே ! தங்களுடைய சாஸ்திரப் பிரஸங்கத்தை ஆரம்பித்து விட்டீரோ ? சரி ! சரி !! நீரேதான் தங்களுடைய பிரஸங்கத்தை விளக்கவேண்டும். காமனுக்கு மகனுண்டென்று எந்தப் புராணமும் கூறவில்லையே. இராமர் தசரதருக்கல்லவோ பிறந்தார் ? ஸமுத்திர ராஜன் மகனென்பதெப்படி ? குதிரைக்காரனுக்கா முருகக் கடவுள் பிறந்தார் ?

ஹாஸ்யா :—காமன் மகன் காண்டீபன்தான் ; இராமன் தகப்பன் ஸமுத்திரன்தான். சுப்பிரமண்யரின் தகப்பன் குதிரைக்காரன்தான். இவற்றில் என்ன ஸந்தேஹம் ? உண்மையில் யாருக்கும் பிராந்தி ஏற்படுவது ஸஹஜமே. நிருபணம் செய்யட்டுமா ? குணசீலா ! நீ யென்ன சொல்லுகின்றனை ?

குணசீ :—தாங்களே தான் கூறவேண்டும்.

ஹாஸ்யா :—கா - கற்பக விருக்ஷத்திற்கு, மன் - அரசன் (இந்திரன்) இந்திரன் மகன் காண்டீபன் (அர்ச்சுனன்) அல்லவா ?

ஞான }
குணசீ } ஆம் ! ஆம் !!

ஹாஸ்யா :—இரா - இரவிற்கு, மன் - அரசன் சந்திரன் ; இவன் திருப்பாற்கடலிலுதித்தவனல்லவா ?

குணசீ }
ஞான } சரி ! சரி !!

ஹாஸ்யா :—மணிவாசகப் பெருமானுக்காகப் பரம சிவன் குதிரைக்காரனுகச் செல்லவில்லையா ?

ஞான :—ஹாஸ்யாநந்தரே ! தங்களுடைய விகடம் சாஸ்திர ஸம்மதமாகவே யிருக்கின்றது.

ஹாஸ்யா :—என்ன! என்னை அவ்வளவு ஸாமான்யமாய் நினைக்கின்றீரே ! நான் பட்டாபி ராமனுக்குத் தகப்பனல்லவா ?

ஞான :—இதென்ன இது ! கிணறுவெட்ட பூதம் புறப்பட்டது போலிருக்கின்றது. பட்டாபி ராமன் தங்களது மகனுவதெப்படி ?

ஹாஸ்யா :—ஸ்ரீராமரது பட்டாபிஷேக காலத்தில் அவருடைய பாதங்களைத் தாங்கியவர் யார் ?

ஞான :—ஸ்ரீ ஆஞ்சநேயர்.

ஹாஸ்யா :—அவர் யாருடைய புத்திரர் ?

ஞான :—வாயுதேவன் புத்திரரென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஹாஸ்யா :—சரி! நான் ஏன் இங்ஙனம் நொண்டி நொண்டி நடக்கின்றேன் தெரியுமா?

ஞான :—ஸ்வாமீ! தாங்கள் சில நாளைக்கு முன் வாயுப் பிடிப்பினுல் துன்பப்பட்டீர்களென்று கூறி யிருப்பது ஞாபக மிருக்கின்றது.

ஹாஸ்யா :—சரி! இராமனுடைய பாதங்களை ஹநுமான் பிடித்தான்; என் காலை ஹநுமான் தகப்பன் வாயு பிடித்தான். ஆதலால், மகன் தந்தை யென்னும் வேலைக்காரரது சம்பந்தத்தைப்போல், யஜமானர்களுக்கும் சம்பந்த முண்டல்லவா? ஆதலால்தான் நான் பட்டாபிராமனின் தகப்பனென்றேன். இதில் என்ன பொய்? (யாவரும் வயிறு குலுங்கச் சிரிக்கின்ருர்கள்)

குணசீ :—ஸ்வாமீ! அதிக நேரம் ஆய்விட்டது. தாங்கள் சென்று போஜனம் செய்துவிட்டு வாருங்கள். நாங்களும் போஜனத்திற்குப் போகிறோம். பகல் வேஷப் பரசுராமய்யர் ஊரிலில்லையா? பத்துப் பதினைந்து நாளாயிற்று அவரைப்பார்த்து!

ஹாஸ்யா :—ஆமாம். அவர் ஊரில் இல்லை. நான் போய் சீக்கிரம் வருகின்றேன்.

[ஹாஸ்யாநந்தரும் குணசீலனும் போகின்றனர்.]

இரண்டாம் காட்சி

இடம் :—காசிமா நகரம் அக்கிரஹார வீதி. பகல்வேஷப் பரசுராமய்யர் வீட்டுத் தெரு.

காலம் :—நடுப்பகல்.

பாத்திரங்கள் :—அப்துல் கறீம் ஸாஹேப், காவேரியம்மாள், பிச்சுவையர், நாணுவையர், சீனுவையர், சுப்பய்யர் முதலியோர்

[காவேரியம்மாள் சாப்பிட்டுவிட்டு எச்சிலிலையைத் தெருவில் போட்டுவிட்டுக் கையலம்புகின்ருள்.]

அப்துல் :—அரே பாஞ்சோத்! நம்கீ உட்டுட்டு இந்த பொம்மன்கீ பிடிச்சிகினே? இதர் ஆவ்.

[காவேரியம்மாள் கையைப் பிடித்து இழுக்கிருன்]

காவேரி :—அடே துலுக்கப் பாடேலே வைப்பான்! எங் கையை ஏண்டா பிடிக்கிறே? உன்னைக் கட்டையிலே வைக்க. அடே பிச்சு! நாணு! ஓடிவாருங்கோடா. இது என்ன அநியாயம்? ஓ சின்னண்ணு! இப்படி வாருங்களேன்.

பிச்சுவையர் :—(ஓடிவந்து) யாரப்பா ஸாஹேப்?

அப்துல் :—க்யா பொம்மன்? ஏ ஹமாரே ஜோர்.

[கையை நன்ருய்ப் பிடித்துக் கொள்ளுகிருன்]

பிச்சு :—என்ன ஜோர்ரு உனக்கு? கள்ளு ஜோரா? சாராய ஜோரா?

அப்துல் :—அரே பொம்மன்! ஏ அமாரே ஜோர்! தும்கூ. மாலும் நை?

பிச்சு :—அடே இங்கே பொம்மையும் இல்லே குமாலும் இல்லே. கையை விட்ரா (**நெருங்கினன்**)

[அப்துல் கரீம் பிச்சுவையய்ரை யடிக்க கையை ஓங்குகின்ருன், நாணு வையர் அருகே வந்து]

நாணு :—அடே பிச்சு! உன்னேயா அடிக்க வற்ரான் இவன்? காவேரி ஏதாகிலும் சொல்லியிருப்பாளா இவனே? (**காவேரியம்மாளே நோக்கி**) என்னம்மா நீ என்ன சொன்னுய்?

காவேரி :—ஐயோ நாஞென்றும் சொல்லவில்லேயே. எச்செலேயைப் போட்டுக் கையை அலம்பினேன்; இந்தப் படுபாவி வந்தான்; கையைப் பிடிச்சிண்டான். கையை விடமாட்டேன்ருனே. (**திமிறுகிருள்**)

நாணு :—அடே சீனு! சுப்புவைக் கூட்டிண்டு வாடா இங்கே. பரசுராமன் கூட வூரிலில்லே. அவன் இருந்தால் இவன் கன்னம் புளிச்சுப்போகும் இப்போ. வாங்கோடா வாங்கோ. இந்தத் துலுக்கன் நம்ம தெருவிலே வந்து என்ன அக்ரமம் பண்ருன் கேள்வியில்லேயா?

[சீனுவும் சுப்புவும் தொந்தியைத் தூக்க மாட்டாமல் தள்ளாடித் தள்ளாடி ஓடி வருகிருர்கள்.]

அப்துல் :—அரே பொம்மனேம்! ஏ சாகூ தேக்யாஹும்?

[கத்தியைக் காட்டுகிருன்]

[சீனுவும் சுப்புவும் கத்தியைக் கண்டு நடுநடுங்கி அங்கேயே நின்று விடுகிருர்கள். நாணு விரைவாய் ஓடிப்

போய் போலீஸ் கான்ஸ்டேபிலே அழைத்துக்கொண்டு வருகின்ருன்.]

கான்ஸ் :—அடே நீயாற்ரா? பாப்பாத்தி யம்மாளேக் கை பிடித்திழுக்கறவென்.

[கையை விடுவிக்கப் பார்க்கின்ருன்.]

அப்துல் :—அரே! தொட்ரேஹம்கூ? ஹமாரேஹாத்மே கத்தீஹூம் ஏக்மார் தோதுக்டா. ஜாரே ஜாவ்.

கான்ஸ் :—போலீஸ் ஸ்டேஷன் கி ஆவ். சோர் துமே.

[விசில் ஊதுகிருன்]

அப்துல் :—க்யா? சோர்? துமே சோர். ஏ ஹமாரே ஜோர் தேக்யா?

கான்ஸ் :—அரே ஸாயேப். நீ போலீசுக்கு வரமாட்டே?

[என்று தள்ளுகிருன்.]

அப்துல் :—அரே பாஞ்சோத் நம்கி நீ கலீதா கொடுக்கிரு. - ஊம் - (என்று **கன்னத்தில் அறைகிருன்**)

[விசில் சத்தத்தைக் கேட்டு அருகிலிருந்த போலீஸ் ஸ்டேஷனிலிருந்து ஐந்து கான்ஸ்டேபில்கள் வருகிருர்கள்]

வந்த போலீஸ்காரர் :—அரே ஸாஹேப் ஆவ். ராஜாகீ ஆவ். துமாரே சோர்.

[அப்துல் கரீம் காவேரி யம்மாளின் கையை விடாமலே இழுக்கிருன்]

காவேரி :—ஐயா டாணுக்காரரே! இவன் கையில் புழுபுழுக்காதா!! என்னையும் பிடிச்சி இழுக்கிருனே நான் கூடவா வரணும்?

பிச்சு :—அம்மா வாயென் நீயும். உன்னைப் பார்த்தால் ராஜா இவனை நன்ருய் தண்டிப்பார்.

[வீதியில் நாணு, சுப்பு முதலிய யாவ ரும் பின் தொடருகிருர்கள். ஹாஸ் யாநந்தரும் எதிரில் சந்திக்கிருர்.]

ஹாஸ்யா :—பிச்சு! இதென்னடா ஸங்கதி? காவேரிக்கு இந்த வ்யாபாரங்கூட வுண்டா? இது எத்தனை நாளா டா?

பிச்சு :—அடே ஹாஸ்யாநந்தா! சீ!! காவேரி யப்படிப்பட்ட வளல்லடா. யாரோவொரு துலுக்கன் குடிச்சுட்டு வந்து இந்த அக்ரமம் செய்கிருன். அதான் நாங்களெல்லாம் இவனை அரசரண்டே பிடிச்சுண்டு போரோம். நீயும் வாயென். ஆச்சாயில்லையா பழையது காலமே மூக்கே பிடிக்க?

ஹாஸ்யா :—ஆச்சி. (வயிற்றைத் தொட்டுப்பார்த்து) இன்னும் பசிக்கல்லே நானுந்தான் வர்றேனே.

[அவர்களோடு போகிருன்]

அரண்மனை கோலுமண்டபம்

கான்ஸ் :—அரசே! ஜயமுண்டாவதாக! இந்தத் துலுக்கன் நம்முடைய ஸமஸ்தானத்தின் பகல் வேஷப்பரசுராமை யரின் மனைவியைக் கையைப்பிடித்து இழுத்து சொல்லத் தகாத வார்த்தைகளை யெல்லாம் சொல்லுகிருன். இதோ கட்டிக்கொண்டு வந்திருக்கிரோம். இங்கே வர்றபோது கூட அந்தப்பாவி அந்தம்மாள் கையை விடாமலே இழுத்தான். அந்தம்மாளும் வந்திருக்கிருள்.

[இருவரையும் அரசனுக்கெதிரில் நிற்க வைக்கிருன்]

அரசன் :—சுபுத்தீ! இது என்ன அக்கிரமம்! நம்முடைய ராஜ்யத்தில் கூட இப்படி நடக்கின்றனவா? இந்த மிலேச்சனைப்பார்த்தால் அரபி தேசத்தான் போல் தோன்றுகின்றது. என்ன செய்யலாம் இவனை?

சுபுத்தி :—அரசே! இது ஏதோ சூதாகத் தோன்றுகின்றது. ஆயினும் விசாரிப்போம். அப்பா ஸாஹேப்! உனக்கு தமிழ் தெரியுமா? உன் பெயரென்ன?

அப்துல் :—ஸலாம் ஆலேகும் ஸாயபோ! என்கி கொஞ்சம் தமில் தெரியரான். என் பேர் அப்துல் கறீம்.

சுபுத்தி :—நீ ஏன் அந்த அம்மாள் கையைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய்?

அப்துல் :—இந்தம்மா நம்கீ பொஞ்சாதீ இருக்காங்கோ ஸாமீ.

ஸுபுத்தி :—என்ன! அந்தம்மா பிராம்மண ஸ்திரீயாச்சே. உன் பெண்ஜாதி எப்படி ஆவாள்?

காவேரி :—(துலுக்கனைப் பார்த்து) அடே பாவி சண்டாளா! தகாத வார்த்தைகளைக் கூறும் உன் நாக்கு அழுகாதா?

அப்துல் :—சாயபோ! இந்த பொம்பளே அமாரே ஜோர். இல்லாச்சினா நம் கயித்தே வெட்டுடுங்கோ.

சுபுத்தி :—(தனக்குள்) இதென்ன ஆச்சர்யம்! இந்தம்மாள் தன் பெண்சாதியென்று ரூபிக்காவிட்டால் மரண தண்டனைக்கும் உட்படுகிறானமே! ஐயோ பாவம் இவன் ஒரு வேளை பயித்தியக்காரனா யிருப்பானோ? (பிரகாசமாய்) மன்னர் பெருமானே! இவன் பைத்தியக்காரனென நினைக்கின்றேன்.

அப்துல் :—திவானா? திவான்ஜீ! ஹமாரா நை. (அரசனை நோக்கி) ராஜாதிராஜ ரணரங்க விஜயனே! தாங்க

என்ருே நான் போடும் பகல் வேஷத்தைப் பார்த்துக் களித்துப் பரிசளிக்கத்தக்கவர் ? என் பெண்சாதியாகிய இக் கழுதையா என் வேஷத்தைக் கண்டு களிக்கத்தக்கவள் ?

[தாடியையும் மீசையையும் பிடுங்கி எறிகின்ருன். காவேரியம்மாள், தன் புருஷனென்று அறிந்து வெட்கத்தோடு ஒரு புறமாய் ஒதுங்கி நிற்கின்ருள். சபையிலுள்ள யாவரும் "பகல்வேஷ பரசுராம ஐயரா" வென்று வயிறு குலுங்கச் சிரிக்கின்ருர்கள். அரசரும் சுபுத்தியும் கை கொட்டி நகைக்கின்ருர்கள்.]

அரசன் :—பகல் வேஷ பரசுராமையயரே! உமக்கு இப்பொழுது ஒரு தண்டனை விதித்திருக்கின்ருேம். அது யாதெனில் நீர் எந்தக் கையால் அந்தம்மாள் கையைப் பிடித்து இழுத்தீரோ அந்தக் கைக்குப் பொன் விலங்கு போடும்படி.

[சேவகனை நோக்கி, அடே சேவகா! கஜானுவிலிருந்து ஒரு தோடா கொண்டுவா. சேவகன் ஓடுகிருன்]

சுபுத்தி :—ஏன் பரசுராமய்யரே! "என் பெண்சாதியாகிய இந்தக் கழுதையா என் வேஷத்தைக் கண்டு களிக்கத் தக்கவள்" என்று கூறினீரே அது என்ன ?

பரசுராமய்யர் :—பிரபோ! சில நாளைக்கு முன் என் மனைவியாகிய இவள் நான் போடும் பகல் வேஷத்தைப் பார்க்க இச்சித்தாள். அப்படியே ஆகட்டும் என்று நான் அவளுக்கு வாக்களித்தேன். இன்று அவளுக்கு என்

சாமர்த்தியத்தைக் காட்டவேதான் துலுக்க வேடம் தரித்து சமுகத்தில் மனு செய்துகொண்டேன். இதுவே யன்றி வேறொன்றுமில்லை.

[சேவகன் தோடா கொண்டுவந்து வைக்கிறான்]

சுபுத்தி:—அரசே! இந்தத் தோடாவைப் பரசுராமய்யருக்கு அளிப்போமா?

அரசர்:—ஆஹா! (தோடாவைக் கொடுக்கின்றார்) பரசுராமய்யரே! தங்களுடைய மனைவி இன்றைக்கு துலுக்க பீபி ஆய்விட்டபடியால் கோஷாவை யனுஸரிக்க வேண்டுமல்லவா? பல பேர் பார்க்கத் தெருவில் நடப்பது கூடுமா? ஆதலால் ஒரு பல்லக்கையும் உங்களுக்கு அளிக்கின்றேன்.

[சேவகனைப் பார்த்து]

சேவகா! பல்லக்கைத் தயார் செய்து இவர்களை வீட்டிற்கு அனுப்பும்படி கமாம்ஸுக்குத் தெரிவி.

[சேவகன் போகிறான். பல்லக்கு தயார் ஆயிற்று.]

பரசு:—மஹாராஜாவே! தங்களுக்கு என்பேரிலுள்ள அபிமானமானது என்றைக்கும் குறையாதிருக்க ஈசன் அருள்புரிவாராக. மஹாராஜ்கீ ஜே!

[யாவரும் போகிறார்கள். ஹாஸ்யானந்தர், வரும் வழியில் குணசீலனைக் காண்கின்றார்.]

ஹாஸ்யா:—என்ன குணசீலா! சாப்பாடாய் விட்டதா?

குணசீ:—ஆயிற்று. நீரேன் இன்னும் சாப்பிடவில்லை?

ஹாஸ்யா :—பகல் வேஷப் பரசுராமையர் இன்று, துலுக்க வேஷம் தரித்துக்கொண்டு பலே தமாஷ் செய்துவிட்டான். அது ராஜஸமுகம் வரை வந்துவிட்டது. (என்று நடந்ததையெல்லாம் சொல்லுகிறுன். குணசீலன் குலுங்கக் குலுங்கச் சிரிக்கின்றுன்)
நாழியாய் விட்டது. நான் போகிறேன்.

[ஹாஸ்யாநந்தர் போகிறுர்.]

[குணசீலன் ஞானப்பிரகாசனிடம் போகிறுன்.]

குணசீ :—ஞானப்பிரகாசா! இன்றைய தினம் ஒரு துலுக்கன் பன்னிரண்டு மணிக்குப் பகல்வேஷப் பரசுராமையருடைய பெண்சாதியின் கையைப் பிடித்துக்கொண்டானும். அதற்காக அக்கிரஹாரத்திலுள்ள பிராம்மணர்களெல்லாம் அவனைக் கேட்டதற்கு அந்தம்மாள் தன் பெண்சாதி யென்று சொன்னுனும். அதற்காக அவன் ராஜசமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது அவன் தன்னுடைய வேஷத்தைக் கழற்றி எறிந்தானும். அப்போது பகல்வேஷப் பரசுராமையர் என்றறிந்து அரசர் அவருக்கு வேண்டிய பரிசுகள் அளித்தாராம். இந்த ஆச்சரியத்தைக் கேள்விப்பட்டாயா?

ஞானப் :—இதில் என்ன ஆச்சர்யம்? நாமும் பரசுராமையரைப்போல் ஒரு வேஷக்காரர் தாமே. கடவுளும் பகல்வேஷக்காரன்தான். அவன் ஒருவனே விஷ்ணுவாகவும், சிவனுகவும், அல்லாவாகவும், இயேசுவாகவும் வேஷம் போட்டுக்கொள்ளுகிறுன். நாம் போன ஜன்மத்தில் ஒரு வேஷம் போட்டோம். இந்த ஜன்மத்தில் இந்த வேஷம் போட்டுக்கொண்டிருக்கிறேம். வரும் ஜன்மத்தில் இன்னெரு வேஷம் போடுவோம். இந்த விஷயத்தைத்தான் பரசுராமையர் பகல் வேஷத்

திஞல் நமக்கு அறிவிக்கின்ருர். துலுக்க வேடம் போட்ட அவர் "தான் துலுக்கனல்ல; பிராஹ்மணன் தான்; ஏதோ ஒரு நிமித்தத்தால் துலுக்க வேடம் போட நேர்ந்தது" என்று தன்னை வேஷத்திற்கு வேருகக் கண்டு நின்றதுபோல் நாமும் இத்தேகமாகிய வேஷத்தைப் பூண்டு உலகமாகிய நாடகசாலையில் ஸூத்திரதாரனுகும் பரமேஸ்வரனது உத்தரவுபடி நடக்கின்ருேம். உண்மையாய் நாம் நாடக சாலைக்கும் வேஷத்திற்கும் கொஞ்சங்கூடச் சம்பந்தப் படாது வேருய் உள்ள ஸ்வரூபத்தை யுடையவர்களேயாகும். இதை யுணர்த்துவதற்காகவேதான் நமது முன்னோர்கள் நாடகங்களை யேற்படுத்தி யிருப்பது; இதற்காகவேதான் ராஜ சபைகளில் பகல் வேஷக்காரர் இந்திர ஜாலக்காரர் முதலியவர்களுக்கு ஸர்வ மான்னியங்களைக் கொடுத்து ஆதரித்து வருவது. குணசீலா! ஏகாந்தமாயிருக்க இச்சைபுண்டாகின்றது. நந்தவனம் போவோம் வா.

குணசீ:—நண்பனே! இன்று மாலை நாலு மணிக்கு காஸ்மீர தேசத்திலிருந்து வந்திருக்கும் ஒரு பண்டிதரால் "புருஷார்த்தம்" என்னும் விஷயம் வாணீ விலாஸ் மண்டபத்தில் உபந்நியஸிக்கப்படுமாம். அதற்குச் செல்வோமா?

ஞான:—ஆஹா அப்படியே செல்வோம். இப்பிறவியின் பயன் அதுதானே.

[இருவரும் செல்கின்ருர்கள்.]

மூன்ருவது காட்சி

இடம் :—காசிமா நகரம்.

வாணீ விலாஸ மண்டபம்

காலம் :—மாலை 4 மணி.

[மஹாமஹோபாத்தியாய சந்திர சேகர்ஜீ : தண்டபாணி தீக்ஷிதர் ; சண்டமாருதம் சிவகுமார பட்டா : வேதாந்த கேஸரி ரவீந்த்ரநாத் டாகூர் ; தர்க்க தீர்த்த ராம் கிஷன் வர்மா ; பண்டிட் மதன் மோஹன் மாலவியா ; பண்டிட் பூபேந்த்ர நாத் போஸ் ; பண்டிட் கௌரீ சங்கர்ஜீ ; மணிசங்கர் பீதாம்பர்ஜீ முதலியவர்கள் ஆஸனங்களில் அமர்ந்திருக்கின்றனர். உபந்நியாஸம் கேட்க அநேக ஜனங்கள் வந்து கூடியிருக்கின்ருர்கள். ஞானப்பிரகாசனும் குணசீலனும் வந்து சேர்ந்தார்கள். சிதாநந்த சர்மா பிரவேசிக்கிருர்.]

சிதாநந்தர் :—தீக்ஷிதரே ! இப்படி வாரும். (ஒரு புறமாய் அழைத்து வந்து) இன்று உபந்நியாஸத்திற்கு அக்கிராஸனம் வகிக்க ஒத்துக்கொண்ட ஹரிஹர சாஸ்திரிகள் ராஜ காரிய நிமித்தமாக பாடலீபுரம் சென்றிருக்கிருராம். வந்துள்ளவர்களில் யாரையாவது அக்கிராஸனத்திற்கு ஏற்பாடு செய்து உபந்நியாஸத்தை யாரம்பிக்கலாமென்று தோன்றுகிறது.

தீக்ஷிதர் :—ஓஹோ ! ஆனல் தர்க்க தீர்த்த ராம்கிஷன் வர்மாவை ஏற்படுத்தலாமா அல்லது மஹா மஹோபாத்தியாய சந்திர சேகர்ஜீயை ஏற்பாடு செய்யலாமா சொல்லும் ?

சிதாநந்தர் :—தீக்ஷிதரே ! நீரேன் இருக்கக்கூடாது ?

தீக்ஷிதர் :—நான் இருப்பது இருக்கட்டும். அவர்கள் இருவரில் யாரை யேற்பாடு செய்யலாம் சொல்லும். நாழியாகின்றது.

சிதா :—சந்திர சேகர்ஜீயையே ஏற்பாடு செய்யலாம்.

தீக்ஷிதர் :—அங்ஙனமே பிரஸ்தாபியுங்கள்.

[சிதாநந்த சர்மா உபந்நியாஸ மேடையின் மேலேறுகிறார்]

சிதா :—பண்டிதோத்தமர்களே! கனவான்களே!! இன்று நடக்கப் போகும் உபன்னியாஸத்திற்கு அக்கிராஸனம் வகிக்க ஒத்துக்கொண்ட சண்டமாருதம் ஹரிஹர சாஸ்திரிகள் அவர்கள் பாடலீபுரம் சென்றிருப்பதனால் அவருக்குப் பதிலாய் அக்கிராஸனம் வகிக்க மஹா மஹோபாத்தியாய சந்த்ர சேகர்ஜீ அவர்களைச் கேட்டுக்கொள்ளலாமென்று நினைக்கின்றேன். சபையோர்கள் இதை ஆமோதிக்கும் பக்ஷத்தில் தங்கள் இஷ்டத்தைக் கர கோஷத்தின் மூலமாய்த் தெரிவிக்கக் கோருகிறேன்.

[யாவரும் கரகோஷம் செய்கின்றனர்]

[மஹா மஹோபாத்தியாய சந்திரசேகர்ஜீ ஆஸனத்தில் அமருகிறார். யாவரும் கரகோஷம் செய்கின்றனர்]

சந்திர :—கனவான்களே! ஆஸ்திகோத்தமர்களே!! வித்வத் சிகாமணிகளே!! இப்பொழுது காஸ்மீர தேசத்திலிருந்து விஜயம் செய்திருக்கும் பண்டிட் கௌரீ சங்கர்ஜீ அவர்களால் "புருஷார்த்தம்" என்னும் ஒரு அரிய விஷயம் உபந்நியஸிக்கப்படும். அவர் தர்க்க வேதாந்த சாஸ்திரங்களில் வல்லவர். அவருடைய உபந்நியாஸத்திற்கு அக்கிராஸனம் வகிக்கத் தகுதியுடையவன் அல்லன் எனினும் சபையோர்களின் கட்டளையைச் சிரமேற்

கொண்டு அக்கிராஸனம் வகிக்கின்றேன். நீங்கள் யாவரும் உபந்யாஸத்தைச் சாவதானமாய்க் கேட்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

[பண்டிட் கௌரீ சங்கர்ஜீ உபன்னியாஸ மேடையின்மேலேறுகின்ருர். கரகோஷம் முழங்குகிறது.]

பண் - கௌரீ :—பண்டிதோத்தமர்களே! கனவான்களே!! "புருஷார்த்தம்" என்னும் விஷயத்தைப்பற்றி உபன்னியசிக்குமாறு ஏற்பட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு உபன்னியசிக்கத் துணிகின்றேன். இங்ஙனம் யான் உபன்னியசிக்கத் தொடங்குவது ஆதிசேஷன் தன் பணு முடிமேல் தாங்கிக் கொண்டிருப்பதாகக் கூறப்படும் விசாலமாகிய இவ்வுலகத்தை ஒரு நாகப்பூச்சியானது தன் தலைமேல் தாங்குவேனென்று முன்வந்தது போலவாகும். ஆயினும் ஸதஸ்ஸின் கட்டளைக்குட்பட்டு என் சிற்றறிவிற் கெட்டிய வரையில் சொல்லுகின்றேன். குற்றத்தை மன்னித்துக் குணமிருக்கின் கொள்ளப் பிரார்த்திக்கின்றேன்.

புருஷார்த்தம் என்ருல் மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோராலெடுக்கப்பட்ட பொருளாகும். அது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பகுதிகளோடு கூடியதாகும். இவற்றுள் அறமென்பது மனு முதலிய தர்மசாஸ்திரங்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலுமாகும். இதுவும் இல்லறம் துறவறம் என இருவகைத்தாம். பொருளென்பது இல்லறத்தார் மேன்மையடைவதற்குச் சிறந்த காரணமாயும், தரும வழியிற் சென்று தேடச்சித்தித்தனவான மனைவி மைந்தர், தாசி, தாசர், பசு, பூமி, திரவியம் வீடு, தான்

ணியம் முதலியனவாகும். பொருள்களுள் திரவியமே சிறப்பு வகையாகப் பொருளென்று கூறப்படுகின்றது. இன்பமென்பது இல்லறத்தார் மேன்மையடைவதற்குச் சிறப்புக்காரணமான பொருளைத் துணைக்காரணமா யுடைத்தாய்ப் பஞ்சேந்திரியங்களால் அனுபவிக்கப்படும் இம்மைச்சுகமேயாகும். வீடென்பது அழிவில்லாப் பேரின்ப நிலையாகும். இவற்றுள் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் திரிவர்க்கமென்றும், வீடு அல்லது மோக்ஷம் அபவர்க்க மென்றும் கூறப்படும் திரிவர்க்கத்தைப் பிரவிருத்தி யென்றும், அபவர்க்கத்தை நிவிருத்தி யென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அறம் பொருள் இன்பம் என்னும் திரிவர்க்கத்தில் அறமானது ஏனைய பொருளின்பங்களைப் போலாகாமல், இம்மை, மறுமை, வீடு எனப்படும் மூன்றையுந்தருதலால் பொருளின்பங்களைக் காட்டிலும் சிறந்ததாகும். ஆதலாற்றான் குறளாசிரியரும் "சிறப்பீனும் செல்வமு மீனும் அறத்தினூஉங் காக்க மெவனோ உயிர்க்கு." என்றருளி யிருக்கின்றனர். ஆதலால்,

"தேங்கு விளைபோகமும் சிறந்த முத்தியும்
ஈங்குறு மார்க்கமும் இனிது நல்கலால்
ஓங்கிய வறத்தினை யுளமுன் மூன்றிலும்
பாங்குற நித்தலும் பரிந்து செய்தியால்"

என்று ஆன்றோர் கூறியுள்ளபடி, மாந்தர்கள் அறம் ஒன்றினாலேயே ஏனைய புருஷார்த்தங்களையு மடையக் கூடுமென்று பெறப்பட்டது. இவ்வறமானது, இல்லறம் துறவறம் என இருவகைத்து. சாஸ்திரங்களால் "அறம்" என்று சிறப்பித்துக் கூறப்படுவது இல்லறமேயாகும்.

இல்லறமாவது, கிருஹஸ்தாஸ்ரமத்திற்குத் தகுதி யெனக் கூறப்படுகின்ற நெறியிலே நின்று அதற்குத் துணையாகிய கற்புடைய மனைவியோடு கூடிச் செய்யப் படுவதேயாகும்.

கிருஹஸ்தனானவன், ஆசார்யனிடத்தே ஓதுகின்ற வனும் விரதங் காக்கின்றவனுமாகிய பிரஹ்மசாரிக்கும், காட்டினிடத்தே போய் மனைவியோடு தவமியற்றும் வானப் பிரஸ்தனுக்கும், எல்லாப் பற்றுக்களையும் விட்ட வனாகிய சந்நியாஸிக்கும் இயல்பாய் ஏற்படக்கூடிய பசி, நோய், குளிர் முதலியவற்றால் அவரவரொழுக்கங் களுக்கு இடையூறு வாராமல் உண்டி மருந்து, உடை முதலியவைகளைத் தந்து அவரவரொழுக்கத்தினின்றும் வழுவாது நடப்பிப்பதற்குரியவனா யிருப்பதால் ஏனைய ஆஸ்ரமங்களினும் கிரஹஸ்தாஸ்ரமம் மிகச் சிறந்த தாகும். ஆதலால்தான் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரும்,

"அறத்தாற்றினில் வாழ்க்கை யாற்றின்
புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவதெவன்"

என்றார். ஆதலால் எங்ஙனம் அறமானது ஏனைய புருஷார்த்தங்களின் அடைவிற்குச் சாதனமோ, அங்ஙனமே அறத்திற் சிறந்ததாகிய இல்வாழ்க்கையும் ஏனைய ஆஸ்ரமங்களாலடையப்படும் பயனைத் தருவதாகுமென்று பெறப்பட்டது. இத்தகைய இல்வாழ்க்கையின் பெருமை இவ்வளவவ்வளவென்று கூறமுடியுமோ! இம்மையிற் புகழையும், மறுமையில் சுவர்க்கப் பேற்றினையும், துக்கத்தின் தொடர்பென்பது ஒரு சிறிதுமில்லாத ஆநந்த வடிவ முத்தியையும் பெற்ற கிருஹஸ்தர்கள் யாவரெனச் சிறிது ஊகித்துப் பார்ப்போமாயின், இல்லறத்

திற்குரிய நடுவு நிலைமையில் தவருது ஒழுகிவந்த வஸிஷ்டர், யாக்ஞவல்கியர், யுதிஷ்டிரர், ஜனகர், ஸ்ரீராமர், கிருஷ்ணர், இந்நகரத்தை யாண்டிருந்த அஜாதசத்துரு முதலியவர்களேயாவரென நன்கு விளங்குவதாகும். நடுவுநிலைமையாவது பகைவர், அயலார், நண்பர் என்னும் முத்திறத்தாரிடத்தும் தர்மம் தவருது ஒப்ப நிற்கும் நிலையாகும். இந்த நடுவு நிலைமையானது மனு முதலிய தர்ம சாஸ்திரங்களில் கிரஹஸ்தாஸ்ரம தர்மங்களிற் சிறந்ததாகக் கூறப்பட்டிருப்பதாலும், நடுநிலையில் சிறிதும் தவருதொழுகுபவர் இம்மையிற் பொருள் இன்பங்களைப் பெறுவதோடு புகழையும், மறுமையில் தேவர் போற்றும் சிறப்பையும் பெற்று, மனப் பரிபாக வசத்தினுல் வைராக்கியத்தையும், அதன் வாயிலாகப் பேரின்ப வீட்டையும் பெறுவரென்பது வைதிக நூல்களின் துணிபா யிருத்தலினுலும், இந்நடுநிலைமையை மேற்கொண் டொழுகுவது இன்றியமையாத கடமையன்றே?

"பிறர் மனைவியரைத் தாய் போலவும், பிறர் பொருளை மண்ணுங்கட்டி போலவும், எல்லா உயிர்களையும் தன்னைப் போலவும் யார் பார்க்கின்றுர்களோ அவர்களே உண்மைப் பொருளைப் பார்க்கின்றுர்கள்" என்று உபநிஷத்து கூறுவதால் மேற்கூறிய தர்மங்களை அனுஷ்டித்தல் வேண்டும்.

இவ்வாற்ருல், புருஷார்த்தங்களாகிய தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கும் சுகப் பிரவிருத்தி, துக்க நிவர்த்தி அல்லது திரிவர்க்கம் அபவர்க்

கம் என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட் டிருக்கின் றன வென்றும், "சிறப்புறு மறபிற் பொருளு மின்ப மும் அறத்து வழிப்படூஉந் தோற்றம்போல" என ஆன்ருேர் கூறியபடி, மேன்மையுடையதாய் முறைமை யால் அறத்தைப் பொருள் இன்பங்களுக்கு முன்னர் வைக்கப்பட்டமையின், அறம் ஒன்றினுலேயே பொரு ளின்பங்களும் மோக்ஷமும் பெறப்படுவதால், அவ்வறமே ஏனைய புருஷார்த்தங்களிலும் சிறந்ததாமென்றும், "அறமெனப்பட்டதே யில்வாழ்க்கை" யென்றபடி இல்லற ஒழுக்கங்களினின்றும் சிறிதும் வழுவாத வஸிஷ்டாதியோர் தத்துவ ஞானிகளாய் விளங்கினுர்க ளென்றும் சுருக்கமாகக் கூறப்பட்டது. ஆதலால் பண் டிதோத்தமர்களே! சகல துக்க நிவர்த்தி பரமாநந்தப் பிராப்தி வடிவ பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்திற் குப் பரம்பரா ஸாதனமாகும் கிருஹஸ்தாஶ்ரம தர்மங் களே மநு முதலிய தர்ம சாஸ்திரங்களிற் கூறியபடி அனுஷ்டித்துச் சகல புருஷார்த்த சித்தியைப் பெற நாம் முயலுவது அத்தியாவஶ்யமென நினைக்கின்றேன். நம்முடைய முயற்சி ஸபலமாகும் பொருட்டு "எல்லாம் வல்ல ஈசன் கருணை புரிவாராக" வென்னும் பிரார்த்தனை யோடு என்னுடைய சிறிய உபன்னியாஸத்தை யுபஸம் ஹாரம் செய்து கொள்ளுகின்றேன்.

[உட்காருகிருர்.]

அக்கிராசனுதிபதி:—கனவான்களே! இதுகாறும் உபந்நி யஸித்த பண்டிட் கௌரீ சங்கர்ஜீ அவர்கள் புருஷார்த் தம் என்னும் விஷயத்தை வெகு அழகாகவும் சுருங்கச்

சொல்லல் விளங்க வைத்தல் என்னும் லக்ஷணத்தோடும் விமர்சித்து முடித்தார். யான் முன்னமே தெரிவித்த வண்ணம் அவர் கூறிய விஷயத்திற்குமேல் அதிகமாகக் கூறுவதற்கு யான் அசக்தனயிருப்பினும் அவர் சொன்ன விஷயங்களிலேயே இரண்டொரு விஷயங்களை உங்கள் ஞாபகார்த்தமாகத்திருப்பிச் சொல்லுகிறேன். புருஷார்த்தம் என்ருல் புருஷர்களால் விரும்பப்படுவதென்று பொருள் படுவதாகும். புருஷர்களால் விரும்பப்படுவது ஸுகப்பிராப்தியும் துக்க நிவர்த்தியுமே யாகும். கிருஹஸ்தாஶ்ரமமே எல்லாப் புருஷார்த்தங்களையு மடையத்தக்க ஆஶ்ரமமாகு"மென்று அநேக பிரமாணங்களைக்கொண்டு வெகு அழகாக நிரூபித்தார். இது கவனிக்கத்தக்க விஷயமாகும். கிரஹஸ்தாஶ்ரம தர்மங்களிற் சிறந்தது நடுவு நிலைமை என்றும், அந்நிலைமையிலிருந்து வழுவாது ஒழுகிய வஸிஷ்டாதியர் தத்துவஞானிகளாய் விளங்கினர்களென்றும் கூறினர். இதுவும் ஞாபகத்திலிருக்கத்தக்கதேயாகும். கனவான்களே! இதோடு எனது முடிப்புரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

[உட்காருகின்ருர்]

சிதாநந்தர் :—பண்டிதோத்தமர்களே! ஆஸ்திகர்களே! காஶ்மீர தேசத்திலிருந்து விஜயம் செய்து இங்கே நம்முடைய பிரார்த்தனைக்கிணங்கி நாம் நற்கதியடையுமாறு "புருஷார்த்தம்" என்னும் அரிய விஷயத்தை வெகு அழகாகப் பிரஸங்கித்து நம்மை ஆநந்திக்கச் செய்த பிரஹ்மஸ்ரீ பண்டிட் கௌரீ சங்கர்ஜீ அவர்களுக்கு நாம்

நம்முடைய திரிகரண சுத்தியுடன் வந்தனமளிப்போமாக.

[மாலை சூட்டுகின்றார். யாவரும் கர கோஷம் செய்கின்றார்கள்.]

சபையோர்களே! இங்கு நடந்த உபந்நியாஸத்திற்கு, மஹாமஹோபாத்தியாய சந்திரசேகர்ஜீ அவர்கள் அக்கிராஸனம் வகித்து உபந்நியாஸத்தைச் சிறப்புறச் செய்ததற்கு நாம் நமது மனமார்ந்த வந்தனமளிக்கின்றோம்.

[மாலை சூட்டுகின்றனர். யாவரும் கர கோஷம் செய்கின்றனர். சபை கலைந்து யாவரும் பேசுகின்றார்கள்]

மூன்றாவது அங்கம் முற்றிற்று

நான்காம் அங்கம்

முதற் காட்சி

இடம் :— பாடலீபுரம் அரண்மனைத் தோட்டம்.
பாத்திரங்கள் :—ஸுகுமாரன், மோஹனங்கி.
காலம் :—பிற்பகல் மாலை.

மோஹ :—நாதா ! சூரியன் அஸ்தகிரியை நெருங்கிப்போகப் போக நிழலானது எப்படி விருத்தியாகின்றதோ அப்படியே என் மனம் நமது அருந்தவப்புதல்வி "மனோஹாரிணியின் பிடிவாத குணத்தைப்பற்றி யோசிக்க யோசிக்க கவலை யதிகரிக்கின்றது. என் செய்வது? ஐயோ ! தாங்கள் எத்தனையோ நியாயங்களை யெடுத்துக் கூறியும் அவளுடைய மனம் மாறவில்லையே! நமது குலகுரு தர்மசீலரும் "பெண்கள் அவஸ்யம் விவாஹம் செய்து கொள்ளத்தான் வேண்டுமென்று அநேக யுக்திகளோடும் அனுபவங்களோடும் உபதேசித்தாரே ! இவையெல்லாம் வரட்டு நிலத்தில் விதைத்த விதைகள்போல் அவளிடத்தில் உபயோகமற்றன வாயிற்றே ! ஹே ஜெகதீசா !! திரிகரணத் தூய்மையுடன் உன்னிடத்தில் செய்த பக்தியின் பயனாகத் தாங்கள் சந்நியாசி வடிவங் கொண்டு வந்து அருளிச்செய்த புத்திரியால் நாங்கள் பெறும் பயன் இதுதானா? சந்ததியின்றி யிருந்ததே சந்தோஷமாக இருந்தது. நாங்கள் பூர்வ ஜன்மங்களிற் செய்த தினையளவு புண்ணியத்தினாலல்லவா இந்த ஒரு புத்திரியையாவது அடைந்திருக்கிறோம். இவளுக்குத் தக்க ராஜகுமாரனை மணம் புரிவித்து இந்த இராஜ்யம் அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்க வேண்டுமென்று எண்ணியிருந்தோமே !

எங்கள் எண்ணம் நிலைகுலைந்து தலைகீழானதே. இதுவும் உன் செயலல்லவா? ஈசா!! (மூர்ச்சையாய்க் கீழே விழுகிருள்)

ஸுகுமாரன் :—(குளிர்ந்த ஜலத்தை முகத்தில் தெளித்து மூர்ச்சை தெளிவிக்கிருன்) ப்ரியநாயகி! ஏன் வீணாய் வருந்த வேண்டும்? வருந்துவதால் யாது பயன்? நம்மால் ஆன மட்டும் அவளுடைய மனதைமாற்றப் பிரயத்தனப் பட்டோம்; முடியவில்லை. இனி ஈசன்தான் அவள் மனதை மாற்ற வல்லவன். (சற்று யோசித்து) மோஹனு! என் மனது இப்பொழுது தன் சஞ்சலத்தையும் கலக்கத்தையும் விட்டு அமைதியையும் தெளிவையும் பெறுகின்றது. இது ஒரு நன்மைக்கு அறிகுறியென நினைக்கின்றேன். சூரியன் அஸ்தமித்தவன் உதிக்காமலா இருப்பான்? நம்முடைய மனத்திலும் அவஸ்யம் ஸந்தோஷ முதயமாகுமென்றே நினைக்கின்றேன்.

மோஹ :—பிராணநாதா! இப்பொழுது தாங்கள் கூறிய வார்த்தைகள், பாலைவனத்தில் வெயிலினுலும் தாகத்தினுலும் வருந்திக் களைப்புற்றவன், குளிர்ந்த நிழலைத் தரும் மரங்கள் அடர்ந்த ஒரு நீர்நிறைந்த தாமரைத் தடாகத்தை நினைத்துக் கொண்டு சந்தோஷிப்பது போலிருக்கின்றன. மனப்பால் குடித்தால் பசியாறுமா?

ஸுகு :—சகீ! அங்ஙனமன்று. இதோ பார் எனது வலது கண் கூடத்துடிக்கிறது (திரும்பிப்பார்த்து) யார் அது? காவலாளியா? என்ன சங்கதி?

காவலாளி :—சாமீ! யாரோ ஒரு பாப்பாரய்யா வந்திருக்காங்கோ; காச்சி பட்டனமாம். ஒங்களைப் பாக்கணுமாம்.

ஸுகுமா :—யார் ? பாப்பாரய்யாவா ?

காவ :—ஆமாஞ் சாமீ !

ஸுகு :—எந்த ஊர் ?

காவ :—காச்சிபட்டனம் ! காச்சிபட்டனம் !

ஸுகு :—என்னடா அது (யோசித்து) ஓஹோ காசிப்பட்டணமா ?

காவ :—ஆமாங்கோ; ஆமாங்கோ.

ஸுகு :—சரி. வரச்சொல்.

ப்ரியே ! மோஹனு ! காசி க்ஷேத்திரத்திலிருந்து யாரோ ஒரு பிராஹ்மண சிரேஷ்டர் வந்திருக்கின்ருராம் என்னைக்காண. நாம் எதிர் சென்று வணங்கி அவருடைய ஆசீர்வாதங்களைப் பெறலாம் வா.

[எதிர் சென்று வணங்குகிருர்கள்]

பிராஹ்மணர் :—ஹே ! ராஜதம்பதிகளே ! உங்களுக்கு மங்களமுண்டாவதாக!! உங்களுடைய கீர்த்தி இந்த ஐம்பத்தாறு தேசங்களிலும் வியாபித்திருக்கின்றது. எழுந்திருங்கள்.

ஸுகுமாரன் :—(எழுந்து நின்று) ஸ்வாமீ ! இந்த ஆஸனத்தில் அமருங்கள். எந்த தேசமானது தங்கள் வாஸத்தால் அலங்கரிக்கப்பட்டுள்ளது ? தங்களுடைய நாமதேயமென்ன ? என்னை நாடிவந்த காரியமென்ன ? தயவு செய்து கூறவேண்டுகின்றேன்.

பிராஹ்ம :—அரசே ! நான் வசிப்பது ஸ்ரீகாசீ க்ஷேத்திரம் ; என் பெயர் ஹரிஹர சாஸ்திரி. எங்களரசன் புருஷோத்தமனுக்கு ஞானப்பிரகாசன் என்று ஒரே புத்திரனுளன். உமக்கு ஒரு புத்திரியிருப்பதாகவும், அவனுக்கு

அப்புத்திரியை விவாஹம் செய்விக்க வேண்டுமென்றும் எங்களரசரது விருப்பம். அதை உங்களிடத்தில் தெரிவித்துக் கன்னிகையை நிச்சயம் செய்துகொண்டு போகவே வந்தேன். இதோ ஞானப்பிரகாசனுடைய உருவப்படம்; பாருங்கள்.

[படத்தைக் காட்டுகிறார்]

ஸாது:—(படத்தை வாங்கிப் பார்த்து நெடுநேரம் யோசித்துப் பெருமூச்சுடன்) ஹே ஸ்வாமீ! நெய்யானது கொழுந்து விட்டு எரிகின்ற தழலை விருத்தி செய்வதுபோன்று "எனது அருந்தவப் புதல்வி விவாஹம் செய்துகொள்ளச் சம்மதிக்கவில்லையே" யென்ற கவலையினால் துன்புற்றுள்ள என் மனத்தை, மிகுந்த அழகு வாய்ந்த இந்தப் படமானது பின்னும் அதிகமாய் வருத்துகின்றது. ஹே ஜகதீசா! காசி நகரத்தரசன் புருஷோத்தமன் எனக்கு அத்தியந்த ஸ்நேகிதர். அவருடன் சம்பந்தம் செய்வதில் எனக்கு சம்மதந்தான். என்ன செய்வேன்? என் மகள் ஒரே பிடிவாதமாய் விவாஹமே வேண்டா மென்கின்றாளே! யான் தங்களுக்கு என்ன பதிலுரைப்பது?

ஹரிஹர:—(தனக்குள்) சரி சரி! ஒரே திசையை நோக்கிச்செல்லும் இருவர் எதிரெதிராகச் சந்திப்பது எங்ஙனம் அஸாத்தியமோ, அங்ஙனமே இருக்கின்றது இவர்களின் விவாஹ கார்யம். நான் நாடி வந்த காரியம் எப்படி முடியப் போகின்றது? மந்திரியினது எண்ணம் எங்ஙனம் நிறைவேறப் போகின்றது? எனக்குப் புறப்படும்போதே சகுனம் தடைப்பட்டது. முட்டாள் பட்டம் கட்டி விடுவான் அந்த அய்யா தீக்ஷிதர். இனி எது வந்தாலும் அனுபவிக்க வேண்டியதுதான். (பிரகாசமாய்)

ஹே ராஜேந்திரா! என்ன சொன்னீர்கள்? தங்கள் புதல்வி விவாஹம் வேண்டாமென்று சொல்லுகிறுள்?

ஸுகுமா.—ஆம் ஸ்வாமீ! நாங்களும் என்னெனன்னமோ யுக்திகளைக் கொண்டு போதித்தோம். எங்கள் குலகுரு தர்மசீலரும் உபதேசித்தார். என்ன செய்தும் அவளது பிடிவாத மென்னமோ நீங்கவில்லை. என்ன செய்வோம்? நண்பர் புருஷோத்தமருக்கு என்ன பதில் சொல்லியனுப்புவேன்?

ஹரிஹர:—அரசே! வருந்த வேண்டாம்; வருந்த வேண்டாம், ஸ்ரீ விஸ்வநாதனருளால் எல்லாம் அநுகூலமாய் முடியும். உமது மகளாலன்றி மற்றெவராலும் ஞானப்பிரகாசனது மனம் ஜயிக்கப்படமாட்டாது. இது நிச்சயம்.

ஸுகுமா:—ஸ்வாமீ! அப்படியே ஆசீர்வதிக்க வேண்டும்.

ஹரிஹர:—உமது மகளின் பெயரென்ன?

ஸுகுமா:—“மனோஹாரிணி” என்றழைப்பர்.

ஹரிஹர:—பேஷ்பேஷ்! மனோஹாரிணியா? யார் மனத்தை? ரொம்ப சரி. (மேற்கே பார்த்து) அரசே! சூரியன் அஸ்தமிக்கின்றுன். யான் சென்று சந்தியாவந்தனுதிகளைச் செய்யவேண்டும்; உத்தரவு கொடுங்கள். இன்னும் ஒரு வாரம் வரையில் இங்கிருப்பதாகவே வந்திருக்கிறேன். அதற்குள் எல்லாம் சரியாய் முடியும்; நான் போய் வருகிறேன். மங்கள முண்டாவதாக.

ஸுகுமா:—ஸ்வாமீ! தாங்கள் தயவு செய்து இன்னும் ஒரு வாரமோ பத்து நாளோ இங்கேயே இருந்து எப்படியாகிலும் என் புத்திரியின் எண்ணம் மாறி ஞானப்பிரகாசனை விவாஹம் செய்துகொள்ளுகிறேனென்று ஒப்புக்கொண்ட பின்னரே போக வேண்டும். அது வரையில்

எங்கள் குலகுரு தர்மசீலருடைய இல்லத்திலேயே இருக்கும்படி பிரார்த்திக்கின்றேன். (சேவகனைப் பார்த்து) அடே சேவகா! இவரை யழைத்துக் கொண்டு போய், நமது குரு தர்மசீலருடைய வீட்டில் விட்டுவா.

ஹரிஹர:—ராஜேந்திரா! தர்மசீலரை எனக்கே நன்ருய்த் தெரியும். நானும் அவரும் ஒன்ருய்த் தர்க்கம் படித்தோம். அவர் எனக்கு நண்பரே. தங்களுடைய உத்தரவுப்படி அங்கேயே தங்கியிருக்கின்றேன். (செல்லுகின்ருர்)

மோஹ:—இந்தப் படத்தைப் பார்க்கப் பார்க்க என் மனக் கவலை அதிகரிக்கின்றது. இவனை மாப்பிள்ளையாய்ப் பெற நாம் எவ்வளவோ தவம் செய்திருக்கவேண்டுமே!

ஸாகு:—சகி! சற்றுப் பேசாதிரு!! யாரோ நாம் பேசுவதை யுற்றுக் கேட்டுக்கொண்டிருந்து ஓடுவதுபோல் காலடிச் சத்தம் கேழ்க்கின்றது. கவனி.

[கவனிக்கின்ருள்]

மோஹ:—நாதா! ஒன்றுமில்லை. காற்றினல் மரத்தின் கிளைகள் அசைந்தனவேயன்றி வேருென்றுமில்லை. உங்களுடைய மனக்கற்பனையேயது.

ஸாகு:—ஸரி! நடப்பது நடந்தே தீரும். பொழுதாயிற்று அந்தப்புரம் செல்வோம். (இருவரும் போகின்ருர்கள்)

முதலாவது காட்சி முற்றிற்று.

இரண்டாவது காட்சி

இடம் :—மனோஹாரிணியின் படுக்கை யறை.

பாத்திரங்கள் :—மனோஹாரிணி. ஞானம்பிகை.

காலம் : முன்னிரவு.

மனோ :—அடீ ஞானம்பிகே! இனி யென்ன செய்யலாம்? என் எண்ணத்திற்கு மாருகவே நடக்கும்போ லிருக் கின்றதே! அந்தப் பிராஹ்மணர் எங்கிருந்து வந்ததாய்ச் சொன்னர்?

ஞானம் :—அம்மணீ! அவர் காசிமா நகரத்தின் ராஜபுரோ கிதர் என்றும், அவரது தேசத்து இளவரசரின் விவாக விஷயமாய் வந்ததாகவும் சொன்னர். நீயும் கேட்டுக் கொண்டுதானே யிருந்தாய்.

மனோ :—(யோசித்து) ஆமாம்! காசிமா நகரத்தின் இளவர சர் என்னமோ மிகுந்த வைராக்கிய புருஷனென்றும், தனக்கு விவாகமே வேண்டாமென்றே தாய் தந்தைய ரிடத்தில் மறுத்து விட்டிருப்பதாகவும் பலமான வதந்தி யிருந்ததே! அஃதென்ன புராண வைராக்கியமா? ஸ்மசான வைராக்கியமா?

ஞானம் :—என்னமோ அம்மா நாம் எப்படி சொல்லலாம்.

மனோ :—ஸரி! அது எப்படியாகிலு மிருக்கட்டும். மாலையில் அந்த சம்பாஷணையைக் கேட்டது முதல் என் மனம் பதைக்கின்றது. என் தந்தை எப்படியாகிலும் என்னை வற்புறுத்தி என் எண்ணத்திற்கு மாருகச் செய்வரென நினைக்கின்றேன். ஆபத்து வருமுன் காத்துக் கொள் ளுதலன்ருே அறிஞர்களுக்கழகு! என்னடீ செய்வது இப்போது?

ஞானம் :—அம்மணீ! ஆத்திரப்படவேண்டாம். இன்னும் என்னென்ன நடக்கின்றனவோ அவற்றையும் அறிந்து, பின் நடக்கவேண்டியதை யோசிப்போம். கிணற்று ஜலத்தை வெள்ளமா அடித்துக்கொண்டுபோகும்? அவஸரப்படவேண்டாம். அதிக நேரம் ஆய்விட்டது. எனக்கு உத்தரவு கொடுங்கள். காலையில் வருகிறேன்.

மனோ :—சரி! போய்வா. (ஞானம்பிகை செல்கின்றாள்)

மனோஹாரிணி (தனக்குள்)

" அடியாருறவும் அரன்பூசை நேசமும் அன்புமன்றிப்
படிமீதில் வேறு பயனுளதோ பங்கயன் வகுத்த
குடியான சுற்றமும் சம்சார வாழ்வும் குயக்கலங்கள்
தடியாலடியுண்ட வாறொக்கும் ஒன்றையும் சார்ந்திலனே "

ஹா! என்ன!! இன்று என் மனம் சாந்தியடையவில்லையே! இந்த துக்கமயமான ஸம்ஸாரஸாகரத்தில் மூழ்குவேனோ? ஒரு காலும் மாட்டேன். ஏமனமே! சற்று பொறுப்பாய். ஞானம்பிகையுடன் யோசித்ததற்கு அவள் ஒன்றும் சொல்லவில்லையே. நாளையதினம் தந்தை யென்னை வரவழைத்து ஞானப்பிரகாசனை மணக்கும்படி வற்புறுத்துவாரே; நான் அதற்கு மாறுபாடாகச் சொன்னால் அவர் கோபித்துத் தண்டித்தாலும் தண்டிக்கலாம் அல்லவா? நானேன் அதற்கு இடங் கொடுக்க வேண்டும்? (யோசிக்கின்றாள்) ஓ மனமே! நீயல்லவா எனக்குப் பேருபகாரி; நல்ல யோசனை கூறினாய். ஆமாம், நள்ளிரவில் அரண்மனையை விட்டு நீங்கி இப்பட்டணத்தை யெவ்வாறு கடப்பேன். நான் பெண்பாலல்லவா? (யோசிக்கின்றாள்) ஓ! சில நாளைக்கு முன் ஒரு பரதேசிக்காக வாங்கி வைத்த

காஷாய உடுப்புகள் இருக்கின்றன. அவற்றைத் தரித்துக்கொண்டு துறவி வேஷம் கொள்ளுகின்றேன். ஏன் வேஷம்? துறவியேயாகின்றேன். (உடுப்புகளைப் பெட்டியினின்றும் எடுத்துத் தரித்துக் கொள்ளுகின்ருள்) ஹா! ஞானம்பிகே! உயிரும் உடலுமாயிருந்த நாம் ஒருவரை விட்டு ஒருவர் பிரியும்படி நேரிட்டதே யின்று! என்ன செய்யலாம்? எல்லாம் இறைவன் செயல். ஏ பாழ் மனமே! எல்லாவற்றையும் வெறுத்த நீ இங்ஙனம் பாசமுறலாமா? கூடாது கூடாது. (தைரியப்படுத்திக்கொண்டு) புறப்படுகின்றேன். ஆ! தந்தையே!! என்னருமைத் தாயே!! நான் போய் வருகிறேன். நீங்கள் என்னை எவ்வளவோ தவம் செய்து பெற்றதாகக் கூறியிருக்கிறீர்கள். என்னுல் உங்களுக்குத் துன்பம் உண்டாகுமாயின் நான் ஏன் இங்கிருக்க வேண்டும்? சந்ததி யிருந்து அது துன்பத்திற்குக் காரணமாகுமாயின் அச் சந்ததியில்லாதிருப்பதே சுகமல்லவா? நான் உங்களிஷ்டப்படி நடக்கவோ இயலாது. ஆதலால் நான் உங்களை விட்டுப் பிரிகின்றேன். பெறுதற்கரிய இந்த மனிதசரீரத்திற்குக் காரணமான உங்களுக்கு நான் மிகவும் கடன்பட்டவளா யிருக்கின்றேன். ஆ! விலாஸமுகி! உன்னுடைய விலாஸமான முகத்தை மறுயடியும் நான் எப்பொழுது காண்பேன்? உன்னுடைய சாதுர்யமான வார்த்தைகளை யெப்பொழுது கேட்பேன்? உன்னைவிட்டுப் பிரியவும் நேரிட்டதே!! ஹே! ஜகதீசா!!

[அரண்மனையை விட்டுப் புறப்படுகிருள்.]

B. வீதி - நள்ளிரவு

முதல் மனிதன் :—அடே கீச்சா! பலே தேட்டக்காரண்டா நீ. சாமியார் வேஷமா போட்டு குனு போனெ ராஜாவூட்டுள்ளே ?

இரண்டாம் மனி :—ஆமாண்டா மாச்சா! பாத்தேன் சுத்தி வளச்சி ராஜாபொண்ணு சாமி யாருண்ணு ஆண்ணு வாயைத் தெறந்துகுனு இருக்கிருண்ணு தெரிஞ்சுது; போட்டே. சாமியார் வேஷம்; நொயஞ்சேன் அரமனேயில்; சுமா என்னு சோர்ரு என்ன சோறு. நெனச்சிகினு இப்பொகூட வாயிலே தண்ணி ஊர்றதடா.

மாச்சன் :—அடே கஜானு எங்கேண்ணு தெரிஞ்சுகினேயா ?

கீச்சன் :—ஓ! அது தெரிஞ்சிகாதேயாவர்றேன். ராஜா பொண்ணு எனக்குக் காவிதுணிகூட குடுக்கிரேண்ணு சொல்லிச்சிடா.

மாச்சன் :—அடே மெதுவா பேசடா; இந்தண்டெவா. யாரோ போராங்கொ பார்ரு இதோ பார்.

கீச்சன் :—ஆமாண்டா ஆமாம். யாரோ பண்டார மாட்டம் கீதுடா. இவன்கூட ராஜா மவளண்டெதான் போய் வர்ருனே என்னமோ ? கேப்பமா ?

மனோஹரா :—(தனக்குள்ளே) ஹா! இஃதென்ன ? இங்கே யாதோ பேச்சுக் குரல் கேட்கின்றது. சம்பாஷணையைக் கவனிக்கின் திருடர்கள் பேச்சுக்கள் போலப் புலப்படுகின்றன. அரண்மனைக்குள் துறவி வேடம் பூண்டுவந்ததாகவும் கூறுகின்ருன். சில நாளைக்கு முன் வந்த துறவி இத்திருடன் தானே? இக்காலத்துத் துறவிகளை நம்புதற்கே இல்லை யல்லவா ? ஹா! பரமேசா! இவர்களிடமிருந்து நான் எப்படித் தப்புவேன் ?

மாச்சன் :—யாரய்யா அது போறது நடுராத்திரியிலே?

மனோஹா :—ஐயா நான் ஒரு பரதேசி.

மாச்சன் :—எங்கே போறெ இப்பிடி?

பரதேசி :—ஊரூரா சுத்துகிற பரதேசிக்கு இங்கே தான் போகிறேனென்று சொல்ல முடியுமா? போய்க் கொண்டே யிருந்தால் எங்கே இஷ்டமோ அங்கே யிருக் கிறது.

கீச்சன் :—அடே இவனோடே நமக்கு என்னடா பேச்சி? நாம் போகலாம் வா.

மாச்சன் :—அடே சும்மா இரு, குரலெ பாத்தா பொம்ம ணாட்டி குரல்போலேகீது. என்னமோ சூதாயிருக்குது. ஏ. யா! நீ என்ன ஆம்பளேயா பொம்பளேயா?

மனோ :—(தனக்குள்) ஆ! பரமேசா! இவர்கள் திருடர்களே!! சந்தேகமில்லே. என்னைப் பெண்பிள்ளை யென்று கண் டால் லேசில் விடமாட்டார்கள். இவர்களைப் பயமுறுத் தித் தான் தப்பித்துக் கொள்ளவேண்டும். சரி (பிரகாச மாய்) அடே மாச்சா! என்னை ஆண்பிள்ளை யென்றும் பெண்பிள்ளை யென்றும் தெரிந்து கொள்ளாதவனா அரசனுடைய அரண்மனையில் கொள்ளையடிக்கப் போகி ருய்?

மாச்சன் :—(திடுக்கிட்டுத் தனக்குள்) என் பேர் இவனுக்கு எப்படி தெரிஞ்சிது? ராஜா வீட்டிலெ திருடப்போற சங்கதிகூட சொல்ருனே! இவன் மன்சனாயிருப்பானா? சே! சே!! ஒருக்காலும் மன்சனல்ல. (பயந்து உடல்நடுங்க நிற்கின்றான்)

பரதேசி :—அடே கீச்சா! என்னடா பேசாமல் இருக்கிருய். நீ அரசன் வீட்டில் ஆண்டிவேடம் தரித்துப் போன போது என்ன பிரார்த்தனை செய்தாய்?

கீச்சன் :—(பயந்து வாய் குளற) அடே மாச்சா! இவர் நம்ம கொலதெய்வந்தாண்டா! அடே கும்புடுரு கும்புடு.

(இருவரும் கும்பிடுகிருர்கள்)

சாமீ! நா. பெராத்தனை செஞ்சிகினது செஞ்சுடரேன். நீங்க யார் சாமீ?

(பரதேசி : பெருமூர்சுவிட்டுத் தலைவிரித்து ஆடிக் குதித்துக் கண்ணிமை கொட்டாமல் பார்க்கின்ருன் திருடர்கள் இருவரும் தெய்வமே இந்த வுருவம் எடுத்து வந்திருக்கிறதென்று சுற்றி வலம் வந்து கூத்தாடுகிருர்கள்)

"சூரன் கருப்பன் கருப்பண்ணன் சொக்கான் நொண்டி நல்லண்ணன்
தூற்றித் தூண்டி சாமுண்டி தோட்டிய சின்னன் காட்டேரி
மாரி முனியன் மன்னரன் மாடன் சங்கிலி பாவாடை!
மயானவாசி வழி பறித்தான் மலையன் பக்கிரி மின்னெடையான்!

சேரிக்காத்தான் குழியிரிசி சிறு காட்டுடையான் பனைமரத்தான்
செல்லன் இருளன் பெத்தண்ணன் செல்வி சடையன் கன்னியம்மா!
வீரன் மோகினி ஏகாத்தா வெரியன் பித்தன் படையாச்சி
வெள்ளி முருகன் வெட்டுண்ணி வீரிபிடாரி கெங்கம்மா!

பரதேசி:—(கோபத்துடன் பற்களைக் கடித்து) அடே என்னை யாரென்று கேட்டாய்? தெரியவில்லை உனக்கு? ஊ.... ....ஊ.........ஊ.........நான் தாண்டா........ உங்கள்குல தெய்வம்........நீங்கள் இன்றைக்கி ராஜா வீட்டில்திருடப்போகாதீர்கள்........தெரியுமா........ நான் இந்தப்பட்டணத்திற்கு மேற்கேயிருக்கிற காட்டிற்

குப்போகிறேன். அது வரையில் என் பின்னே வாங்கோ. என்ன சொல்லுகிறீர்கள் ?

இருவரும்:—அப்படியே சாமீ. ஒத்தரவுபடியே வர்றோம் சாமீ !

[காடு.]

பரதேசி:—அடே நீங்கள் இனிமேல் போங்கள் இங்கே இருக்காதீர்கள்.

[திருடர்கள் போகின்றார்கள்]

மனோ :—ஜகதீசா ! இதுவும் உன்னருள்தான். பொழுது விடியுநேரமும் ஆய்விட்டது. அசைவற்றிருக்கும் மனத்தின்கண் எண்ணங்கள் நிகழ்வது போன்று நிஸ்ஸப்தமான இக்காட்டில் பக்ஷிகளின் அரவம் எழுகின்றது. குளிர்ந்த காற்று வீசுவதால் வழி நடப்பதற்கு என்ன உற்சாகமாயிருக்கின்றது ! சமீபத்தில் குளம் இருக்க வேண்டும் ! ஓ ஹோ ! அதோ தெரிகின்றதே குளம். இரவெல்லாம் தூக்கமில்லாமையால் மயக்கமாயிருக்கின்றது. அக்குளத்திற் சென்று ஸ்நானம் செய்துவிட்டுப் பின்பு போகலாம். (குளத்தருகிற் சென்று ஸ்நானம் செய்கின்றாள்)

[அங்கே ஒரு ஆல மரத்தடியில் ஒரு துறவி யுட்கார்ந்திருக்கிறார். அவரைப் பார்த்து அருகே சென்று கை கூப்பி நிற்கின்றாள்.]

ஆஹா ! என்ன தேஜஸ்ஸு !! துறவியென்றால் இவரன்றோ துறவி. கண்விழிக்கவில்லையே ; ஸமாதியில் இருக்கின்றாரோ ? நான் எப்படியாவது இவரைக் கண்டு வார்த்தை யாடவேண்டும்.

[துறவி கண்விழிக்கின்றார்]

மனோ :—ஸ்வாமீ ! நமஸ்கின்றேன்.

துறவி :—நீர் யார் ? கோலமோ ஸன்னியாஸமாயிருக்கின்றது; முகத்தைப் பார்த்தால் ஸ்திரீயைப்போல் காணப்படு கின்றது.

மனோ :—(தனக்குள்) ஸதா அறிவாகாரமா யிருப்பவர் அறியாததும் உண்டோ உலகில்? இவரிடத்தில் மறைக்கமுடியாது. உண்மையையே உரைக்க வேண்டும். (பிரகாசமாய்) குருமூர்த்தமே! யான் பெண்ணேதான்; பாடலீபுரத்தரசன் ஸுகுமாருடைய புத்திரி; என் பெயர் மனோஹாரிணி.

துறவி :—(தனக்குள்) பாடலீபுரத்தரசன் ஸுகுமாரனுடைய புத்திரியா இவள்! மக்கட்பேறில்லாமல் மஹா தவம் செய்து நம்மால் அநுக்கிரஹிக்கப்பட்டுப் பிறந்தவளா! சரி, சரி (பிரகாசமாய்) நீ ஏன் இங்ஙனம் துறவி வேடந் தரித்து இங்கே வரவேண்டும்?

மனோ :—ஸ்வாமீ! யான் இல்லற வாழ்க்கையை வெறுத்து விவாகம் செய்து கொள்ள மாட்டேனென்று என் பெற்றோர்களிடம் சொன்னேன். அவர்கள் என் எண்ணத்திற்கு மாறாக விவாகம் செய்துகொள்ளத்தான் வேண்டுமென்று வற்புறுத்தியதால், நான் இவ்வேஷம் தரித்து யார்க்கும் தெரியாமல் பெற்றோர்களை விட்டு நீங்க நேரிட்டது. என்னைத் தங்கள் மாணவியாக அங்கீகரித்து ஸம்ஸாரபந்தத்தினின்றும் விடுவிக்க அருள் புரிய வேண்டுகின்றேன்.

துறவி :—(தனக்குள்) பேஷ்! பேஷ்!! இவளுடைய வயது என்ன! அழகென்ன! இவளுக்கிருக்கும் வைராக்கியமென்ன! ஆஹா! சில நாளைக்கு முன் ஒரு வாலிபன்

காமவிகாரத்தால் தன்னை மறந்து பிதற்றிக்கொண்டிருக்க, அவனுக்கு உபதேசித்து வைராக்கியத்தையுண்டாக்கியது நினைவிற்கு வருகின்றது. இப்போது வைராக்கியத்தோடுள்ள இப்பெண்ணின் மனத்தை மாற்றக்கூடுமா பார்ப்போம். (பிரகாசமாய்) ஹே பேதாய்! நீ என்ன சொன்னாய்? இல்லறவாழ்க்கையை வெறுத்தாயா? பேஷ்! நன்றாயிருக்கின்றது உன் வார்த்தை.

மனோ:—ஸ்வாமீ! தங்கள் எண்ணம் யாதோ அறியமுடியவில்லை. என்னைச்சோதிக்கவே இங்ஙனம் பேசுகின்றீரோ என்னமோ?

துறவி:—மனோஹாரிணீ! நீ இல்வாழ்க்கையை வெறுத்தேனென்று சொன்னாயே; ஏன்?

மனோ:—தங்களைப்போன்ற துறவிகளைக் கண்டும், இல்லறவாழ்க்கை யல்லற்படுத்துந்தன்மையது என்று அறிந்துமே வெறுத்தேன்.

துறவி:—இல்வாழ்க்கை யல்லற்படுத்துந்தன்மையது என்றாயே அதை நீ அநுபவித்து உணர்ந்தனையா? அல்லது யாராவது சொல்லக் கேட்டனையா?

மனோ:—ஸ்வாமீ! நான் ஏன் அநுபவிக்கவேண்டும்? தங்களைப்போன்ற அறிஞர்கள் இல்வாழ்க்கை துன்பரூபமானது என்றறிந்தன்றோ அதை வெறுத்திருக்கின்றனர். சிரேஷ்டர்களாகிய ஞானிகள் எந்த மார்க்கத்தை யநுஸரிக்கிறார்களோ அதையன்றோ மற்றவர்களும் அநுஸரிக்கவேண்டும். ஆதலால்தான் இல்வாழ்க்கை துன்பரூபமானதென்று பிரத்தியக்ஷமாய் நான் அனுபவிக்காவிடினும், பெரியோர்களால் எழுதப்பட்ட பல ஞானசாஸ்

திரங்களினுலும், பெரியோர்களின் ஆசாரத்தினுலும் இல் வாழ்க்கையில் வெறுப்புற்றேன்.

துறவி :—(தனக்குள்) இவளை வேறுவிதமாய்த்தான் திருப்ப வேண்டும். (பிரகாசமாய்) மனேஹாரிணீ! இப்பொழுது நான் சில கேள்விகளைக் கேட்கின்றேன். நீ அவற்றிற் குத்தக்க பதில் அளிக்கவேண்டும்.

மனே :—ஸ்வாமீ! எனக்குத் தெரிந்த வரையில் விக்ஞாபனம் செய்துக்கொள்ளுகிறேன்.

துறவி :—ஸகல வித்தைகளுக்கும் தேவதை யார்?

மனே :—ஸ்வாமீ! ஸகல வித்தைகளுக்கும் தேவதை "ஸரஸ்வதி" யென்பார்கள். ஆதலாற்றான் அவளுக்குக் கலை மகள் என்ற பெயரும் வாய்ந்திருக்கிறது.

துறவி :—சரி! ஸரஸ்வதி ஸகல சாஸ்திரங்களுக்கும் தேவதை யாயிருப்பதால் அவள் அறியாதது முண்டோ?

மனே :—இல்லவே யில்லை. எல்லா அறிவும் அவளுடைய வடிவமே யாகுமென்று பெரியோர் கூறுவர்.

துறவி : சரி! அது அப்படி யிருக்கட்டும். அவள் இல்லறத்தை மேற்கொண்டிருக்கின்றுளா? அல்லது அதை வெறுத் திருக்கின்றுளா? தெரியுமா உனக்கு?

மனே :—(தனக்குள்) ஆ! என்ன இது! என் இஷ்டத்திற்கு மாருகவும், எனக்குப் பிரதிகூலமாகவும் உள்ள விஷயத் தைப்பற்றிப் பதிலுரைக்க வேண்டியிருக்கின்றதே! என் செய்வது? (பிரகாசமாய்) ஸரஸ்வதி நான்முகப் பிரமனுடையதேவி யென்று ஸகல புராணங்களும் கூறு கின்றமையால் இல்லறத்தை மேற்கொண்டவளென்றே கூறவேண்டும்.

துறவி :—ஸரஸ்வதி எல்லாச் சாஸ்திரங்களை யறிந்தவளாயும் அறிவு வடிவமாயு மிருந்தும் ஏன் இல்லறத்தை மேற்கொண்டு பர்த்தாவுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறாள்? அவளுக்கு "இல்வாழ்க்கை அல்லற் படுத்துந் தன்மையது" என்பது புலப்படவில்லையா வென்ன?

மனோ :—ஸ்வாமீ! ஸரஸ்வதி, இந்த்ராணி முதலிய தேவதைகளுக்கு இல்வாழ்க்கை துன்பந்தருவது அன்றெனநினைக்கின்றேன். ஏனெனில், அவர்களுடைய பதவி இன்பத்தை நுகர்வதற்காகவே ஏற்பட்டதாகும்; அவர்களின் நிலையை மனிதர்களின் நிலையோடு ஒப்பிடல் தகுதியுடைய தாகாதெனநினைக்கின்றேன். சுக துக்கங்களின் மிஸ்ராநுபவத்தினாலன்றோ மனிதப் பிறவியின் இல்வாழ்க்கை அல்லற்படுத்துந் தன்மையதாகவாகின்றது? இது தாங்களறியாததா?

துறவி :—ஹே! பெண்ணே! நீ கூறுவதுண்மையே: பெண்களின் பிறப்பும் இன்ப துன்ப நிகர்ச்சிக்காகவே தான் ஏற்பட்டது. ஸ்திரீகளுக்குத் தாமாய் ஒரு கர்மம் செய்வதில் உரிமை யுண்டோ? சற்றும் இல்லை. கருமம் செய்வதில் புருஷர்களுக்குத்தான் அதிகாரமுண்டு. அவர்களது உத்தரவினால் ஒருகால் பதிவிரதைகள் சில விரதாநுஷ்டானங்களைச் செய்யலாம்; மேலும் "பெண்" என்னும் பதத்திற்கு "விரும்பப்படுபவள்" என்றன்றோ பொருள்? புருடரால் விரும்பப்படுபவள் சுதந்திரத்தை யுடையவளாயிருத்தல் எங்ஙனங்கூடும்? பெண்களுக்குப் பதிவிரதா தர்மத்தைவிடச் சிறந்தது மற்றொரு தர்மமுளதோ? பெண்களிற் சிகாமணிகளாய் விளங்கிய கார்க்கி, மைத்ரேயி, நளாயனி, சீதை, தமயந்தி, மண்டோதரி முதலியவர்களைக் காட்டிலும் நீ

மேம்பட்டவளா? அவர்கள் பதிவிரதா தர்மத்தினுல் பரகதியடையவில்லையா? உன்னுடைய பிடிவாத குணத்தை விட்டு உன் தாய் தந்தையரின் சொற்படி ஒரு ராஜகுமாரனை மணம்புரிந்து ஸ்திரீகளுக்குரிய ஒழுக் கத்தினின்றும் சிறிதும் தவருமல் நாயகனைத் தெய்வ மாகப் பாவித்து அவனுக்குவேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டு இல்லற தர்மத்தை நடத்துவாயாக. இதுவே செய்யத் தக்கது. பரமயோகினியாயும் ஆத்ம ஞானியாயும் விளங்கியிருந்த சூடாலையே தனது நாயக ஞகிய சிகித்துவஜனேடு இனிது வாழ்ந்திருந்தா ளெனின் உனக்கு மாத்திரமா இல்வாழ்க்கை துன்ப ரூபமாய்த் தோன்றுகின்றது?

மனே:—(ஒன்றுந் தோன்ருதவளாய்த் திகைத்து நிற்கின்ருள். யாரோ ஒரு வாலிபன் வந்து துறவிக்கு நமஸ்கரிக்கின்ருன். மனேஹாரிணி ஒரு புறமாய் ஒதுங்கி நிற்கின்ருள்.)

துறவி:—யார் அது! குணசீலனு!! எங்கிருந்து வருகின் ருய்? என்ன விசேஷம்? உனது நண்பன் சௌக் கியமா யிருக்கின்ருனல்லவா?

குணசீ:—ஆண்டவனே! தங்கள்கருணுவிசேஷத்தால்நாங்கள் யாவரும் க்ஷேமமே. எங்களரசர் தனது புத்திர ஞகிய என் நண்பனுக்கு விவாகம் செய்விக்க வேண்டு மென்று பெருமுயற்சி செய்து கொண்டிருக்கின்ருர். எனது நண்பனே தன் தந்தையின் இஷ்டத்திற்குச் சற்றும் இணங்காமல் இருக்கிருர். தாங்கள் அவசியம் எங்கள் ராஜ்யத்திற்கு விஜயம் செய்தல் வேண்டும். தங்களை அழைத்துக்கொண்டு போகும் உத்தேசத் தோடுதான் யான் இங்கு வந்தது.

(என்று ரஹஸ்யமாய்க் காதில் ஏதோ சொல்லுகிருன்)

மனோ :—(தனக்குள்) என்ன ஆச்சர்யமிது! யாரோ ஒருஅரசன் தன் புத்திரனுக்கு விவாஹம் செய்ய முயன்றும் அவன் அதற்கு இணங்கவில்லையாமே? அது யாரா இருக்கலாம்? ஞானப்பிரகாச னென்னும் அரசகுமாரனாயிருக்கலாமா? ஆம். அவனாகத்தானிருக்க வேண்டும்? (சற்று யோசிக்கின்றாள்) சே சே! அவனாயிராது. ஹரி ஹர சாஸ்திரிகள் ஞானப்பிரகாசனுக்கன்றோ என்னைக் கேட்க வந்தது? மற்று யாராயிருக்கலாம்? சரி மேலே என்ன நடக்கின்றதோ பார்ப்போம். என்ன என் மனம் ஏதோ ஒருவாறு மாறியிருக்கின்றது! இத்துறவி இதுகாறும் கூறி வந்த நியாயங்கள் பலவும் மறுக்கமுடியாதனவாய் இருக்கின்றனவே. இவர் வார்த்தைகளுக்கு நான் கட்டுப்பட வேண்டியதாகவே இருக்கின்றது. என்ன செய்வது?

துறவி :—சரி சரி! குணசீலா!! யான் கூடிய சீக்கிரத்தில் வருவதாய் உன் நண்பனுக்குச் சொல்லுவாய். அரசன் புருஷோத்தமனும் இந்துமுகியும் சௌக்கியம் தானே?

குணசீ :—ஆம். யாவரும் சௌக்கியம் தான். போய் வருகிறேன்.

(நமஸ்கரித்துவிட்டுப் போகிறான்)

மனோ :—(தனக்குள்) சரி சரி! ஞானப்பிரகாசனைப் பற்றிய விஷயமே இது; சந்தேகமின்று. அவன் தந்தையின் பெயர் கேட்ட மாத்திரத்தினால் சந்தேகம் தீர்ந்தது.

துறவி :—மனோஹாரிணீ! இங்கு வருவாய். என்ன யோசிக்கின்றாய்?

மனோ :—ஸ்வாமீ! ஒன்றுமில்லை.

துறவி :—நீ எந்த ராஜகுமாரனது மனத்தை ஹரிக்க இச்சிக்கின்றாய்?

மனே :—ஸ்வாமீ! தங்களைப்போன்ற ஞானிகளின் வார்த்தைகளை மீறி நடப்பதும் பேசுவதும் அழகாமோ? நான் இச்சிக்கும் ராஜகுமாரனை மணம் செய்விப்பதாய்த் தாங்கள் வாக்களித்தால் தெரிவிக்கின்றேன்.

துறவி :—அம்மா! அப்படியே செய்கின்றேன்; சொல்.

மனே :—ஸ்வாமீ! காசி ராஜன் புத்திரனை.........

[என்று சொல்லிக்கொண்டே நாணத்தால் தலைகுனிந்து பெருவிரலைப் பார்த்துக்கொண்டு நிற்கின்றாள்.]

துறவி :—(திகைத்து) என்ன! 'காசிராஜன் புருஷோத்தமன் மகன் ஞானப்பிரகாசனையா! (தனக்குள்) சரி சரி! நான் என் வார்த்தைகளினாலேயே கட்டுப்பட்டு விட்டேன். இப்போது என்ன செய்வது? ஞானப்பிரகாசன் மனத்தை மறுபடியும் எப்படி மாற்றுவேன். (பிரகாசமாய்) அரசிளங் குமரியே! என்ன சொன்னாய்? காசிராஜன் புத்திரனையா மணக்க இச்சிக்கின்றாய்? அவன் விவாஹமே வேண்டாமென்று வெறுத்திருப்பதாக நான் கேள்விப்பட் டிருக்கின்றேன். அவனைக் காட்டிலும் அதிக அழகுள்ள அரச குமாரர்கள் அநேகர் இருக்கின்றனர். அவர்களில் யாரையாவது ஒருவனை யிச்சிப்பாய். உன் னிஷ்டப்படி முடித்து வைக்கின்றேன்.

மனே :—ஸ்வாமீ! விவாஹமே வேண்டாமென்று வெறுத்துப் பெற்ற தாய் தந்தைகளை விட்டு ஓடி வந்துவிட்ட என்னுடைய மனத்தை மாற்றிய தேவரீருக்குக் காசிதேசத் திளவரசரின் மனத்தை மாற்றுவது அவ்வளவு பெரிய காரியமா? அவரையன்றி மற்றொருவரை மணக்க யான் இச்சியேன்.

துறவி :—(தனக்குள்) ஏது இது பெருங்கஷ்டமாய் முடிந்ததே! சரி! இவளுக்கே பல நியாயங்களைப் போதித்து இவளைக் கொண்டே ஞானப்பிரகாசன் மனத்தை மாற்ற வேண்டும். (பிரகாசமாய்) சரி! மனோஹாரிணீ!! உன் னிஷ்டப்படியே முடித்து வைக்கின்றேன். இப்போது ஸூர்யோதயமாய் ஒரு ஜாமத்திற்கு மேலாய்விட்டது. இது ஒரு பெருங்காடு, இங்கு உனக்குரிய ஆகாரம் கிடைக்காது. ஆதலால் நாம் பாடலீபுரத்திற்கே செல்லல் வேண்டும். அங்கிருந்து கொண்டே ஞானப் பிரகாசனை அங்கு வரவழைத்து உனது வார்த்தைகளினாலேயே அவனுடைய மனத்தை மாற்றி யவனை மணக்குமாறு செய்கின்றேன்; நாம் போவோம் வா.

[இருவரும் போகின்றார்கள்]

மூன்றாவது காட்சி

இடம் :—பாடலீபுரம் கங்கா நதிக்கரை.

காலம் :—மாலை

பாத்திரங்கள் :—ஹரிஹர சாஸ்திரிகள், தர்மசீலர், துறவி, மனோஹாரிணி (துறவிவேடம்), ஞானம்பிகன்.

தர்மசீலர் :—சாஸ்திரிகளே! உட்காரலாமே இப்படி: சந்தியா வந்தனத்திற்கு இன்னும் பொழுதிருக்காப்போலிருக்கே! [உட்காருகிறார்கள்]

ஹரிஹர :—ஆம் ஆம்! என் தர்மசீலரே! எனக்கு ஒரு ஸந்தேஹம். இக்காலத்தில் சில வாலிபர்கள் விவாஹமே வேண்டாமென்று சொல்லுகிறார்களே; அதற்கென்ன காரணமா யிருக்கலாம்?

தர்ம :—ஓய்! அது என்னுங்காணும் அதிசயம்! நேற்று நீரே பிரத்தியக்ஷமாய்க் காதால் கேட்ட விஷயந்தானே பெண்கள் கல்யாணம் வேண்டாமென்று சொல்லுவது. அதற்கென்ன காரணம்?

ஹரிஹர :—நான் கேட்டதற்குச் சொல்லும் முதலில்.

தர்ம :—நான் கேட்டதற்குத்தான் முதலில் சொல்லுமே நீர்.

ஹரிஹர :—வாலிபர் விவாஹம் வேண்டாமென்று மறுத்து விட்டால், பெண்கள் கல்யாணம் வெண்டாமென்று சொல்லாமல் என்ன சொல்லுவது?

தர்ம :—பெண்கள் விவாஹம் வேண்டாமென்று மறுத்து விட்டால், வாலிபர் விவாஹம்வேண்டாமென்று சொல்லாமல் மற்று என் செய்வது?

ஹரிஹர :—இப்படித் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தால்,

தர்ம :—ஆம். இப்படித்தான் பேச வேண்டியிருக்கிறது. பெண்கள் கல்யாணம் வேண்டாமென்று சொல்லுவதற்கு எங்கள் அரசனது குமாரத்தி மனோஹாரிணியே தக்க ஸாக்ஷி. வாலிபர் விவாஹம் வேண்டாமென்று சொல்லுவதற்கு என்ன ஸாக்ஷியம் இருக்கின்றது? ஆதலால் அதைப்பற்றிப் புத்தியைச்செலுத்தி யோசித்துக் காரணத்தை யாராய்வது வீண்பிரயாசையேயாகும். ஆகையால் என் கேள்விக்குக் காரணம் கூறுங்கள்.

ஹரிஹர :—ஓய்! ஓய்!! அப்படிச் சொல்லிவிடாதேயும். வாலிபர் விவாஹம் வேண்டாமென்று சொல்லுவதற்கு ஸாக்ஷியம் இல்லாமலா நான் காரணம் கேட்டிருப்பேன்?

எங்கள் அரசன் புருஷோத்தமன் புதல்வன் ஞானப்பிரகாசன் தான் விவாகம் வேண்டாமென்று கூறுகிறுன்.

தர்ம :—ஒய் சாஸ்திரிகளே! என்னங்காணும் உங்கள் பேச்சு வியாகாததோஷக்கிரஸ்தமாயிருக்கே. நேற்று "அந்த ஞானப்பிரகாசனுடைய விவாஹார்த்தமாகப் பெண் கேழ்க்க வந்தே"னென்றல்லவா சொன்னீர்? அது உண்மையா? அவன் விவாஹம் வேண்டாமென்று சொல்வது உண்மையா?

ஹரிஹர :—இரண்டும் உண்மைதான். விவாஹம் வேண்டாமென்று சொல்பவனுக்குப் பெண் கேழ்க்கவேதான் நான் இங்கு வந்தேன்.

தர்ம :—அப்படியா! ஆனுல் ரொம்ப சரி!! விவாஹம் வேண்டாமென்று சொல்பவனுக்குப் பெண் கேழ்க்க இதுதான் தகுந்த இடம். ஒரு சங்கதி கேட்டீரோ? அப்படீ புகஞ்சிகொண்டிருக்கே—உங்களுக்கு ஏதாகிலும் தெரியுமா? இன்று காலேயில்கூட அரண்மனேக்குப் போய் வந்தீரே!

ஹரிஹர :—நேக்கு ஒன்றுந் தெரியாதே. அது என்ன சங்கதி பொகையர ஸங்கதி?

[துறவியும், துறவி வேடம் பூண்டுள்ள மனேஹாரிணியும் வருகின்முர்கள்.]

தர்ம :—அந்த ரஹஸ்யம் இங்குவேண்டாம். அதோ பாரும் யாரோ ஒரு ஸன்னியாஸியும் சிஷ்யனும் வருகின்முர்கள். "பகல் பக்கம் பார்த்துப் பேசு ராத்திரி அதுவும் பேசாதே" யென்று சொல்லுவார்கள். நமக்கேன்? அது அரண்மனேயின் விஷயம்.

ஹரிஹர :—ஓய் தர்மசீலரே! ஆமாம்!! ஆமாம்!!! நமக் கேன் அந்த விஷயம். பொழுதாய்விட்டது. ஸந்தியா வந்தனம் செய்வோம் வாரும். ரஹஸ்யம் வீட்டிற்குப் போய்ப் பேசலாம். (போகிருர்கள்)

துறவி :—மனோஹாரிணீ! இந்த கங்காதீரத்தின் வன்ப்பைப் பார்த்தனேயா!! வாஸனே மிகுந்து அடர்ந்த சந்தன மரக்கூட்டத்தினிடையில் உலவி வரும் இளந் தென்றற் காற்ருனது, மஹாராஜாதாக்களுடைய கீர்த்திபோல், எவ்வளவு வாசனே பொருந்தியதாக விருக்கின்றது பார்! கற்களின் மீது ஜர்ஜர சப்தத்துடன் கூடிய அலேக ளானவை "ஓ ப்ரஜைகளே! இந்தத் தெய்வ நதியின் மஹத்துவத்தைக் கேளுங்கள். இது, பொன்ஞட்டின்ப மும் பேரின்பமும் தரத்தக்க ஸகல புவன கர்த்தாவாகிய பரமேஸ்வரனது ஜடா மகுடத்தில் விளங்கா நிற்பது; ஜீவர்களின் மஹா பாபங்களேயும் நிவர்த்திக்கக்கூடியது; ஸகல பீடைகளேயும் பரிஹரிக்கத் தக்கது; வாருங்கள் வந்து சரண மடையுங்கள்" என்று சொல்வதுபோல் மோதிக்கொண்டிருக்கின்றன பார்.

மனே :—ஸ்வாமீ! இதற்கு இவ்வளவு மஹிமை யில்லாமலா பரமசிவன் இதைத் தன் ஜடாமகுடத்தில் தரித்தான்!

துறவி :—மனோஹாரிணீ! சூரியன் அஸ்தமித்துவிட்டான். நாம் இனி எங்கும் போவதற்கில்லே. இன்றிரவு இந்த ஆலயத்திலேயே தங்கி யிருப்போம்.

மனே :—ஸ்வாமீ! அப்படியே செய்வோம்.

[அதிக தூரத்திலிருந்து இவர்களேயே விடாமல் பின்பற்றி வந்த ஒரு வாலி பன் இவர்களே நன்ருய் உற்றுப் பார்க்கின்ருன்.]

வாலிபன் :—(தனக்குள்) ஹா ! ஜகதீசா !! இன்னும் இந்த அநாதையின்மேல் உனக்குக் கருணை வரவில்லையா ? அதிகாலையிலிருந்து இப்பட்டணம் முழுமையும் தேடித் திரிந்தேனே. முதல் முதல் நானன்றோ தண்டனைக்குட் பட வேண்டி வரும் ! ஹா ! மனோஹாரிணீ !! உயிரும் உடலும்போல் இருந்த இந்தப் பாவி ஞானம்பிகை யென்ன தீங்கு செய்தாளென்று இங்ஙனம் செய்தாய் ? ஒரு பேச்சு சொல்லி யிருந்தால் நானும் உன்னோடு வந் திருப்பேனே ! நீ எந்தச் சேலையை யுடுத்திக்கொண்டு போனாயோ ? எங்கே அலைகின்றாயோ ? ஆஹாரததிற்கு என்ன செய்கின்றாயோ ? என்ன செய்வேன் ? எங்கே தேடுவேன் ? பொழுதும் போய்விட்டதே (பார்க்கின்றாள்) அதோ தெரியும் பால ஸன்னியாஸியைப் பார்த்தால் என் யஜமானியைப்போல் இருக்கின்றது. பிரமையினால் அப்படி தோன்றுகின்றதா என்ன ? (பின்னும் நன்றாய் உற்றுப்பார்க்கின்றாள்.) ஆம்! அவளே தான்! சந்தேகமில்லை. ஆயினும் அவர்களுடன் வார்த்தையாடிக் குரலோசை யைக் கேட்கின் ஸந்தேகம்முற்றும் நீங்கும்.(பிரகாசமாய்) முற்றுந்துறந்து முழுமுதலாய் விளங்கும் முனிவர்களே ! அடியேன் எத்தனையோ ஜன்மங்களிற் செய்த தவப் பயனாலன்றோ தங்களைத் தரிசிக்கப் பெற்றது ! கடாக்ஷித்து அருளவேண்டும். (அடியற்ற மரம்போல் கீழே விழுந்து நமஸ்கரிக்கின்றான்)

துறவி :—சாந்தி யுண்டாவதாக ; எழுந்திருப்பாய்.

[அவன்முகத்தை யுற்று நோக்குகின் றார்.]

(தனக்குள்) இதுவும் ஒரு புதுமையே ! இவ்வாலிபன் முகத்தைப் பார்த்தால் ஸ்திரீயைப்போல் தோன்று

கின்றது? இவள் ஒருகால் மனோஹாரிணியின் தோழி யாக இருக்கலாமோ? ஆமாம் அப்படித்தான் இருக்கலா மென ஊகிக்கின்றேன். (பிரகாசமாய்) ஹே வாலிபனே! உன் நாமதேயமென்ன? வாஸஸ்தலமெது?

வாலிபன் :—ஸ்வாமீ! என் பெயர் ஞானம்பிகன் என்று சொல்லுவார்கள். யான் வஸிப்பது இந்நகரமே!

மனோ :—(தனக்குள்) இந்த வாலிபனைப் பார்த்தால் எனது தோழி ஞானம்பிகையைப் போலிருக்கின்றது. பெய ரைக் கேட்டாலும் ஞானம்பிகன் என்றே சொல்லு கின்றான். இதில் ஏதோ சூதிருக்கின்றது. (மார்பில் கையை வைத்து) ஓ மனமே! சற்றுப் பொறுப்பாய். உட லும் உயிரும் போலிருந்த ஞானம்பிகையை மறுபடியும் கூடுங்காலம் நெருங்கியே யிருக்கின்றது?

துறவி :—அப்பா! சூரியன் அஸ்தமித்து நெடுநேரமாயிற்று நீ வீட்டிற்குப் போ. நாங்கள் இங்கேயே யிருக்கிறவர் கள்; துறவிகளுக்கு நின்ற இடம் வீடல்லவா?

வாலிப :—ஸ்வாமீ! யானும் ஒரு திக்கற்ற சிறுவனே. என் னைத்தேடுவார் ஒருவரு மில்லை; ஆதலால் யானும் இன் றிரவு உங்களுடனேயே தங்கியிருக்க உத்தரவுதந்தருள வேண்டும்.

துறவி :—(தனக்குள்) சரி சரி! இவள் ஞானம்பிகை யென் னும் பெண்ணே யாவள். மனோஹாரிணியின் தோழியே. யாதொரு ஸந்தேஹமுமில்லை. (பிரகாசமாய்) அப்படி யானால் உன்னிஷ்டப்படியே யிருக்கலாம். நீங்கள் இரு வரும் இங்கேயே இருங்கள். நான் சற்று வெளியே போய் வருகிறேன். மனோஹரா! நான் சென்று வரட்டுமா?

மனே :—ஸ்வாமீ! தாங்கள் தனிமையாகத்தான் போக வேண்டுமோ?

துறவி :—ஆம். நான் தனியாய்த்தான் போகவேண்டும். இன்னும் இரண்டொரு நிமிஷத்தில் வந்துவிடுகின்றேன். நீ ஞானம்பிகனோடு பேசிக்கொண்டிரு. (துறவி போகின்ருர்)

[பரதேசியும் ஞானம்பிகனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நிற்கிருர்கள்; இருவர் கண்களிலும் நீர் ததும்புகின்றது.]

ஞான :—ஹா! மனேஹாரிணீ!!

மனே :—ஹா! ஞானம்பிகே!! (ஒருவரையொருவர் கட்டியணைத்துக்கொள்ளுகின்றனர்)

மனே :—(தாழ்ந்த குரலுடன்) ஞானம்பிகே! என்னை மன்னிக்கவேண்டும். நேற்றிரவு உன்னுடன் சொல்லாமல் உன்னை விட்டுப் பிரிந்ததற்காக.

ஞான :—மனேஹாரிணீ! நீதான் என்னை மன்னிக்கவேண்டும் நேற்றிரவு நான் உன்னோடு இராததற்கு. நான் இருந்திருந்தால் நீ சொல்லியே இருப்பாய்; நானும் உன்னுடன் வந்தேயிருப்பேன். அஃதிருக்கட்டும். இந்தத் துறவி யார்?

மனே :—(ஞானம்பிகையின் காதில் மெதுவாய் நடந்தவை யாவையும் சொல்லுகின்ருள்.)

ஞான :—இன்னும் என்ன வரவில்லையே துறவி? வெகு நேரம் ஆய்விட்டதே அவர் சென்று.

மனே :—ஆம். இந்த இருட்டில் எங்கே சென்ருரோ தனிமையாய்? நாம் இந்த ஆலயத்திற்குச் சென்று சுவாமி

தரிசனம் செய்து வருவோம் வா. (இருவரும் ஆலயத் திற்குள் செல்கின்றார்கள்.)

B

இடம் :—பூஜாக்கிரஹம்.

காலம் :—முன்னிரவு.

பாத்திரங்கள் :-ஸுகுமாரன், காவற்காரன், துறவி.

ஸுகுமா : செந்தே னொழுகு முக்கனியே
தெவிட்டாப் பாகே தெள்ளமுதே
நந்தாக் கருணை லயவடிவே
நாடற்க்கரிய சுடர்க் கொழுந்தே
பந்தாய் என்னையாடச் செய்
பாவி யிடுக்கண் பாழாக
வந்தாண் டருள்வாய் முழுமுதலே
மணியே முருகவேட் குகனே!
ஹே ஜகதீசா! மனமலர் வாஸா!
பக்த விஸ்வாஸா! பால குமரேஸா!
மறுமலர்ப் பாதா! மங்கள விநோதா!
திருச்செந்தில் நாதா! திசைமுகன் போதா!
கூர்வடி வேலா! குஞ்சரி லோலா!
ஐம்முகன் பாலா! அருங்குண சீலா!
பொன்மயில் வீரா! போரிவாழ் தீரா!
எந்தனுக் குற்ற விடுக்கண் தீர்க்க
இன்றெனக் கருளாய்—எழில் முருகோனே!
வரசிகி வாகன—மணியே சரணம்.
பரம தயாளோ சரணம் சரணம்
தனிகாசலனே சரணம் சரணம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

(என்று மனமுருகி ஸ்தோத்ரம் செய்து கண்களில் நீர்ததும்ப) என் ஐயனே! பன்னிருகையனே! இன்னும் நின்மனம்

கரையாததேனோ? பரிசுத்தமாகிய இந்த ராஜவம்சத்திற்கு ஒரு பெரிய அபவாதம் நேரிட்டுவிட்டதே; என் செய்வேன்? ஐயோ உலை வாயை மூடலாம்; ஊர் வாயை மூடமுடியுமா? ஹா! என்னருந்தவப் புதல்வீ! நீ எங்குச் சென்றனையோ! எங்கு அலைகின்றனையோ? உன் தோழி ஞானம்பிகையையுங் காணோமே! அவளும் உன்னைப் பின்றொடர்ந்து சென்றாளோ அல்லது நீமாத்திரம் தனியாகச் சென்றனையோ? உனது எண்ணத்திற்கு மாறாக நடப்பேனென்று சந்தேகித்து என்னை விட்டகன்றனையோ?

"உரிமை மைந்தரைப் பெறுகின்றது உறுதுயர் நீங்கி இருமையைப் பெறவென்பது பெரியவரியற்கை" இப்படியிருக்க இதற்கு மாறாய்ச் சந்ததி யடைந்ததனால் துன்புறுவதுண்டோ? உன்னை யருமையாய்ப் பெற்று வளர்த்த மோஹனாங்கி கண்ணுங் கண்ணீருமாய்அழுது உயிர்விடுகின்றனளே? என்ன செய்வேன்? ஹா ஜெகதீசா!!

[மூர்ச்சையாய் விழுகின்றனன்]

துறவி:—அப்பா காவலாளியே! என்வருகையை அரசனுக்கு அறிவிப்பாய். அவரிடம் ஒரு ரஹஸ்யமான விஷயம் பேசவேண்டும்.

காவலாளி:—(அரசனிடம் சென்று) அரசே! அரசே!! (அரசன் கண்விழித்துப் பார்க்கிறான்) அரசே! யாரோ ஒரு துறவி வந்திருக்கின்றார். தங்களைக் கண்டு ஒரு ரகசியமான விஷயம் பேசவேண்டுமாம். என்ன கட்டளை?

அரசன்:—(ஹீன ஸ்வரத்துடன்) வரச்சொல் உடனே.

காவலாளி :—ஸ்வாமீ! அரசர் பூஜாக்கிரஹத்தில் இருக்கின்ருர்; வரும்படி உத்தரவு ஆயிற்று போகலாம்.

துறவி :—அரசே! சாந்தியுண்டாவதாக!!

ஸுகுமா :—தாங்கள் இவ்வாஸனத்தில் அமருங்கள், (பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து உற்றுநோக்குகின்ருர்; ஆச்சரியத்துடன் தனக்குள்) என்ன! சில நாளைக்கு முன் நமக்குப் புத்திரி யுண்டாகுமாறு அனுக்கிரகித்த துறவியைப் போலவே இருக்கின்றது. (பிரகாசமாய்) குருமூர்த்தியே! தங்களுடைய தரிசனத்தால் யான் தன்னியனுனேன். அடியேன் பேரில் கடாக்ஷித்து இப்போது தாங்கள் ஈங்கெழுந்தருளிய விசேஷம் யாதோ தெரிவிக்கக் கோருகிறேன்.

துறவி :—அரசே! யான் இப்பொழுது இங்கு வந்தது தங்களுடைய மனச்சஞ்சலத்தைத் தீர்க்கும் பொருட்டே தான். தங்களுடைய அருமைப் புதல்வி மனேஹாரிணி என்னிடத்தில் இருக்கிருள்.

ஸுகுமா :—தங்களிடத்தில் இருக்கின்ருளா! உயிருடன் இருந்தால் அதுவே போதும்.

துறவி :—காசி தேசத்தரசன் புருஷோத்தமன் புதல்வன் ஞானப்பிரகாசனை மணக்குமாறு அவளுடைய மனதைத் திருப்பியிருக்கிறேன். ஆதலால் இதைப்பற்றி யாதொரு கவலையும் கொள்ளற்க. மனேஹாரிணியின் தோழி ஞானம்பிகையும் எங்களோடுதான் இருக்கின்ருள். நாங்கள் யாவரும் கங்காதீரத்தில் ஸ்ரீ பாடலேஸ்வரர் ஆலயத்தில் தங்கியிருக்கின்ரேம். இப்பொழுது ஒரு கடிதம் எழுதிக் கொடுக்கின்றேன். அதை ஞானப்பிரகாசனுக்கு அனுப்பவேண்டும்.

(கடிதத்தை யெழுதித் தருகின்ருர்)

ஸுகுமா :—(கடிதத்தைப் பெற்றுக்கொண்டு) கவலை தீர்க்கவந்த கற்பகமே! தங்களுடைய கட்டளைப்படி நடத்தத் தயாராய் இருக்கிறேன். தாங்களும் என் அருந்தவப் புதல்வியும் ஏன் இங்கு வரக்கூடாது?

துறவி :—சில காரணங்களால் வரக்கூடாது. விவாஹம் இங்கேயே நடக்கும். ஒருவருக்கும் இந்த விஷயத்தை வெளியிடுதல் கூடாது. கடிதத்தை யிப்பொழுதே அனுப்பிவிடும். அனுப்புவதோடு, (ஏதோ ரஹஸ்யமாய் ஸுகுமாரன் காதில் சொல்லுகிறுர்.)

ஸுகுமா :—அப்படியே! அப்படியே! ஸ்வாமீ!! இதைவிட எனக்கு வேறென்ன காரியமிருக்கின்றது. (ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்கின்றுன். துறவி போகிறுர்.)

C

கங்காதீரத்தில் ஸ்ரீபாடலேஸ்வரர் ஆலயம்.

ஞானம் :—மனோஹாரிணீ! அதோ வருகின்றுர் பார் ஒருவர். அவர்தானே?

மனோ :—ஆம்! ஆம்!! அவர்தான். (எதிர்சென்று அழைத்து வருகின்றுர்கள்.)

துறவி :—ஞானம்பிகை— சீ சீ தவறிச் சொல்லிவிட்டேன். ஞானம்பிகன் இருக்கிறுன் அல்லவா?

மனோ:—ஸ்வாமீ! என்ன ஞானம்பிகனைப் பெண்ணாக்கி விட்டீர்களே?

துறவி:—இல்லை! இல்லை!! மறுபடியும் ஆணாக்கி விடவில்லையே!!

மனோ :—யாரை ஆணாக்கினீர்கள்? பெண்ணையா?

துறவி :—(சிரிக்கின்றுர்) ஆனால் உண்மையில் பெண் தானே?

ஞான :—ஸ்வாமீ! மனோஹரனுக்கு விவாகம் செய்விக்கவா?

துறவி :—மனோஹரன் ஞானாம்பிகையை மணக்கமாட்டான்; ஞானப்பிரகாசினியைத்தான் மணப்பான். (யாவரும் சிரிக்கின்றார்கள்)

ஞான :—ஸ்வாமீ! அஸ்தமித்து ஐந்தாறு நாழிகையாய் விட்டது. நான் பட்டணத்திற்குள் சென்று ஏதாகிலும் ஆஹாரம் கொண்டு வருகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்.

துறவி :—நீ தனியாய்ப் போகவேண்டாம். நாம் யாவருமே போவோம்(யாவரும் பாடலீ நகரத்திற்குள் செல்கின்றனர்.)

நான்காவது அங்கம் முற்றிற்று.

ஐந்தாவது அங்கம்

முதல் காட்சி

இடம் :—காசிநகரக் கொலு மண்டபம்.

காலம் :—முற்பகல்.

பாத்திரங்கள் :—புருஷோத்தமன், சுபுத்தி, சித்த சர்மா, சேவகன்.

புருஷோ :—சுபுத்தீ! நமது புரோஹிதர் ஹரிஹர சாஸ்திரிகள் பாடலீபுரம் சென்று நாலைந்து நாட்களாய் விட்டன வல்லவா? இன்னும் வராமைக்கு என்ன காரணமா யிருக்கலாம்?

சுபுத்தி :—அரசே! பாடலீபுரத்தரசன் ஸுகுமாரனது புதல்வி மனோஹாரிணியும் விவாஹம் வேண்டாமென்று ஒரே பிடிவாதமாய் இருப்பதாகக் கேள்வி. ஆயினும் காரியத்தை முடித்துக் கொண்டே வருவாரென்று நம்புகின்றேன்.

புருஷோ :—என்ன ஆச்சரியம்! ஸ்திரீகள் கூடவா விவாகம் வேண்டாமென்று சொல்லுகின்றார்கள்? என்ன இக் கலியினுடைய மஹத்துவம்?

சேவகன் :—சாமீ தண்டம்! பாடலீபுரத்திலிருந்து ஒத்தர் வந்திருக்காங்கொ சாமியைப் பார்க்க. என்ன ஒத்தரவு?

சுபுத்தி :—(சற்று யோசித்து) ராஜேந்திர! பாடலீபுரத்திலிருந்து யாரோ ஒருவர் வந்திருக்கின்றாராம் தங்களைக் காண.

புருஷோ :—வரும்படி சொல்லியனுப்புவாய் மந்த்ரீ!

சுபுத்தி :—(சேவகனை நோக்கி) அடே சேவகா! அவரை வரச் சொல்.

[சேவகன் போய் அவரை உள்ளே அனுப்புகிறான்.]

தூதன் :—அரசே! ஜயமுண்டாவதாக (நமஸ்கரிக்கின்றான்)

சுபுத்தி :—ஐயா! தாங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்? என்ன விசேஷம்?

தூதன் :—ஸ்வாமீ! நான் பாடலீபுரத்திலிருந்து வந்த தூதன். எங்களரசர் ஸுகுமாரவர்மர் ராஜ ஸமுகத்திற்கு இந்தக் கடிதம் கொடுத்தனுப்பி யிருக்கிறார். பெற்றுக் கொள்ளுங்கள். (கடிதத்தைக்கொடுக்கிறான்)

[சுபுத்தி கடிதத்தை யரசனிடம் கொடுக்கிறார். அரசன் கடிதத்தை வாசிக்கிறான்.]

புருஷோ :—சுபுத்தீ! ஸுகுமாரவர்மா நூதனமாய் ஒரு நந்தவனம் பிரதிஷ்டை செய்திருக்கிறாராம். அதில் நாளைக் கடுத்த நாள் காலை பிரவேசிக்கப் போகிறாராம். நம்மை மந்திரிப் பிரதானிகளுடன் குடும்ப ஸஹிதமாய் வரும்படி ஆஹ்வான பத்திரிகை யனுப்பியிருக்கிறார். சிநேகிதர் என்றால் அவர்தான் சிநேகிதர். உம்முடைய அபிப்பிராயமென்ன அங்கே செல்லும் விஷயமாய்?

சுபுத்தி :— அரசே! பாடலீபுரத்தரசர் ஸுகுமாரவர்மா தங்களுடைய பால்யஸ்நேகிதர்; மேலும் நம்முடைய இளவரசருக்கு அவருடைய புத்திரியை விவாகம் செய்விக்கவும் நாம் எண்ணங் கொண்டிருக்கின்றோம். இஃதன்றியும் அவர், சில நாளைக்கு முன், நாம் "ஸரஸ்வதீ நிலயம்" என்னும் ஒரு புத்தகசாலையை ஸ்தாபித்த

போது அவரை வரும்படி யெழுதிய கடிதத்தைக் கௌரவித்து வந்திருக்கிருர். ஆதலால் அவர் எழுதிய கடிதத்தைக் கௌரவப்படுத்தத் தாங்கள் அவசியம் போகவேண்டியதென்றே நினைக்கின்றேன்.

புருஷோ :—சித்த சர்மா! உம்முடைய யோசனை யென்ன?

சித்த :—அரசே! சுபுத்தி கூறிய காரணங்களேயன்றி இன்னுமொரு நுட்பமான காரணம் என் மனதில் தோன்றுகின்றது. அஃதியாதெனில், தமது புத்திரன் ஞானப்பிரகாசனுடைய பிடிவாத மனத்தை மாற்றக் கூடியவள் ஸுகுமாரவர்மாவினுடைய புதல்வி மனோ ஹாரிணியே யாகுமென்று யோசித்தல்லவா ஹரிஹர சாஸ்திரிகள் அங்கு அனுப்பப் பட்டிருக்கிருர். அக் காரிய சித்தியை யுத்தேசித்துத் தாங்கள் ஞானப் பிரகாசனுடன் அங்கு செல்வதே நலமாகுமென்று நினைக்கின்றேன். போனுல் ஞானப் பிரகாசனுக்கும் மனோஹாரிணிக்கும் பரஸ்பரவீக்ஷண்யம் ஏற்படக் கூடும். அதனுல் அவனது மனம் மனோஹாரிணியால் கவரப்படலாம். ஸுகுமாரனுடைய கடிதத்தைக் கௌர வித்தது போலவும் இருக்கிறது; நம்முடைய எண்ண மும் பூர்த்தியாகிறது. ஆதாலால் போவது அவசிய மென்றே நினைக்கின்றேன்.

புருஷோ :—சித்த சர்மா! நன்கு கூறினீர்.

[சுபுத்தியை நோக்கி]

சுபுத்தீ! என் அருந்தவப் புதல்வன் ஞானப்பிரகாசனை வரவழைப்பாய்.

சுபுத்தி :—அடே! சேவகா!! நீ போய் நமது இளவரசரை அழைத்து வா இங்கே.

சேவ:—அப்படியே சாமீ! இதோ வந்தூட்டேன்.

(போகிறான்)

புருஷோ:—சுபுத்தீ! இந்த தூதனுக்கு வேண்டிய திரவியம் கொடுத்தனுப்புவாய். நாம் அவசியம் வருவதாய் ஸுகுமாரருக்குத் தெரிவிப்பாய்.

சுபுத்தி:—அப்படியே அரசே!

தூதன்:—ஸ்வாமீ! இளவரசருக்குங்கூட ஒரு கடிதம் அனுப்பப்பட்டது; முதலில் அவருக்குக் கொடுத்துவிட்டுத் தான் இங்கு வந்தேன். அவரும், அவருடன் சம்பாஷித்துக்கொண்டிருந்த மற்றொருவரும் உடனே பாடலீபுரம் புறப்படவேண்டுமென்றும் பேசிக்கொண்டார்கள்.

புருஷோ:—(தனக்குள்) யாருக்கு! ஞானப்பிரகாசனுக்கா, அவனுக்குக் கூடவா கடிதம் வந்தது? அவனும் பாடலீபுரம் போகிறானுமே. சுகுமாரன் ஏன் அவனுக்குத் தனியாய் ஒரு நிருபம் எழுதினர். ஏதோ இதில் ரகசியம் இருத்தல்வேண்டும். கவனிப்போம்.

சுபுத்தி:—அரசே! ஸுகுமாரன் ஞானப்பிரகாசனுக்குத் தனிப்பட ஒரு நிருபம் எழுதினராம். ஞானப்பிரகாசனும் குணசீலனும் கடிதத்தைக் கண்டதும் உடனே பாடலீபுரம் புறப்பட வேண்டுமென்றும் பேசிக்கொண்டார்களாம். இதனால் அக்கடிதம் ஸுகுமார ராஜாவின் கடிதமா யிருக்குமென்று நான் நினைக்கவில்லை. இதில் ஏதோ ரகசியம் இருக்கின்றது. (திரும்பிப் பார்த்து) என்ன? எங்கே இளவரசர்?

சேவகன்:—சாமீ! நம்ம கொயந்தெ இல்லிங்கொ ஊட்லே. பாலாஜியெ கேட்டேன். கொயந்தையும் அவங்க கூட்

டாலியும் பாடல்புரம் போச்சிங்களாம். சாமீ! இப்பொ தான் போச்சிங்களாம்.

சுபுத்தி :—மன்னர் பெருமானே! ஞானப்பிரகாசனும் குண சீலனும் பாடலீபுரம் சென்றிருக்கிறார்களாம். இதைக் கேழ்க்க மிகவும் ஆச்சரியமா யிருக்கின்றது.

புருஷோ :—(தனக்குள்) ஞானப்பிரகாசன் என்னோடு சொல் லாமல் எங்கும் போகமாட்டானே! என்ன ஆச்சரியம். (சித்தசர்மாவை நோக்கி) சித்த சர்மா! நீங்கள் ராஜ்யத் தைப் பார்த்துக்கொள்ளுங்கள்; நானும் சுபுத்தியும் பாடலீபுரம் சென்று வருகின்றோம். (சுபுத்தியை நோக்கி) சுபுத்தீ! படகுகளைத் தயார் செய்யச் சொல்வாய். நான் அந்தப்புரம் சென்று இந்துமுகியைத் தயாராய் இருக் கும்படி சொல்லுகிறேன்.

சுபுத்தி :—அரசே அப்படியே சித்தஞ் செய்கின்றேன். தாங் கள் அந்தப்புரம் சென்று வாருங்கள்.

(தூதனை நோக்கி) அப்பா! இந்தக் கடிதத்தைக் கொண்டு போய் உங்கள் அரசரிடம் கொடுப்பாய். (சேவ கனை நோக்கி)

அடே சேவகா! இவரை யழைத்துக்கொண்டு கஜானுவுக்குப் போய் இந்த சீட்டைக் கொடுத்து நூறு வராகன் வாங்கிக் கொடுப்பாய்.

சேவகன் :— அப்படியே சாமீ! (தூதனை யழைத்துக்கொண்டு போகிறான்.)

[யாவரும் போகிறார்கள்]

இரண்டாவது காக்ஷி

இடம் :—பாடலீபுரத்திற்கு வெளியே ஒரு ஸரோவரம்.

காலம் :—காலை.

பாத்திரங்கள் :—துறவி, ஞானப்பிரகாசன், குணசீலன்.

[துறவி காலைக் கடன்களை யெல்லாம் முடித்துக்கொண்டு ஸரோவரத்தின் கரையில் உட்கார்ந்திருக்கிறார்.]

துறவி :—(தனக்குள்)

"காண்பானுங் காண்பனவுங் காட்சியும்
வா தனையுடனே கழலவிட்டுச்
சேண்பாவு காட்சிக்கு முதலொளியா மச்சொருபஞ்
சிந்தை செய்வாம்
ஏண்பாலா முள்ளதில தெனு மிரண்டி
னிடையெய்தி யிறவிலாதாய்
மாண்பான வொளிக்கெல்லாம் ஒளியாமச்
சொரூபத்தை மதித்தல் செய்வாம்"

[கண்மூடி நிஷ்டையில் அமர்கின்றார்]

குணசீ :—நண்ப! நமது குருநாதர் ஸ்ரீமுக நிருபத்தில் எழுதிய அடையாளங்கள் யாவும் பொருந்தியிருக்கின்றன இங்கே. இதோ பார் ஒரு சத்திரம்; அதற்கெதிரில் ஒரு ஆலயம்; அதற்கருகே ஒரு தோட்டம்; அத் தோட்டத்தில் ஒரு ஸரோவரம். இதுவேதான் நமது குரு இருப்பதாகத் தெரிவித்த விடமென்று நினைக்கின்றேன்.

ஞானப் :—குணசீலா! நன்கு கூறினய். இதுவாகத்தான் இருக்கவேண்டும். உள்ளே செல்வோம் வா. (தோட்டத் திற்குள் செல்கின்றனர்)

குணசீ :—ஞானப்பிரகாசா! அதோ பார் நமது குரு அக் குளக்கரையில் அமர்ந்திருக்கிறார். நிஷ்டையில் இருக் கின்றார். என்ன தேஜஸ்! என்ன தேஜஸ்!! ஆஹா இன்றல்லவா நன்னாள்!!!

ஞானப் :—குணசீலா! நமது குருநாதரைப்போன்ற தத்துவ ஞானிகளின் தரிசனங் கிடைப்பது பூர்வ ஜென்ம புண் ணியமில்லாதவர்க்கு அரிதினும் அரிதே. ஞானிகளின் தரிசனம் கிடைத்தவர்க்கு எல்லாம் கிடைத்தனவாகவே முடியும். பேசாதிரு சற்று. அவருடைய நிஷ்டைக்குப் பங்கமேற்படப்போகின்றது.

[துறவி கண்விழித்துப் பார்க்கின்றார்]

[ஞானப் பிரகாசனும் குண சீலனும் துறவியின் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரிக்கின்றார்கள்.]

துறவி :—மங்களானி பவந்து! அப்பா ஞானப்பிரகாசா குணசீலா! எழுந்திருங்கள் (எழுந்து கை கட்டி நிற்கின் றார்கள்) உட்காருங்கள் (உட்காருகிறார்கள்)

ஞானப்பிரகாசா! இரண்டு மூன்று நாளைக்கு முன்னே நீ என் என்னை அழைத்துவரும்படி குண சீலனை அனுப்பினாய்?

ஞான :—எனது எண்ணத்தை யறிந்தன்றோ தாங்கள் என்னை இங்கு வரவழைத்துக் கொண்டீர்கள். இதுதான் எனது எண்ணம்.

துறவி :—(தனக்குள்) என்ன இவனுடைய எண்ணம்? மனோஹாரிணியை மணப்பதா!! (பிரகாசமாய்) ஞானப் பிரகாசா! என்ன உனது எண்ணம்? எனக்கு நன்கு விளங்கவில்லையே!

ஞான :—குருமூர்த்தமே! தாங்கள் எதற்காக என்னை இங்கே வரவழைத்தீரோ அதுவே எனது எண்ண மாகும்.

துறவி :—ஆனால் என்னிடத்திலுள்ள பெண்ணை விவாகம் செய்து கொள்வதே உன்னுடைய எண்ணம் போலும்; மெத்த சந்தோஷம்; வேறு ஏதாகிலும் விசேஷம் உண்டா?

ஞான :—ஸ்வாமீ! தங்களிடத்திலுள்ள ஞானப் பெண்ணை மணப்பதே எனது எண்ணம். நேற்றைக்கிரண்டுநாள் முன், காசியில் "புருஷார்த்தம்" என்னும் ஒரு விஷயம் பிரஸங்கிக்கப் பட்டது. அதில் அவ்வுபன்னியாஸகர் "பரம புருஷார்த்தமாகும் மோக்ஷத்திற்கு கிருஹ ஸ்தாஸ்ரமந்தான் சிறந்த ஸாதனம்" என்று சித்தாந்தப் படுத்தினர். அது முதல் என்மனம் சந்தேகத்தால் கவலுகின்றது. இச் சந்தேகத்தைத் தெளிவித்தருள வேண்டுகின்றேன்.

துறவி :—என்ன ஆச்சரியம்! இந்த அற்ப விஷயத்திலா உனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. கவலையடையற்க. ஒரு பரதேசியும் ஒரு வாலிபனும் கங்காநதீ தீரத்தில் ஸ்ரீபாடலேஸ்வரரது ஆலயத்தில் என் வருகைக்காகக் காத்துக்கொண்டிருப்பார்கள். அங்கே செல்லவேண்டும். குணசிலா! எழுந்திரு செல்வோம். யாவரும் போகின் றார்கள்.

விஷ்கம்பம் (கூட்டுரை)

இடம் :—நந்தவனம்.

காலம் :—மாலே.

[ரகுநந்தன மிஸர், ஹீராலால் நந்தவனத்தின் வாயிலில் துப்பாக்கிகளோடு நிற்கிருர்கள்.]

ஹீரா :—அடே மிஸர்! இது என்ன ஆச்சரியமடா! நம்ம ராஜா, ராணி, மந்திரி, மந்திரி பெண், காசிராஜா அவங்க மந்திரி, ரெண்டு பாப்பாருங்கோ, இவங்களெல்லாம் ஏண்டா இங்கே ஒளிச்சிண்டு இருக்காங்கொ? இவங்களுக்கு என்ஞு பயம்? யாருக்குப் பயப்படணும்? யாரோ ஒரு பரதேசியோடு நாலுபேர் வருவாங்கோ அவங்களே மாத்திரம் உள்ளே வுடு; மற்ற யாரையும் உடாதே எண்ணு நம்ம ராஜா ஆக்கினை யிட்டாங்களே என்ஞு சங்கதிடா இது? உனக்கென்ஞு தோணுது?

மிஸர் :—அடே லாலா! ஒருக்கால் சன்னியாசியும் நாலுபேரும் வருவாங்கோ எண்ணு சொன்ஞங்களே, அவங்க நம்ம ராஜாக்கி விரோதிங்களா யிருப்பாங்களோ?

ஹீராலால் :—ஆமாண்டா அப்படித்தான் இருக்கலாம். இங்கே வந்து அவங்கொ ஏதானும் ரஸியம் பேசுவாங்கோண்ணு நம்ம ராஜா அவங்கொ ஒளிச்சிகிணு இருக்காப்போலே இருக்குடா.

மிஸர் :—அடேடே! அப்படிகூட இராதுடா!! வர்றவங்கொ விரோதிங்களாயிருந்தா பொம்மனுட்டிங்கோ ஏண்டா வர்ருங்கோ? (யோசிக்கிருன்) அடே லாலா! ஒண்ணு தோணுது எனக்கு. (மெதுவாய்) முந்தேத்தி ராத்திரி நம்ம ராஜா பொண்ணு எங்கெயோ ஓடிப்போச்சிண்ணி சொல்லிகிஞங்களே உனக்கு தெரியுமா?

ஹீரா :—(மெதுவாய்) ஆமாண்டா! அப்பிடிதான் சொல்லி கினுங்கோ. ஓடிபோனு யென்ன அதனுலெ?

மிஸர் :—அந்தப் பொண்ணு ஒரு வேளே அந்தப் பரதேசி யோடு இருக்குதோ என்னமோ? அந்தப் பொண்ணுக்கு பரதேசீண்ணு ரொம்ப இஷ்டம். அத்தெ ரவசியமாய் பாக்கலாமெண்ணு ஒளிஞ்சிகினி இருக்காங்கோண்ணு நெனேக்கிறேன்.

ஹீரா :—ஆமாண்டா! அப்படித்தான் இருக்கலாம், அடெ டே!! மெதுவாடா மெதுவாடா! அதோ பார்ரு ஒரு கும்பல் வருது. அந்த கும்பல்லே ரெண்டு பரதேசிங் கொ இருக்காங்கோ பார்; தெரிதா? இந்த கும்பல்தான் போலே இருக்குது நம்ம ராஜா சொன்னது.

மிஸர் :—ஆமாண்டா ஆமாம். அவங்கொ இங்கெதான் வர்ருங் கொ. பேசாதெ நிப்போம்.

[துறவியும் மற்ற நால்வரும் நந்தவனத் திற்குள் பிரவேசிக்கிறுர்கள்.]

[ரகுநந்தன மிஸரும் ஹீராலாலும் நந்தவன வாயிலில் யாரும் உள்ளே வராமல் காத்துக் கொண்டிருக் கின்றனர்.]

விஷ்கம்பம் முற்றிற்று

மூன்றும் காட்சி

இடம் :—பாடலீபுரம். நந்தவனம்.

காலம் :—மாலை.

[துறவி, ஞானப்பிரகாசன்,
குணசீலன் வருகின்றூர்கள்.]

பரதேசி :—ஸ்வாமீ! உடல் பொருள் ஆவியாகிய மூன்றையும் தங்கள் சரணங்களுக்கு அர்ப்பணம் செய்தேன். தங்களைக் காணுது இந்நேரம் என் மனம் ஊசலாடியது. (நமஸ்கரிக்கின்றுன்)

துறவி :—மங்கள முண்டாகுக! உனக்கேதேனும் காரிய முண்டா வெளியே செல்ல?

பரதேசி :—என்னுடைய யாவற்றையும் புருஷனுக்கு (ஆத்மாவுக்கு)த் தத்தம் செய்த பரதந்திரனுக்கு வேறு காரியமேது?

துறவி :—அப்படியா! ஆனுல் சரி; உட்காரலாமே.

[பரதேசி, ஞானும்பிகன், ஞானப்
பிரகாசன், குணசீலன், துறவி
யாவரும் சலவைக்கல் மேடைகளின்
மேல் அமர்கின்றனர்.]

துறவி :—ஞானப்பிரகாசா! காசியில் நடந்த "புருஷார்த்தம்" என்னும் உபன்னியாஸத்தில் உனக்கு ஏதோ ஸந்தேஹமிருப்பதாகக் கூறினுயல்லவா? அது என்ன ஸந்தேஹம்?

ஞான :—குறை தீர்க்க வந்த குருமூர்த்தியே! புருஷார்த்தமென்னும் விஷயத்தைப்பற்றி யுபன்னியசித்த பண்டிதர் "பரம புருஷார்த்தமாகிய மோக்ஷத்திற்குச் சாதனமாயது கிருஹஸ்தாஸ்ரமம்" என்று சித்தாந்தம் செய்தார். ஸர்வதுக்க நிவர்த்தி பரமாநந்தப் பிராப்தி வடிவ

மோக்ஷம் ஸன்னியாஸாஸ்ரமம் ஒன்றினுலேயே பெறக் கூடுமென்பது வேதாந்த சாஸ்திரத்தின் துணிபா யிருக்க, அவ்வுபன்னியாஸகர் எங்ஙனம் கிருஹஸ் தாஸ்ரமத்தினுல் பரம புருஷார்த்தத்தை யடையக் கூடுமென்று சொல்லலாம்? உபன்னியாஸகர் கூறிய அவ் வார்த்தைகள் வேதாந்த சாஸ்திரத்துக்கு முற்றும் விரோதமல்லவா?

துறவி:—ஞானப்பிரகாசா! நன்கு கூறினுய்! (பரதேசியை நோக்கி) அப்பா பரதேசீ! ஞானப்பிரகாசன் கூறும் விஷயத்தில் உனது அபிப்பிராயமென்ன?

பரதேசி:—(துறவியை நோக்கி) ஸ்வாமீ! அவர் கூறும் விஷ யம் ஒருவருடைய அபிப்பிராயத்தை யபேக்ஷித்திருப்ப தாகத் தோன்றவில்லையே. உபன்னியாசகரின் வார்த் தைகள் முற்றும் வேதாந்த சாஸ்திர விருத்தமேயா மென்று தீர்மானமாகச் சொல்லுகின்ருரே. என் னுடைய அபிப்பிராயம் எதற்கு?

துறவி:—அப்படியன்று; பரம புருஷார்த்தமாகிய மோக்ஷ மானது கிருஹஸ்தாஸ்ரமத்தினுல் அடைய முடியு" மென்று அவ்வுபன்னியாசகர் கூறியது வேதாந்த சாஸ் திர விருத்தமா? அன்ரு? என்பதில் உம்முடைய அபிப்பிராயமென்ன?

பரதேசி:—ஸ்வாமீ! பரம புருஷார்த்தமாகிய மோக்ஷம் ஸன் னியாஸாஸ்ரமம் ஒன்றினுலேதான் பெறக்கூடுமென்பது வேதாந்த சாஸ்திரத்தின் சித்தாந்தமாயிருந்தால், "மோக்ஷஸாதனம் கிருஹஸ்தாஸ்ரமமாம்" என்னும் அவ்வுபன்னியாஸகரின் கூற்று சாஸ்திர விருத்தமாக லாம். ஆனுல்,

ஞானப் :—ஐயா பரதேசியே! மோக்ஷம் ஸன்னியாஸாஸ்ர மம் ஒன்றினாலேயே பெறக்கூடுமென்பது சாஸ்திரங் களின் சித்தாந்தமென்பதில் தங்களுக்குச் சந்தேக மிருக்கின்றது போல் தோன்றுகின்றது.

பரதேசி :—சந்தேகமில்லை ; ஆக்ஷேபமே இருக்கின்றது.

ஞான :—(துறவியை நோக்கி) ஸ்வாமீ! பரதேசி என்னை வாதத்திற்கு அழைக்கின்றனர் போல் தோன்று கின்றது.

துறவி :—எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது.

ஞானப் :— தங்களுக்கு இஷ்டமிருந்து உத்தரவு கொடுத்தால்,

குணசீ :—பார்க்கலாம் வாதமிட்டு.

துறவி :—அப்பா ஞானப்பிரகாசா! நீயும் என் சிஷ்யன், இப் பரதேசியும் என் சிஷ்யனே. நீங்கள் இருவரும் வாதம் செய்ய அதைக் கேழ்க்க எனக்கும் இஷ்டமாகத் தானே இருக்கும்!

ஞானப் :—ஸ்வாமீ! அப்படியானால் சரி. (பரதேசியை நோக்கி) ஐயா பரதேசியே! உம்முடைய ஆக்ஷேபணை யென்ன?

பரதேசி :—ஐயா ஞானப் பிரகாசரே! என்னுடைய ஆக்ஷே பணையைப் பிறகு சொல்லுகிறேன். முதலில் நான் கேழ்க்கும் இரண்டொரு கேள்விகளுக்குப் பதிலுரைக்க வேண்டுகின்றேன்.

ஞானப் :—அப்படியே கூறுகின்றேன். என்ன கேள்விகள் அவை?

பரதேசி :—உம்முடைய ஆஸ்ரமம் எது?

ஞானப் :—பிரஹ்மசர்யம்.

பரதேசி :—ஆஸ்ரமம் என்றால் என்ன?

ஞானப் :—வரையறுக்கப்பட்ட ஒழுக்கத்திற் குரிய ஒரு நிலையே ஆஸ்ரம மெனப்படும்.

பரதேசி :—ஒழுக்கமென்ருல் என்ன ?

ஞானப் :—தத்தம் வர்ணாஸ்ரமங்களினின்றும் வழுவாது நடத்தலே ஒழுக்கம் அல்லது ஆசாரமாகும்.

பரதேசி :—ஒழுக்கத்தின் பயன் யாது ?

ஞானப் :—"ஒழுக்கம் விழுப்பந்தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்னும் ஆன்ருேர் வாக்கியத்தின்படி ஒழுக்கத்தின் பயன் ஞானமே யாகும்.

பரதேசி :—சரி! இனி புருஷார்த்தமென்னும் பிரசங்கத்தில் தங்களுடைய ஆக்ஷேபணை யாது ?

ஞானப் :—மோக்ஷம் ஸன்னியாஸாஸ்ரமம் ஒன்றினுலேயே பெறக்கூடியதாயிருக்க அவ் வுபன்னியாசகர் "கிருஹஸ் தாஸ்ரமம் மோக்ஷ ஸாதனமாம்" என்று எப்படிக் கூறலாமென்பதே யெனது ஆக்ஷேபணை.

பரதேசி :—"கிருஹஸ்தாஸ்ரமம் மோக்ஷஸாதனமா"மென்று சொன்ன அவ் வுபன்னியாஸகரது கூற்றும் நல முடையதே யாகும். இதுவே எனது பிரதிக்ஞை (துறவியை நோக்கி) ஸ்வாமீ! இந்த வாதத்தில் கிருஹஸ் தாஸ்ரமம் மோக்ஷ ஸாதனமாகுமென்று நான் சித் தாந்தம் செய்யும் பக்ஷத்தில், இவர் கிருஹஸ்தாஸ்ரமத் தை மேற் கொள்ளல் வேண்டும்.

ஞானப் :—(துறவியை நோக்கி) குருமூர்த்தமே! ஸன்னியா ஸாஸ்ரமமே மோக்ஷ ஸாதனமாமென்று நான் சித்தாந் தம் செய்யும்பக்ஷத்தில், இவர் ஏற்கெனவே ஸன்னியாசி யாய் இருப்பதாலும், ஸன்னியாசியாயிருந்தும் கிருஹஸ்

தாஸ்ரமத்தை மேன்மையாகக் கூறுவதாலும் இவரும் கிருஹஸ்தாஸ்ரமத்தையே மேற்கொள்ளல் வேண்டும்.

பரதேசி :— அப்படியே ! அதற்கென்ன தடை !!

துறவி :—ஆனால் சரி ! வாதத்திற்கு ஆரம்பிக்கலாம். அப்பா ஞானப்பிரகாசா ! நீயே உன் பக்ஷத்தை முதலில் கூறு வாய்.

ஞானப் :—ஸ்வாமீ ! தங்கள் ஆஞ்ஞையின் படியே என் பக்ஷத்தையே முதலில் கூறுகின்றேன்.

1 "கர்மங்களினாலும், புத்திரர்களாலும், தனத்தினாலும் அடைதற்கு முடியாமல், இவற்றையெல்லாம் வெறுத்த ஸன்னியாஸத்தினாலேயே மோக்ஷம் பெறக்கூடும்" என்றும்,

2 "பிரஹ்ம ஞானத்தை யடைய இச்சிக்கின்றவன் பரம ஹம்ஸ ஸன்னியாஸத்தைக் கிரஹித்தல் வேண்டும்" என்றும்,

3 "ஸம்ஸாரத்தை நிஸ்ஸாரமென்று தெளிந்து ஸாரமாகிய பிரஹ்மத்தை யடைய விருப்ப முடையவராய் விவாஹத்தை வெறுத்துப் பரம வைராக்கிய ஸன்னியாஸாஸ்ரமத்தைக் கொள்ளுகிறவர்களே மேலோராவர்" என்றும் கூறும் உபநிஷத் பிரமாணங்களைச் சற்றுச் சீர் தூக்கிப் பார்ப்போமாயின் பரம புருஷார்த்தமாகிய மோக்ஷம் ஸன்னியாஸாஸ்ரமம் ஒன்றினாலேயே பெறக் கூடுமெனச் சித்திக்கவில்லையா ? மேலும் மோக்ஷ மென்பது ஞானஸ்வரூபமாய் விளங்கும் ஒரு நிலையாகும். கிருஹஸ்தாஸ்ரமமோ நித்திய நைமித்திக கர்மானுஷ்டானங்களாலும், மனைவி, மக்கள், சுற்றத்தார் முதலியவர்களைக் காப்பாற்றுவதற்குரிய கிருஷி, வியாபாரம்

முதலிய பிரயத்தனங்களாலும், விழுங்கப் பெற்றது. கர்மானுஷ்டானாதிகளுக்கும் ஞானஸ்வரூப மோக்ஷத்திற்கும் இருள் வெளிச்சங்கள், ஜலம் அக்கினிகள் முதலிய வற்றிற்கிருப்பது போல விரோதபாவமே யுண்டு. ஆதலால் கர்மாதி வியாபாரத்தோடு கூடிய கிருஹஸ்தாஸ்ரமம் மோக்ஷ ஸாதன மன்றும்; மற்றே, அது மோக்ஷத்திற்குப் பிரதி பந்தகமேயாகும். ஆதலாலன்றே ஸ்ரீ மஹா தேவரது லீலாவதாரமாகிய ஸ்ரீ சங்கர பகவத்பாதர் பிரஹ்மசர்யத்திலிருந்தே ஸன்னியாஸம் பெற்றுக்கொண்டது? இதனால் மோக்ஷ ஸாதனமானது ஸன்னியாஸாஸ்ரமமே; கிரஹஸ்தாஸ்ரமம் அன்று; என்பது தெளிவாய்ப் புலப்பட வில்லையா?

பரதேசி:—ஐயா! ஞானப் பிரகாசரே! ஆஸ்ரமம் என்பது வரையறுக்கப்பட்ட ஒழுக்கத்திற்குரிய ஒரு நிலையே யாகுமென்று தாங்கள் முன்னர் கூறியிருக்கின்றீர்; அல்லவா?

ஞான:—ஆம்! கூறியிருக்கின்றேன். அதனாலென்ன?

பரதேசி:—ஆதலால் ஸன்னியாஸாஸ்ரமத்திற்கும் கிரஹஸ்தாஸ்ரமத்தைப் போல அதற்குரிய ஆசரணை யுண்டல்லவா?

ஞான:—உண்டு. இதில் சந்தேகமென்ன?

பரதேசி:—ஒழுக்கமாவது யாதென்று கூறினீர்?

ஞான:—தத்தம் வர்ணாஸ்ரமங்களுக்குரிய தர்மங்களினின்றும் சிறிதும் வழுவாது நடத்தலே ஒழுக்கமாகும்.

பரதேசி:—சரி! என் மனிதர்கள் தத்தம் வர்ணாஸ்ரமங்களினின்றும் வழுவாது நடத்தல் வேண்டும்?

ஞான :—ஒழுக்கம் ஞானத்திற்குக் காரணம் என்று முன்னரே கூறப்பட்டதை மறந்தீரா?

பரதேசி :—ஞானத்தின் பயனென்ன? ஏன் அதை மனிதர்கள் அடையவேண்டும்?

ஞான :—ஆச்சரியம்! ஆச்சரியம்!! ஞானத்தின் பயன் மோக்ஷம் என்றறியீர் போலும்.

பரதேசி :—ஐயா ஞானப்பிரகாசரே! நன்கு கூறினீர். ஆஶ்ரமங்களின் பயன் ஞானமா? அந்த ஞானத்தாலடையும் மோக்ஷமா? ஞானமாகும் பக்ஷத்தில் மனிதர்கள் பிரஹ்மசர்ய, கிரஹஸ்த, வானப்பிரஸ்த, ஸன்னியாஸமென்னும் நான்காஶ்ரமங்களினின்றும் விதிப்படி ஒழுகி ஞானத்தைப் பெற்று அதன் மூலமாய் மோக்ஷத்தைப் பெறுவரென்பது திண்ணம்.

ஆஶ்ரமங்களின் பயன் மோக்ஷமே யென்னும் இரண்டாம் பக்ஷத்தில், மேற்கூறிய நான்கு ஆஶ்ரமத்தார்க்கும் மோக்ஷம் சித்திக்கின்றது. சித்திக்கவே, "கிரஹஸ்தாஸ்ரமம் மோக்ஷஸாதனமாகும்." ஆகவே கிருஹஸ்தாஶ்ரமும் மோக்ஷஸாதனமாமேன்னும் அவ்வுபன்னியாசகரின் வார்த்தை வேத சாஸ்திர விருத்தமன்றென்பது சித்தாந்தம் செய்யப்பட்டது. அல்லவா?

ஞான :—(தனக்குள்) ஹா! என்ன ஆச்சரியம்!! என் வார்த்தைகளே எனக்கு விரோதிகளா யிருந்தனவே! என்ன செய்வேன்! இப்போது வேறு விதமாய்த் திருப்பிப் பேசுவதும் அழகல்லவே! குருவின் பாதமே கதி.

[ஒன்றுந் தோன்ருதவனுய்த் துறவியின் முகத்தை நோக்குகின்ருன்.]

குணசீ :—(ஆக்கிரஹத்துடன்) ஐயா பரதேசியே! நீர் ஸன்னியாசியாய் இருந்தும் துச்சமாகிற ஸம்ஸார ஸாகரத்தில் அமிழ்ந்து மக்களாகிய முதலைகளால் விழுங்கப்படும் கிருஹஸ்தனை மேன்மையாகக் கூறுவது மிகவும் வியக்கத்தக்கதே. ஒருகால், கிரஹஸ்தாஸ்ரமமே மேன்மையானதென்று நீர் உண்மையாய் நினைக்கும் பக்ஷத்தில், என் நீர் கிரஹஸ்தாஸ்ரமத்தை மேற் கொள்ளாமல் ஸன்னியாஸாஸ்ரமத்தை மேற்கொண் டிருக்கின்றீர்? ஒழுக்கமும் உபதேசமும் மாறுபட்டுள்ளது மூர்க்கரிடத்திலன்றோ?

ஞான :—குணசிலா! நன்கு கூறினாய்!! ஐயா பரதேசியே!! இதற்கென்ன பதிலளிக்கின்றீர்?

[பரதேசி தானணிந்திருக்கும் ஸன்னியாசியுடைகளைக் கழற்றிவிட்டு மனத்தைக்கவரும் ஒரு பெண் வடிவாய் நிற்கின்றாள். ஞானப்பிரகாசனும் குணசீலனும் திகைத்துச் சலவைக்கல் மேடையினின்றும் கீழே குதித்து ஒரு புறமாய் நிற்கின்றார்கள்.]

துறவி :—அப்பா ஞானப்பிரகாசா! என்ன யோசிக்கின்றாய்?

ஞான :—கவலை யொழிக்குங் கற்பகமே! யோசித்துச் செய்த காரியத்திற்கு என்ன யோசனை வேண்டியிருக்கின்றது? ஸ்வாமீ!! எங்ஙனம் மனமானது பரஸ்பரம் விரோதமான ஸங்கல்ப விகல்பங்களோடு கூடியதாயிருக்கின்றதோ, அங்ஙனமே தாங்கள் பரஸ்பர விரோதமான எண்ணங்களோடு கூடிய சீடர்களையுடையவரா யிருக்கின்றீர்கள். தாங்கள் எந்தப் பக்ஷத்தில் சேருவீர்களோ அந்தப் பக்ஷமே ஜெயமுடையதாகும் என்பதற்கு

என்ன தடை? ஆனால் ஒரு ஸந்தேஹம். தாங்களேன் முதலில் எனக்கு வைராக்கியத்தை யுண்டாக்கினீர்கள்?

துறவி :—அதன் காரணத்தைப் பிறகு கூறுகிறேன். இப்பொழுது பந்தயத்தின்படி நீ கிருஹஸ்தாஸ்ரமத்தை யநுஷ்டிப்பதற்கென்ன தடை?

குணசீ :—ஸ்வாமீ! தாங்கள் முன்னர் உபதேசித்த வாக்கியங்கள் காரணத்தோடு தவறு என்று எப்பொழுது நிச்சயிக்கப்படுகின்றனவோ அப்பொழுதுதான் அவ்வுபதேசத்திற்கு மாறான கொள்கையை யனுஷ்டிக்க முடியும்; ஆதலால் இல்லற தர்மத்தை நிந்தித்ததற்குக் காரணம் கூறவேண்டுகின்றேன்.

துறவி :—குணசீலா! நன்கு கூறினாய். ஞானப்பிரகாசா! யான் முன்னர் உங்களுக்குக் கூறியதே மேலான உண்மையாகும். அதற்கு மாறாக யான் எப்பொழுதும் கூறேன். நீங்களும் அவ் வுபதேசத்தை யெப்பொழுதும் மறத்தல் கூடாது.

ஞானப் :—அங்ஙனமாயின், தங்களுபதேசத்திற்கு மாறாகிய கொள்கையை இப்பொழுது அனுஷ்டித்தல் எங்ஙனம் கூடும்?

துறவி :—அப்பா ஞானப்பிரகாசா! அங்ஙனமன்று; நீ இப்பொழுது கிரஹஸ்தாஸ்ரமத்தை ஸ்வீகரித்தாலும் என் உபதேசத்திற்கு மாறான கொள்கையை அனுஷ்டிப்பதாக ஏற்படாது; ஏனெனில்,

"ஸ்வரூபம் நாமே எனத்திடமாய்த்
அணிந்த பேர்கள் இல்லறத்தை
மருவி நீங்கா திருந்திடினும்
மற்றோர் குறைவும் அவர்க்கில்லை"

என்னும் பிரமாணத்தின்படி ஜனக மஹாராஜா முதலி

யவர்கள் இல்லறத்திலேயே இருந்தும் மஹா ஞானிக ளாகவே விளங்கினர்கள். மனைவி, மக்கள், பொருள், பூமி, வீடு, வாசல், யானை, சேனை முதலியவற்றில் யாதொரு பற்று மின்றி எவனுடைய மனமானது நிர்மலமாயிருக்கின்றதோ, அவன் எந்த ஆஶ்ரமத்தில் இருந்தும் இராதவனே யாவன். அவனே நிஸ்ஸங்கி. மனைவி மக்கள் முதலிய பொருள்களில் எவனுக்குப் பற்றின்மை யுண்டாகுமெனின், மனைவி மக்கள் முதலிய பொருள்களில் தோஷ திருஷ்டியை யுடையவர்க்கே யாகும். ஆதலாற்றான் யான் உங்களுக்கு முதலில் தோஷ திருஷ்டியை யுபதேசித்தேன். தாரபுத்திராதிக ளிடத்துள்ள பற்றேதான் ஸம்ஸாரமாகிய துன்பத் திற்குக் காரணம். எங்ஙனம் வறுக்கப்பட்ட விதை யானது முளைக்குக் காரணமாவதில்லையோ, அங்ஙனமே பற்றற்ற கிரஹஸ்தன் மனமானது ஸம்ஸாரமாகும் துன் பத்திற்குக் காரணமாவதில்லையாம். ஆதலால், ஞானப் பிரகாசா! குணசீலா! நீங்கள் உங்கள் சந்தேகங்களை விட்டு விடுங்கள். ஞானப்பிரகாசா! நீ, நிஸ்ஸங்க மாகிய கிரஹஸ்தாஶ்ரமத்தை மேற்கொள்வாயாக. இதோ உன் எதிரில் நிற்கும் பெண், மனோஹாரிணி பரம வைராக்கிய முடையவளாகும்; சாந்தம், சந்தோ ஷம், ஜீவகாருண்யம், பொறுமை, தூய்மை, சத்தியம், நடுவு நிலைமை முதலிய ஸத்குண ஸம்பத்தியை யுடை யவள்; அகளங்கமான கீர்த்தியையுடைய அரசகுலத் தில் பிறந்தவள். ஆதலால் அவளை விவாஹம் செய்து கொண்டு அரசர்க்குரிமையான ராஜ்யபாரத்தை வஹித் துத் துஷ்ட நிக்கிரஹ சிஷ்ட பரிபாலனம் செய்து தாய் தந்தைகளைத் திரிகரண சுத்தியுடன் போற்றி

மன்னுயிரைத் தன்னுயிர் போற் காத்துச் செங்கோல் செலுத்தி வருவாயாக. இங்ஙனம், வஸிஷ்டர் ஸ்ரீராம ருக்கு உபதேசித்தார். ஸ்ரீராமனும் அதைக் கடைப் பிடித்து ஒழுகினர். ஆதலால் நீயும் இதைக் கடைப் பிடித்து ஒழுகி யாக்ஞவல்கியர், யுதிஷ்டிரர், ஜனகர், உன் பாட்டனாகிய அஜாதசத்ரு முதலியவர்களைப் போல் அழியாப் புகழையும் நித்தியாநந்தவடிவ முத்தி யையும் பெற்று நிரதிசயா நந்தக்கடலாய் விளங்கு வாயாக.

[குணசீலனை நோக்கி]

அப்பா குணசீலா! உனக்கும் இதுவே உபதேசமாகும். எங்ஙனம் ஞானமின்றிக் குணங்கள் பிரகாசிக்காவோ, குணசீலமின்றி ஞானம் பிரகாசிக்காதோ, அங்ஙனமே ஞானப் பிரகாசனின்றி நீயும், நீயின்றி, ஞானம்பிரகாச னும் பிரகாசிக்கமாட்டீர்கள். ஆதலால் நீங்கள் இரு வரும் உயிரும் உடலும் போல் ஒத்திருப்பீராக.

[மனோஹாரிணியை நோக்கி]

அம்மா மனோஹாரிணீ! நீ ஞானஸ்வரூபிணியாய் இருப் பதால், ஞானப்பிரகாசனுடைய மனதை யுனது சாதுர்ய மான வார்த்தைகளால் வென்றனை. உனக்குத் தகுந்த நாயகன் ஞானப்பிரகாசனே யாவன். நீ இவனை மணந்து, கார்க்கி, மைத்ரேயி, நளாயினி, சீதை, தம யந்தி, சந்திரமதி, ஸாவித்திரி முதலியவர்களைப்போல் பதிவிரதா தர்மத்தை நிலை நிறுத்துவாயாக.

[ஞானப்பிரகாசனுக்கும் மனோஹாரி ணிக்கும் பாணிக்கிரஹணம் செய்விக் கிறார்] [லதாக்கிரஹத்திற்குப் பின் ரஹஸ்யஸ்தலங்களில் மறைந்திருந்த

ஸுகுமாரவர்மா, மோஹனங்கி, விவேகசர்மா, விலாஸமுகி, தர்ம சீலர், முதலியவர்கள் லதாகிரஹத்திற்குள் பிரவேசிக்கிருர்கள். ஞானப்பிரகாசனும் குணசீலனும் திகைத்துப் பார்க்கின்றனர். வாலிப வேஷத்தோடிருக்கும் ஞானம்பிகை ஆச்சரியத்துடன் பிரமிக்கின்ருள்.]

ஸுகுமார :—(துறவியை நமஸ்கரித்து) ஸ்வாமீ! தாங்கள் செய்த பேருபகாரத்திற்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப்போகின்ரேம்? சாதகப்புட்கள் மேகங்களுக்கு என்ன பதிலுபகாரம் செய்யக்கூடும்? (மனோஹாரிணியை நோக்கி) ஓ என் அருந்தவப்புதல்வீ! மனோஹாரிணீ!! உன் ஹ்ருதய கமலமானது இந்த மஹா ஞாதாவின் உபதேசமாகிய சூர்யோதயத்தினல் மலர்ச்சியை யடைந்திருக்கின்றது. உன்னைப் பெற்றதனலன்ரே யாங்களும் பவித்திரரானேம்?

மோஹ :—(மனோஹாரிணியைக் கட்டியணைத்துக் கொண்டு முத்தமிட்டு) ஓ என் செல்வமே! ஜலத்தின் பிரிவால் துடித்து உயிர் நீங்கும் மீன்களே போன்று, உன் பிரிவால் என்னுயிர் துடித்துப் போயிற்றே! நீ இப்படியும் செய்யலாமா?

விலாஸ :—அடீ மனோஹாரிணீ! நான் யார் தெரிகிறதா?

மனோ :—(திகிலடைந்து தழதழத்தகுரலுடன்) என்ன விலாஸமுகி! அப்படிக் கேழ்க்கின்ருய்?

விலாஸ :—நீ இப்பொழுது புது மனோஹாரிணியல்லவா?

மனோ :—(நாணத்துடன்) நான் புது மனோஹாரிணியாகிற போது நீ மாத்திரம் புது விலாஸமுகியாக மாட்டாயா?

வாலிபன் :—ஆகமாட்டாயா என்கின்ற சந்தேகமெதற்கு? புது விலாஸமுகியாகத்தான் இருக்கின்றாள். இல்லா விடில் புது மனோஹாரிணியை யெப்படி யறியமுடியும்?

[விலாஸமுகி வாலிபனை யுற்று நோக்கு கின்றாள்.]

விலாஸ :—(தனக்குள்) இவ்வாலிபன் யார்? குரலோசையைப் பார்த்தால் பெண்போலிருக்கின்றது. (யோசிக்கின்றாள்) சரி சரி! இவள் ஞானம்பிகையே! சந்தேகமில்லை. (பிரகாசமாய் வாலிபனைநோக்கி) ஐயா! நீர் கூறுவதுண் மையே. பச்சைக் கண்ணாடியை யணிந்த கண்களுக்கு எல்லாப் பொருள்களும் பச்சையாய்த்தானே தோன் றும். நீர் உள்ளும் புறமும் புது ஞானம்பிகையாய் இருப்பதால் உமது கண்களுக்கு யாவரும் புதிதாகக் காணப்படுகின்றார்கள். இதில் என்ன ஸந்தேஹம்? நீரேன் இன்னும் ஆண் வேஷம் தரித்திருக்கின்றீர்? நடுநிலைமையே தவமாகக் கொண்டிருக்கும் இத்துறவி யின் சன்னிதானத்திற்கூட புருஷர்கள் ஸ்திரீகளைத் தூஷிப்பார்களென்று பயமா என்ன? வேண்டாம் அப் பயம்; நிர்ப்பயமாய் ஆண் வேஷத்தைக் களைவாய்.

ஞானம் :—எனக்கென்ன பயம்?

[ஞானம்பிகை ஆண் வேஷத்தை நீக்கி ஸ்வயரூபமாய் நிற்கின்றாள்]

தர்மசீலர் :—அம்மா மனோஹாரிணீ! உனக்குத் தான் இந்த மஹாத்மாவின் உபதேசத்தால் துன்பத்தைத் தரும் ஒன்றே இன்பமாய்ப் புலப்படுகின்றது. ஆதலால் நீ புது மனோஹாரிணியே. நீ கெட்டதுமன்றி விலாஸ முகியையும் கெடுக்கப் பார்க்கிறாயே! இது என்ன அக்கிரமம்?

மனே :—ஸ்வாமீ! மன்னிக்க வேண்டும். நான் முன்னர் எதைத் துன்பந்தரும் ஒன்றென அறியாமையால் நினைத்தேனோ அது, துன்பம் தருவதுமல்ல, இன்பந் தருவதுமல்ல வென்று இப்பொழுது அறிகின்றேன். மஹாத்மாக்களின் ஸந்நிதான விசேஷத்தால் விலாஸ முகியும் மற்றவர்களும் அங்ஙனமே அறியக்கூடுமென நினைக்கின்றேன்.

தர்ம :—அப்படியானால் சரி! அம்மா விலாஸமுகீ! மனோ ஹாரிணி கூறுவதுண்மையே; நீ குணசீலையே. குண சீல மற்றவர்களுக்கு விலாஸமுகம் அமையாதன்றோ? "அகத்தினழகு முகத்தில்" என்னும் பழமொழி பொய்க்குமா என்ன?

விவேகசர்மா :—ஸ்வாமீ! தர்மசீலரே!! தங்களைப்போன்ற தர்மசீலர்களுடைய வார்த்தை யொருகாலும் பொய்யா காது. குணசீலனே என் புதல்வி விலாஸமுகிக்கு நாயகனாக ஆசீர்வதிக்க வேண்டும்.

[விலாஸமுகி நாணத்தால் தலை குனிந்து கொண்டு கடைக்கண்ணால் குண சீலனைப் பார்க்கின்றாள்.]

[லதாக்கிருஹத்திற்குப் பின் ரஹஸ்ய ஸ்தலத்தில் மறைந்திருந்த புருஷோத்தமன், இந்துமுகி, ஸுபுத்தி, ஹரிஹர சாஸ்திரிகள் லதாக் கிருஹத்திற்குள் பிர வேசிக்கின்றனர்.

[யாவரும் துறவிக்கு நமஸ்கரித்து நிற் கின்றனர்.]

புருஷோ :—என்னருமைப் புதல்வனே! ஞானப்பிரகாசனே!! மங்களமுண்டாகுக!

இந்துமுகி :—என் கண்மணீ! எங்களுக்குச் சொல்லாமல் நீ மனோஹாரிணியை மணக்க இங்கே வந்துவிட்டாலும் உன் பின்னாலேயே நாங்களும் வந்துவிட்டோம் கண்டு களிக்க.

புருஷோ :—ப்ரியே! எல்லாம் இத்துறவியின் பேரருள் தான். (சுபுத்தியை நோக்கி) சுபுத்தீ! இம்மஹாத்மாவை வணங்குவோம் வா.

[இருவரும் நமஸ்கரிக்கின்றனர்.]

துறவி :—சாந்தி யுண்டாவதாக! அரசே! எழுந்திருப்பாய். நீ புருஷோத்தமனே. எந்தப் புருஷன் சுபுத்தி கூறும் வண்ணம் நடக்கின்றானோ அவன் எல்லா நன்மைகளையும் பெறுவான். இது யாவருக்கும் அனுபவமே. என் அருளென்ன?

ஸுபுத்தி :—ஸ்வாமீ! புத்திக்கு அதீதமான ஒன்றை அது எப்படிக் கூறும்?

துறவி :—ஊஹித்துக் கூறுவது அதற்கு ஸஹஜமே. மேலும் அபேத சாஸ்திரத்தினால் சிக்ஷிக்கப்பட்ட புத்தியை யுடைய புருஷனுக்கு எல்லா நன்மைகளும் சித்திக்குமென்பதில் என்ன தடை?

ஹரிஹர சாஸ்திரி :—ஸ்வாமீ! தங்களைப் போன்ற ஜீவன் முத்த புருஷர்களின் அனுபவங்களைக் கொண்டன்றோ அபேத சாஸ்திரங்கள் சிக்ஷிக்கின்றன?

துறவி :—சரி அப்படியே யிருக்கட்டும். மேலே நடக்க வேண்டியவைகளைப் பற்றி யோசியுங்கள்.

ஞான :—ஸ்வாமீ! மேலே நடக்க வேண்டியது நடப்பதற்கு முன்னர் சிலவற்றை யான் தங்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

ஹரிஹர :—அப்பா ஞானப்பிரகாசா! மேலே நடக்கவேண்டிய வைகள் என்னவென் றறிந்தாய்?

ஞான :—ஸ்வாமீ! நான் அறிந்தவை இவை யென்றும், அறிய விரும்புவது இவை யென்றும் தாங்கள் அறிந்தே யிருக்கிறீர்கள்.

துறவி :—அப்பா ஞானப்பிரகாசா! நீ என்னிடத்தில் எவ் விஷயங்களை யறிய விரும்புகிறுயோ அவற்றை ஹரிஹர சாஸ்திரிகளிடத்திலேயே நன்ருய் அறியலாம். நீயறிய விரும்புவது ராஜ்ய பரிபாலன தர்மங்கள் தானே. அவைகளை அவரே நன்கு உபதேசிப்பார்.

ஹரிஹர :—ஸ்வாமீ! தாங்களே உபதேசித் தருள்வீராக.

துறவி :—அப்படியா? ஆனல் சரி!

[என்று கூறிக்கொண்டே தன் உருவத்தை மறைத்து விட்டார். யாவரும் திகைத்துப் பார்க்கின்ருர்கள். ஆகாயத்தில் மயில்வாஹன ரூடராய் வள்ளி தேவஸேனை சமேதராய்த் தோன்றுகின்ருர். யாவரும் பார்த்துத் திகைப்புற்று அடியற்ற மரம் போல் விழுந்து நமஸ்கரித்து நிற்கிருர்கள். ஹரிஹர சாஸ்திரிகள் முதலிய யாவரும் துதிக்கின்ருர்கள்.]

ஹரிஹர :—

இரவியும் மதியும் வானும் வாயுவு மனலு மப்பும்
உரவிய மண்ணும் மற்றை யுணர்பவன் தானுமாகிப்
பரவிடுங் கரணம் பன்னுன் காயுமன் ருகி நின்றே
யுரைமன மிறந்து ளோங்கு மொளியினை வணங்கல் செய்வாம்.

தர்மசீலர் :—

ஞானமா யின்ப மேயா யநந்தமா யொன்ருய் நின்ருன்
தானலா மாயை யாலே தறிநின்ற கள்வன் போல
ஈனமாம் சராசரங்க ளாயவிவ் வுலகந் தானே
ஆனவிவ் வீசன்பாத மழகுறச் சென்னி வைப்பாம்.

புருஷோத்தமன் :—

திருவுருவாய் வந்தருளைப் பொழியும் பாதம்
திசைமுகன்மா லறிவரிய செய்ய பாதம்
கருவுறுமுற் பவங்கடியுங் கமல பாதம்
கரையறுசிற் சுகமதுவாய்க் கமழும் பாதம்
உரையுணர்வைக் கழியமிகுத் துணரும் பாதம்
உலகுயிர்தற் பரமாகி யொழிவில் பாதம்
தெருள்புரிநற் குருகுகனர் செய்ய பாதம்
தீவினையேன் சென்னியினிற் றிகழும் பாதம்.

ஸுகுமாரன் :—

ஆதியாய் அநாதியாகி யந்தமா யநந்த மாகிச்
சோதியாய் இருளுமாகித் தொந்தமாய்த் தொந்தமில்லா
நீதியாய் நினைந்ததாகி நினைவரி தென்று வேதம்
ஓதிய பரமாநந்த வொளியினை யுளத்துள் வைப்பாம்.

ஸுபுத்தி :—

ஊனுமாய் உயிருமாகி யுருவமாய் அருவமாகி
வானுமாய் மறையுமாகி மதியுமாய் மதிகள் தோறும்
தேனுமாய் அமுதமாகித் திகழு நற்சொருப மெய்யாய்
ஏனைய முழுதும் உண்ட இறைவனென் அகத்துளானே

விவேகசர்மா :—

என்று மோர் தன்மையாகும் எழிலறி வுருவதாகிப்
பொன்று பூதாதி யுந்தானுகியே யுரையொன்றின்றி
நின்றபே ரின்பநாத னிலவுகான் குறத்தி கேள்வன்
பொன்திகழ் தாமரைத்தாள் பொலிவுறச் சென்னி வைப்பாம்.

குணசீலன் :—

ஐவகைப் பொருளு நான்கு கரணமுங் குணங்கள் மூன்றும்!
செய்வினை யிரண்டு மொன்றி யாவரும் திகைப்ப நின்ற
பொய்யிரு ளகலஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள்
கைவளர் ஞானவேலன் கந்தனைக் கருத்துள் வைப்பாம்.

ஞானப்பிரகாசன் :—

வேளே! குகனே! விமலா! வன்பர்
கேளே! கயிலைக் கிரியமர் தேவே!
அருவமு முருவமும் அருவுரு வின்றிச்
சருவமுந் தானுய்த் தழைத்தவா போற்றி!
ஆதியு மிடையும் அந்தமு மில்லாச்
சோதியாத் திகழுந் தூயனே போற்றி!
அறுமீன் மங்கையர் அருமையாய் வளர்த்த
சிறுசேய் குமரத் தேசிகா போற்றி!
குணப்பொற் குன்றே! குமரா! வென்றன்
ஐம்புலப் பகைவரை யறவே வொழித்துத்
தன்வழிக் கொண்ட மின்னயிற் கரனே!
பரமா நந்தத் திருமா மணி! நின்
வளமலி சேவடி வழுத்தி
யுளமதிற் பெரிது முற்றனன் அன்பே!
தானே வணங்குமென் சென்னியென் னுவுனைச்

சாற்று தொறு

மூனே யுருகு முரோமஞ் சிலிர்க்கு முகுமென் கண்ணீர்
நானேது மொன்று மறிகின்றி லேன்வெறு ஞானகனத்
தேனே குருகுஹ வாநந்த நீதந்த செல்வத்தையே!

[மனோஹாரிணி ஞானப் பிரகாசனுக்கும், விலாஸமுகி குணசீலனுக்கும் மண மாலை சூட்டு கின்றனர். ஹரிஹர சாஸ்திரிகளும் தர்மசீலரும் ஆசீர்வதிக்கின்றார்கள். ஆகாயத்தில் தேவதுந்துபி முழங்குகின்றது. மலர்மாரி பொழிகின்றது.]

மங்கலவரம்

ஞானப்பிரகாசன் :—

மையலொன்றற மன்னுநற் சிவத்தினை
மலர்க்கையா மலகம் போல்
ஐய நீ யெனக்கருளிய பெரு நலம்
யாவரும் பெற வேண்டும்
செய்யமாமறை முனிவருந் தேவரும்
தெரிப்பதற் கரிதாய
மெய்யர் மெய்ய நற் குகசிவ தேசிக
வேண்டிய வரமீதே.

சிவம்

ஞானப்பிரகாசம் முற்றிற்று.

ஸ்ரீபிரஹ்ம வித்யா விமர்சினீ ஸபை

178, லாயிட்ஸ் ரோட், ராயப்பேட்டை, சென்னை.

ஸ்ரீவித்யா (தேவீ) உபாஸனுஸம்பந்தமான கிரந்தங்கள் :-

ஆசிரியர், அருட்கவி, பிரஹ்மஸ்ரீ

ந. சுப்பிரமணிய அய்யர் அவர்களால்

இயற்றப்பட்டவை.

1. ஸ்ரீ நகர விமர்சம் (தமிழ்)

ஸ்ரீ துர்வாஸ மஹார்ஷியவர்களால் இயற்றப்பட்ட ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்தினமென்னும் அரிய ஸ்தோத்திரமும் அதற்குத் தமிழுரையும் கூடியது. ஸ்ரீநகரத்தின் 25 கோட்டைகள் ஸ்ரீ சக்கிரம் முதலிய படங்களுடையது.

விலை ரூ. 0-12-0

2. ஸ்ரீ குருதத்துவ விமர்சம் (தமிழ்)

இச்சிறு நூல், குருதத்வமே எல்லாத் தத்துவங்களை விடச் சிறந்தது என்பதையும், பாரமார்த்திக குருவின் ஸ்வரூபத்தையும், முமுக்ஷுக்களுக்குக் குருபரம்பரையின் ஞானம் அத்யாவஶ்யமென்பதையும், குருவை யெங்ஙனம் தியானிக்க வேண்டுமென்பதையும் நன்கு விளக்குகின்றது.

விலை ரூ. 0-5-0

3. ஸ்ரீ வரிவஸ்யா ரஹஸ்யம்

(தேவநாகர மூலமும், தமிழ் விரிவுரையும்)

இது, வடமொழியில் ஸ்ரீ பாஸ்கர ராயரால் இயற்றப்பட்ட ஒரொப்பற்ற நூல். அநேக மந்த்ர சாஸ்திர ரஹஸ்யங்

களையுள்ளடக்கிக் கொண்டு விளங்குவது. இது ஸ்ரீ வித்யோ பாஸனையின் பிராண ரூபமானது. இதில் பஞ்சதசியின் அர்த் தம் பதினைந்து பிரகாரங்களாகக் கூறப்பட்டுள்ளது.

விலை ரூ. 1-0-0

4. ஸ்ரீ வித்யா ஸபர்யா பத்ததி.

தேவநாகரலிபியில் அச்சிடப்பட்டுள்ளது:

இதில், ஸ்ரீ சக்கிர நவாவரண பூஜா விதானம், ஹோமம், ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம், ஆஸ்சர்யாஷ்டோத்தரம், ஸ்ரீலலி தாத்ரிசதீ, ஸூக்தங்கள், தேவீ உபநிஷத்துக்கள் முதலிய வைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பல சாஸ்திரங்களிலுள்ள பல பத்ததிகளினின்றும் பல அரிய விஷயங்கள் திரட்டப் பட்டு இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இது வரையில் இத்தகைய நூல் அச்சுக்கு வரவில்லை யென்பது வாங்கிப் பார்த்தால்தான் தெரியும்.

சுமார் 20 படங்களோடு உயர்ந்த கிளேஸ் பேபரில் அச்சிடப்பட்டுள்ளது.

சாதா பைண்டு		ரூ. 2-0-0
காலிகோ பைண்டு		ரூ. 2-8-0
ஷை	காலிகோ	ரூ. 3-8-0

5. ஸ்ரீமநீஷாபஞ்சகம். - (வேதாந்தம்)

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யாரால் இயற்றப்பட்ட மூலமும் அதற்குத் தமிழ் விருத்தியுரையும். மூலம் கிரந்த எழுத்திலும் தமிழிலும் உள்ளது. மூலஸ்லோகத்திற்குச் சரியான தமிழ்ப்பாட்டுக்களோடுங் கூடியது. இச்சிறு நூல், அத்வைத வேதாந்தத்தை மிக வெளிதாய்க் கரதலாமலகம்போல் காட்டியுணர்த்துவதாயுள்ளது. சாஸ்த்ரீயமான பதங்களை விளக்கும் அநுபந்தத்தோடும் விளங்குவது. கொஞ்ச காபிகளேயுள்ளன.

விலை ரூ. 0-5-0

6. மத்தியம வியாயோகம்.

இது, ஸ்ரீ காளிதாஸருக்கு முன்னிருந்த பாஸ மஹா கவியால் வடமொழியி லியற்றப்பட்டதற்குத் தமிழ்மொழி பெயர்ப்பு. வியாயோகமென்னும் ஒருவகை நாடக வகுப்பிற்கு இது இலக்கியமாயுள்ளது.

விலை ரூ. 0-6-0

7. திருத்தணிகைப் பிரபந்தத் திரட்டு.

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யக் கடவுளின்மீது இயற்றப்பட்ட ஸ்தோத்திரம். முருகன் அருளால் வெளிவந்த பலவகைப் பாக்கள் அடங்கியன.

விலை ரூ. 0-4-0

ஸ்ரீ லலிதாத்ரிசதீ ஸ்தோத்திரம்.

மூலமும், த்ரிசதீ நாமாக்களுக்கு ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் அருளிச்செய்த வடமொழி பாஷ்யத்தைத் தழுவி இயற்றப்பட்ட தமிழ் விருத்தியுரையும். இந்நூல் சித்சக்தியே பரப்பிரஹ்மமென்று கூறும் ஒரொப்பற்ற நூல். இதில் அத்வைத சாஸ்திரத்தின் பல நுட்பமான கருத்துக்கள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இதுவரையில் தமிழில் வெளிவாராதது.

விலை ரூ. 1-0-0

காலஞ்சென்ற, கும்பகோணம்,

பிரஹ்ம ஸ்ரீ G. V. கணேச அய்யர், B.A., B.L.,

அவர்களால் இயற்றப்பட்ட நூல்கள்.

1. மூகபஞ்ச சதீ-ஆர்யாசதகம் (மூலமும் தமிழுரையும்). ரூ. 0-8-0
2. ௸ கடாக்ஷசதகம் ௸ ரூ. 0-8-0
3. ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம், ஸ்ரீ பாஸ்கரராயரது வடமொழிபாஷ்யத்திற்குத் தமிழ் விருத்தியுரை. (சுமார் 1000 பக்கங்கள் உள்ளது). ரூ. 4-0-0

மானேஜர், ஸ்ரீ பிரஹ்ம வித்யா விமர்சினீ ஸபை,

178, லாயிட்ஸ்ரோட், ராயப்பேட்டை, சென்னை.

ஸ்ரீ வித்யோபாஸகர்களுக்கு ஒரு நல்விருந்து.

உபாஸகர்களே!

நன்கு கவனியுங்கள். முந்துங்கள் ஏமாறுதீர்கள்.

அச்சில் உள்ளன :—

1. ஸ்ரீ வித்யா ஸபர்யா வாஸனை : (தமிழ்)

இது, ஸ்ரீ வித்யா ஸபர்யா பத்ததிக்கு ஸஹகாரியாய் விளங்குவதாகும். இதில் ஸ்ரீசக்ர நவாவரண பூஜையின் அந்தரார்த்தம் அநேக பிரகாரங்களாக விமர்சிக்கப்பட்டிருக்கின்றது. ஜீவப் பிரஹ்மைக்கிய ஸ்வரூப பிரஹ்மவித்தையும், ஸ்ரீ வித்தையும் ஒன்றே யென உள்ளங்கை நெல்லிக் கனி போல் போதிக்கும் இத்தகைய நூல், இது காறும், எங்கும், எந்த பாஷையிலும் அச்சிட்டுப் பிரசுரிக்கப்படவில்லை யென்பது வாசகர்களே கண்டறியவேண்டிய விஷயமாகும். இதைச் சமாதான மனத்தோடு ஊன்றி வாசித்துணரின் மனத்தின் விருத்திகளெல்லாம் ஒழிந்து ஏகாக்கிரப்பட்டு ஜீவப்பிரஹ்மைக்கிய ஸாக்ஷாத்கார வடிவ ஸமாதி ஸித்திக்குமென்பது சிதையாத ஸித்தாந்தமாகும்.

2. ஸ்ரீ சக்கிர லகுபூஜா விதானம் :

இதில், சுருக்கமான நித்திய பூஜாக்கிரமமும், நித்தியாந்ஹிகம் அதாவது குருத்தியானம், ரஶ்மிமாலை, மந்த்ர ஸந்தி அவசியமான சில நியாஸங்கள் முதலியனவும், ஸஹஸ்ரநாமம், த்ரிசதீ, அஷ்டோத்தர சதநாமாவளிகளும் அடங்கியுள்ளன. அன்றியும் இதில் ஸங்க்ஷேபமான நவாவரண பூஜையும் கட்கமாலையும் சேர்க்கப்பட்டுள்ளன.

3. ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய தத்துவமும் ஸுப்ரஹ்மண்ய ஆவரண பூஜையும் :

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய தத்துவம் தமிழிலும் ஆவரண பூஜை தேவ நாகரத்திலும் உள்ளன. ஸ்ரீ ஸ்காந்தபுராணம் - சங்கர ஸம்ஹிதையில் பிரதிபாதிக்கப்பட்ட கதா பாகத்தின் அந்தரார்த்தம் இதில் நன்கு விமர்சிக்கப்பட்டுள்ளது. மஹாத்மாக்களின் உபதேச மூலமாய்க் கிடைக்கப் பெற்ற பல ரஹஸ்யங்களோடுகூடி விளங்குவது. இதுவரை வெளிவராத ஓர் ஒப்பற்ற நூல்.

மேற்கூறிய மூன்று நூல்களும் தயாரிக்கப்பட்டு, தற்போது அச்சில் இருக்கின்றன. வேண்டியவர்கள் உடனே தங்கள் பெயர்களை ரிஜிஸ்தர் செய்து, கீழ்க்கண்ட விலாஸத்திற்கு ரூ. 5 மணியார்டர் செய்தனுப்பின், மேற்படி நூல்கள் வெளியான உடன், அவற்றின் விலையில் (⅔) மூன்றில் இரண்டு பாகத்திற்கு அநுப்பப்படும்.

குறிப்பு :—கொஞ்சம் புத்தகங்களே அச்சிடப்போவதால் ஏமாற்றம் நேரிடாதிருக்கச் சீக்கிரம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துக் கொள்ளுதல் அவசியம்.

மானேஜர் —

ஸ்ரீ பிரஹ்ம வித்யாவிமர்சினீ ஸபை

178, லாயிட்ஸ் ரோட், ராயப்பேட்டை,

சென்னை.

The Model Press, G. T., Madras.

Copies can be had from :—

The Manager,

Sri Brahma Vidya Vimarsini Sabha,

178, Lloyds Road,

Royapettah P. O.,

MADRAS.